www.tamilarangam.net

# எரிமலை

மார்ச் 2001



விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த நீடிப்பு;
அரசின் பொய்த்துப்போன பிரச்சாரங்கள்!



## படைத்திரளின் தடை உடையும்



## மண்ணுக்கு பட்ட கடன் தீர்த்த கணங்கள்...



## பலவீனமாகக் கருதப்பட்ட பலங்கள்

## தலைவர் பிரபாகரனின் அதிர்ச்சியூட்டும் நகர்வுகள்.

www.tamilarangam.net




# அக்கினிப்பூக்கள்

எரிமலை பெப்ரவரி இதழ் கிடைத்தது. அகத்தின் அழகு முகத்தில் தெரிந்தது. வண்டியும் ஓர் நாள் ஓடத்தில் ஏறும். ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஓடும் சம்பவங்கள் எமது வாழ்வின் விழுமியங்களில் சரித்திரங் களாகப் பதியப்படுவது கண்கூடு.
சுயநலவாதிகளின் கூட்டுக்கள் எம்மின எழுச்சியின் முன்னே வெறும் வெத்து வேட்டுக்களே. எரிமலையின் உட்பொருள் கள் அனைத்துமே எம் தேசத்து யதார்த்த நிலையைச் சுட்டிநிற்கின்றன. இதழின் தரம், கருத்தின் ஆழம், அதன் அகலம் யாவும் அற்புதம். விடுதலை கோரி நிற்கும் எம் இனத்தின் ஒட்டுமொத்த வெடிப்புத் தான் எரிமலை என்றால் மிகையாகாது.

**முல்லை வாசன்**
**வெரிசெல்லி– இத்தாலி.**

✉ ✉ ✉

நான் கடைசியாக வாசித்தது நவம்பர் 2000ஆம் ஆண்டு இதழாகும். ஓயாத அலை கள்-3 போரியல் நிகழ்வை 98வண்ணப் புகைப்படங்களுடன் வெளிவந்த நிகழ்வா னது வரலாற்றுச் சிறப்புடையதாகும். சிங்க ளப் பயங்கரவாத அரசின் வெங்கொடு மையை இனியும் தாங்கமுடியாது, தமிழர் களின் தாயகவிடுதலையை சுதந்திர அபிலா சைகளை அந்த உயர்ந்த இலட்சிய தாகத் தை நெஞ்சில் சுமந்து களமாடி தம்மை மண்ணிற்கு விதையாக்கிக் கொண்டு வீர வேங்கைகளின் கல்லறைகளுக்கு எமது நெஞ்சத்தின் அடித்தளத்திலிருந்து எழும் உணர்ச்சிகளை கண்ணீர் அஞ்சலியாக, மலர் அஞ்சலியாகக் காணிக்கையாக்குகின் றேன். சிங்கள ஆக்கிரமிப்பை உடைத்து யுத்தகளத்திலே செயற்கரிய சாதனை களை நிகழ்த்தி, வெற்றி மேல் வெற்றிகளைப் படைத்து புதிய புறநானூற்றைப் படைத்துக் கொண்டுள்ள தம்பி தங்கைகளுக்கு மன மார்ந்த பாராட்டுக்கள்.

**இரா.சண்முகநாதன்**
**சென்னை– தமிழ்நாடு**

நான் கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டவன். நான் நெதர்லாந்திற்கு வந்த நாள் முதல் எரிமலை சஞ்சிகையை வாசித்து வருகின்றேன். தாயகத்திற்காகப் போராடும் தமிழனின் விடாமுயற்சி கண்டு பெருமைப் படுகின்றேன். நான் கொழும்பில் இருக்கும் போது போராட்டத்தின் கருத்தைத் தெரிந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இங்கு வந்தபிறகுதான் என்னால் போராளி களின் தியாகம், கடமை கண்ணியம் கட்டுப் பாடு பற்றிய பிடிப்பைப் புரிந்து கொண் டேன். எரிமலை எனக்கு என்னை அடை யாளம் காட்ட உதவியது.

**விக்கினேஸ்**
**எற்றன் லுவர்–நெதர்லாந்து**

✉ ✉ ✉

எரிமலைக்கு எமது பலகோடி வாழ்த் துக்கள்.
எமது நண்பர் ஒருவர் மூலம் எரிமலை நவம்பர் (2000) இதழைப் பார்த்தேன். நாங்கள் இதுவரை அறிந்திராத பல செய்திகளை வெளியிட்டிருந்தீர்கள். பார்ப்பதற்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. குறிப்பாக எமது தேசியத் தலைவர், மாவீரர் நாளையிட்டு ஆற்றிய உரை அனைத்தையும் எரிமலை மூலம் அறிந்து கொண்டோம். அதுமட்டு மல்ல எரிமலை மூலம் தமிழினத்தின் அனைத் துச் செய்திகளையும் அறிந்து கொண்டோம்.

**கே.செல்வா.**
**டோகா– கட்டார்.**

✉ ✉ ✉

தமிழ்மான ஏடான எரிமலையின் மூலம் ஈழத்தமிழரின் வீரத்தையும், சாதனைகளை யும் உலகத்திற்காக படம் பிடித்துக் காட்டும் தங்கள் ஊடகத்திற்கு நன்றி! தாய் மண்ணிற் காகப் போராடும் போராளிகளின் வீரத்தை எவ்வாறு போற்றுவது!
தமிழர்கள் அனைவரும் புலிக்கொடியின் நிழலில் புனித வாழ்க்கை நடத்தும் நாள் வெகு தொலைவில் இல்லை என்ற உண்மை உலகிற்கு விரைவில் நன்கு புரியும்.

**ப.சண்முகம்**
**பெரம்பலூர் மாவட்டம்–தமிழ்நாடு**

நவம்பர் மாத எரிமலை கிடைக்கப் பெற் றேன். ஓயாத அலைகள் நிழற்படத் தொகுப்பு பிரமாதமாக இருந்தது.
ஆங்கிலேய அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடையைக் கொண்டு வந்திருப்பது சிங்கள அரசிற்குத் துணைபோகும் காட்டு மிராண்டிச் செயலாகும். எமது போராட்டம் வெல்லும். எமது புலிகள் விரைவில் தமிழீழம் அமைப்பார்கள்.

**மே.வி.புலிக்குமார்**
**சேலம்– தமிழ்நாடு**

✉ ✉ ✉

ஈழத்தமிழர்களின் உண்மை நிலை சம்மந்தமாக தமிழகத்தில் எந்தச் செய்தி யூடகங்களும் உண்மைச் செய்திகளை வெளியிடுவதில்லை. இந்தச் சூழ்நிலையில் தான் கடும் சூரிய வெப்பத்திற்கு நடுவில் ஒரு பசுமரத்தின் நிழல் கிடைத்ததுபோல எரிமலை எமக்குக் கிடைத்துள்ளது. உள்ளது உள்ளபடி சிங்களப்படையின் தோல்வி, ஈழவிடுதலைப் போர்ச் செய்திகள், மக்கள் படும் துன்பங்கள் ஆகியவை எரிமலைக் குழம்பு வெடித்துச் சிதறுவதுபோல செய்திகளை உலகிற்கு வெளியிடுகிறது.

கோப.சிற்றரசு
நெய்வேலி– தமிழ்நாடு

✉ ✉ ✉

எரிமலை நவம்பர் இதழ் கிடைக்கப் பெற்றேன். அதன் ஒவ்வொரு பக்கத்தை யும் ஊன்றிப் படிக்க உள்ளேன். அதே சமயம் நிழற்படத் தொகுப்பானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆவணப் பெட்டகமாகும். ஒவ்வொரு தமிழீழ விடுதலை ஆதரவாளர் கைகளிலும் இருக்க வேண்டிய தொகுப்பு. எனது பெற்றோருக்குப் படிக்கத் தெரியாது. இருந்தாலும் நிழற்படத் தொகுப் பைப் பார்த்து தமிழீழத்தில் நடக்கும் நிகழ்வு களைப் புரிந்து கொண்டார்கள். நிழற்படத் தொகுப்பிற்கு மூலமான நிழற்படங்களை பிரசவித்த களமுனைப் போராளிகளுக்கு எமது வீரஞ்செறிந்த பாராட்டுக்கள்.
ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டமும் அதன் இலக்கியப்பதிகையும் என்ற தலைப் பில் கட்டுரை படிக்கும்போது மகிழ்ச்சியாக உள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டக் காலத்து இலக்கியங்களை அவசியம் நாங்கள் பதிவு செய்யவேண்டும்.

**இ.சி.இராமச்சந்திரன்**
**ஈரோடு–தமிழ்நாடு**


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எரிமலை

மார்ச் 2001

# உள்ளே...

## கட்டுரை


| | |
|---|---|
| தலைவர் பிரபாகரனின் அதிர்ச்சியூட்டும் நகர்வுகள் | பக்கம் - 4 |
| படை திரளின் தடை உடையும் | பக்கம் - 11 |
| மார்ச் 8 சம்பிரதாயங்களைக் கடந்து... | பக்கம் - 12 |
| விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த நீடிப்பு ... | பக்கம் - 14 |
| மண்ணுக்குப் பட்டகடன் தீர்த்த கணங்கள் | பக்கம் - 16 |
| மின்டானோ | பக்கம் - 20 |
| வன்னிப் படைப்பாளிகளின் படைப்பு முதிர்ச்சி | பக்கம் - 22 |
| அடைகாத்த வனமும் அலை எழுந்த விதமும் | பக்கம் - 24 |
| பலவீனமாகப் கருதப்பட்ட பலங்கள் | பக்கம் - 26 |
| சிங்களத்திற் சிக்கிச் சீரழிந்த...... | பக்கம் - 28 |
| படுகளம் | பக்கம் - 34 |
| அடைந்த இராணுவத் தோல்விக்கு அரசின் சமன் செய்யும் முயற்சி | பக்கம் - 38 |
| வில்லுக்குளத்துப் பறவை | பக்கம் - 40 |
| பொங்கு தமிழ் மங்காதிருக்க | பக்கம் - 42 |


## அணையாத தீபங்கள்


| | |
|---|---|
| லெப்.கேணல் ரவி | பக்கம் - 50 |


## சிறுகதை


| | |
|---|---|
| தேங்காய்ச்சொட்டு- ந. மயூரரூபன் | பக்கம் - 36 |
| இரை- செம்பருத்தி | பக்கம் - 44 |


## கவிதை


| | |
|---|---|
| ஒளி நிழல் தேடும் என் நம்பிக்கைக் காத்திருப்பு- அம்புலி | பக்கம் - 9 |
| தமிழீழப் பெண்கள் பெரும்புயல்கள்- யோ.புரட்சி | பக்கம் - 10 |
| ஸ்ருப்பிட்- ஆருத்திரா | பக்கம் - 39 |


## தொகுப்பு


| | |
|---|---|
| பதிவுகள் | பக்கம் - 48 |
| மீள்பார்வை பெப்ரவரி | பக்கம் - 51 |
| கண்கள் கூறும் வார்த்தைகள் | பக்கம் - 52 |




**18** புலிகள் இயக்கம் மீதான பிரிட்டனின் தடை...





**30** சமாதானத்திற்கான யுத்தம் வளர்த்த இனவாத சக்தி...


**46** காலம் உருவாக்கிய காலத்தை வென்ற பெண் ஜோன் ஒவ் ஆர்க்






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை.

நாம் ஒன்றை மட்டும் தெட்டத் தெளிவாகக் கூற விரும்புகிறோம். எந்தச் சூழ் நிலையிலும் நாம் போராட் டத்தை ஒத்திப்போட முடியாது. போராட்டத்திலிருந்து ஒதுங்கி காலம் கனியும் என்று காத்தி ருக்கவும் முடியாது. நாம் தொடர்ந்து போராடியே தீரு வோம். போராட்டத்தைத் தொடர்ந்து தீவிரமாக்குவோம். எதிரி இராணுவத்திற்குத் தகு ந்த பதிலடி கொடுத்து அதன் முதுகெலும்பை முறித்துவிடு வதைத் தவிர இந்தச் சூழ் நிலையில் எமக்கு வேறெந்த வழியுமில்லை.



எதிரியை எமது மண்ணிலிருந்து விரட்டியடித்து எமது மக்களின் சுதந்திரத்தை வென்றெடுப்பதாயின் நாம் போராடியே தீர வேண்டும்.

போர்க்களத்தில் குதியுங்கள், எமது பொது எதிரிக்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவோம். உண்மையான ஒருமைப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான முயற்சிகளையும் மேற்கொள்வோம். நாம் தோளோடு தோள் நின்று போராடும்போது எமது மக்களும் எம்மோடு அணிதிரள்வார்கள். முழுத்தேசமுமே எமக்குப் பக்கபலமாக நிற்கும். எமது ஒன்றுதிரண்ட பலத்தைக் கண்டு எதிரி நடுக்கம் கொள்வான். நாம் களத்தில் ஒன்றிணைந்து போராடினால் எதிரியை எமது தாய்நாட்டிலிருந்து விரட்டியடித்து சுதந்திர தமிழீழம் காண்பது வெகுதூரத்தில் இராது.

எமது அன்பான தமிழ் மக்களே! விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல் பாதை. கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதை. வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி, இரத்தம் சிந்தி தாங்கொணாத துன்பத்தின் பரிசாகப் பெறுவதுதான் சுதந்திரம். சுதந்திரம் இல்லாமல் மனித வாழ்வில் அர்த்தமே இல்லை. நாகரிகம் தோன்றிய காலம்தொட்டு இன்றுவரை சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக ஒடுக்கப்பட்ட மனித சமூகங்கள் போராட்டங்களை நடாத்தி வருகின்றன. யுத்தங்கள் புரிந்து இருக்கின்றன. புரட்சிகள் செய்து இருக்கின்றன. சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகிறது. இந்தச் சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும். தன்மானம் இழந்து தலைகுனிந்து வாழவேண்டும். பயந்து பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும். படிப்படியாக அழிந்து போகவேண்டும். ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை.

- தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

(1984ஆம் ஆண்டு மே மாதம் தமிழீழ மக்களுக்கு விடுத்த செய்தியிலிருந்து)



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தலைவாசல்




கலை பண்பாடு
அரசியல் சமூக ஏடு

★

இருபதாம் ஆண்டு
மார்ச்
2001

திருவள்ளுவர் ஆண்டு 2032

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும்
தொடர்புகட்கு

★

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 01 - 43 58 11 42
Fax: 01 - 43 58 11 91
e.mail:editor@erimalai.com

## எமது தாயகம்

தமிழீழ மக்கள் தமது தாயகம் பற்றிய மிகத்தெளிவான பிரக்ஞையைக் கொண்டவர்களாக உள்ளமையை அவர்களின் அண்மைக்கால எழுச்சிகள் நிரூபித்து வருகின்றன. வரலாற்றுரீதியான தமது தாயகம் பற்றி அவர்கள் தெளிவாக அறிந்து வந்துள்ளனர். காலம் காலமாக சிங்கள இனவாதம் அத்தாயகக் கோட்பாட்டைச் சிதைக்க முற்பட்டமையை அவர்கள் எதிர்த்துப் போராடி வந்துள்ளனர். பல்வேறு காலகட்டங்களில் இடம் பெற்ற பல்வேறு இணக்க முயற்சிகளின் போதெல்லம் தமிழர்களின் தலைமைகள் இதனை தெளிவாக வலியுறுத்தி வந்துள்ளன. இத்தகைய வரலாற்றுத் தொடர்ச்சிகளை புறக்கணித்துவிட்டு யாழ்ப்பாணம் சென்ற சிறீலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் அங்கு தாயகம் கேட்கும் எம்மக்களை தீவிரவாதிகள் என்கின்றார். அவர்களுக்கு தனிநாடு அமைக்கும் உரிமை கிடையாது என்கின்றார். அதனை மறந்துவிடுமாறு ஆலோசனை கூறுகின்றார். எமக்குப் பழக்கப்பட்ட சிங்களப் பேரினவாதத்தின் கொடுங்குரல்களை அந்தத் தூதுவரின் வார்த்தைகளும், உள்ளடக்கமும் எதிரொலித்துள்ளன.

எதன் அடிப்படையில் தமிழர்களின் தாயகம் பற்றிய பொதுஉணர்வை அமெரிக்கத் தூதுவர் தீவிரவாதம் என்கின்றார்? தனது நியாயமற்ற உரைக்கெதிராகப் பொங்கியெழுந்த தமிழ் மக்களிற்கு மற்றுமொரு தடவை பதிலளிக்க முற்பட்டபோதுகூட அவர் எமது மக்களின் தாயகம் பற்றிய பொதுஉணர்வை மதிக்காது பதிலளித்தார்.

புலிகளின் தொடர்ச்சியானதும், சாதகமானதுமான போர்நிறுத்த முயற்சிகள் ஏற்படுத்திக் கொடுத்த இடைவெளிகளினைப் பயன்படுத்தி நோர்வேயின் சிறப்புத் தூதுவர் இணக்கமுயற்சிகளை ஆரம்பிக்க முயன்று வருகின்றார். இந்தக் காலகட்டத்தில் அமெரிக்கத் தூதுவர் இத்தகைய கருத்துக்களை வெளியிட்டமையானது, தமிழர்களின் அரசியல் நியாயங்களைப் பலவீனப்படுத்தும் ஒரு முயற்சியாகவே அமையும் என்பதை பல ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டி எச்சரித்துள்ளனர்.

தமிழர்களுக்கு தாயகம் என ஒன்று கிடையாது எனக்கூறுவதன் மூலமும், சிறீலங்காவை பல்லின நாடு என வாய்ஓயாது வர்ணிப்பதன் மூலமும், தமிழர்களை சிறுபான்மையின மக்கள் என மலினப்படுத்துவதன் மூலமும் பேச்சுவார்த்தை மேசைகளில் தமது பேரினவாத அரசியல் அமைப்பைப் பாதுகாக்க சிங்களம் முற்படுகின்றது. சந்திரிகாவின் புத்திஜீவி நண்பர்கள் இந்த பரப்புரை வித்தைகளுக்கு ஏற்புடைய பல தரப்பட்ட வியாக்கியானங்களை நீண்டகாலமாக விநியோகித்து வருகின்றனர். இதனையே அமெரிக்கத் தூதுவரின் கொள்கை நிராகரிப்பும் எதிரொலிக்கின்றது என்பதை சிங்களப் பேச்சாளர்களான ஜெகன் பெரேரா போன்றோர்கூட ஒப்புக்கொள்கின்றனர். தூதுவர் நடுநிலையாக தனது கருத்துக்களை வெளியிட்டிருக்கலாம் என அவர்கள் கூறுகின்றனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயங்களை தத்தமது அரசியல் - புவியியல் - இராஜதந்திர தட்பவெப்பத்திற்கு ஏற்ப அணுகியே தமது கொள்கை விளக்கங்களை உலக சக்திகள் வகுக்கின்றன என்பதை தமிழ் மக்கள் அறிவர். ஆயினும், எமது வரலாற்றையும் வரலாற்று அனுபவங்களையும் இவர்களால் மாற்றி அமைத்துவிட முடியாது. எம்மை உருவாக்கிய காலத்தின் நியாயங்களிற்கு இவர்களால் பதிலளிக்க முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக மக்களின் பாத்திரத்தை நிராகரித்துவிடும் உரிமையும் - பலமும் இச்சக்திகளுக்குக் கிடையாது. அண்மையில் வவுனியா பல்கலைக்கழக சமூகம் தனது எழுச்சிப் பிரகடனத்தில் கூறியது போன்று தாயகம், சுயநிர்ணய உரிமை, தேசியத் தலைமை என்கின்ற விடயங்களில் தமிழ் மக்கள் தெளிவாக உள்ளனர். அதன் அடிப்படையில் உறுதியோடு செயற்படவும் தமிழ் மக்கள் தயாராக உள்ளனர்.

தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை வெளிக்காட்டும் தேசிய இயக்கமான புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கமாக பட்டியல் இடுவதும், தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை நிராகரிப்பதும் அமெரிக்காவினை சிங்களப் பேரினவாதத்தின் நேசசக்தியாகவே இனம்காட்டியுள்ளது. மேலும், அமெரிக்காவின் உலகளாவிய நடவடிக்கைகள் எப்போதும் அடக்குமுறையாளர்களுக்கு ஆதரவாகவே அமைந்துள்ளது என்கின்ற வரலாற்றுபூர்வமான குற்றச்சாட்டுகள் மீள ஒருமுறை எமது விடயத்தில் உண்மையாகிவருகின்றது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தலை[...] அதிர்[...]



இரண்டாயிரமாம் ஆண்டின் இறுதியிலும், இவ்வாண்டின் ஆரம்பத்திலும் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாரகன் அவர்கள் மேற்கொண்ட சில தீர்மானங்கள் அரசியல் இராஜதந்திர இராணுவ வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தின. ஒன்றன் பின் ஒன்றாக நிகழ்ந்த/வெளிவந்த சம்பவங்கள்/அறிவிப்புக்கள் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் பரபரப்புக்களையும், சுறுசுறுப்பையும் ஏற்படுத்துபவையாக அமைந்தன.

ஓயாத அலைகள்-3 நடவடிக்கை தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களை ஓர் ஆற்றல்மிக்க இராணுவ நிபுணர் என்பதை உலகின் முன் நிரூபணம் செய்தது. இதனை நிராகரிக்க முடியாது உலகமும் ஏற்றுக்கொள்ள வேண்டி வந்தது. அதிலும் குறிப்பாக, இலங்கையில் மிக பலம்பொருந்தியதாகவும் சிறீலங்கா இராணுவத்தின் சிறப்புப்படையணிகள் நிலைகொள்ள வைக்கப்பட்டிருந்ததுமான மிகப்பாதுகாப்பான ஆனையிறவுப் பெரும்படைத் தளத்தை விடுதலைப் புலிகளின் படையணிகள் வெற்றிகொள்வதற்காக தலைவர் பிரபாகரன் அவர்கள் வகுத்த போர் வியூகம் உலகின் புகழ்பூத்த இராணுவத் தளபதிகளுடன் ஒப்பிடும் வகையில் அவரின் புகழை உயர்த்தியது.

ஆனையிறவில் விடுதலைப் புலிகள் பெற்ற வெற்றி, 1954இல் தியன் பியன்பூவில் வியட்நாமியப் போராளிகள் பெற்ற வெற்றிக்கு ஈடாகப் பேசப்படுகின்றது. அதே போன்று, வியட்நாம் போராளிகளின் தளபதியாக இருந்த 'அற்புத ஆற்றல் பெற்றவர்' என வர்ணிக்கப்படும் ஜெனரல் வோநுகியென் கியாப்பிற்கு ஈடாக தலைவர் பிரபாகரன் அவர்களை மதிப்பிடவும் வைத்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பு கெரில்லாப் பாணியிலான தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த காலத்திலேயே தலைவர் பிரபாகரன் அவர்களின் இராணுவ மதிநுட்பம், ஆற்றல் என்பன பற்றிப் பேசப்பட்டது. கடந்த நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்தின் முற்பகுதியில் விடுதலைப் புலிகளின் கெரில்லாப் பாணியிலான தாக்குதல் நடவடிக்கைகள் குறித்து பிரஸ்தாபித்த ஓர் இராணுவ ஆய்வாளர், 'புலிகள் கைக்கொள்ளும் தாக்குதல் பாணி, இராணுவ வரலாற்றுப் புத்தகங்களின் பக்கங்களில் எங்குமே காணப்படுவதாய் இல்லை' எனத் தெரிவித்தார்.

இந்நிலையானது, தலைவர் பிரபாகரனை உலகின் தலைசிறந்த கெரில்லாத் தலைவர்களில் ஒருவரான சேகுவேரா போன்றோருடன் ஒப்பிட்டும், பேசப்படும் நிலைக்குக் கொண்டு வந்தது. அத்தோடு தலைவர் பிரபாகரனின் தளராத முயற்சியும், அவர் தனது இலட்சியத்தில் கொண்டிருந்த பற்றும் அவரை ஒரு செயற்திறன் மிக்க தலைவர் என்ற நிலைக்கு உயர்த்தியது.

அத்தோடு, இத்தசாப்த காலப்பகுதிக்குள்ளேயே கெரில்லா இயக்கம் என்ற நிலையில் இருந்து சக்திவாய்ந்ததொரு மரபுவழிப் படையணியாக விடுதலைப் புலிகளை தலைவர் பிரபாகரன் வளர்த்தெடுத்தார். இதனை 'ஜெயசிக்குறு' நடவடிக்கைக்கு எதிரான தற்காப்புச்சமர் மூலமும், ஓயாத அலைகள் என்னும் வலிந்து தாக்குதல், தொடர் படை நடவடிக்கைகள் மூலமும் அவர் உறுதியும் செய்தார்.

அதிலும் குறிப்பாக, ஓயாத அலைகள்-3 நடவடிக்கை மூலம் வன்னிப் பெருநிலப் பரப்பை இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து மீட்டெடுத்தபோது ஓர் இராணுவ ஆய்வாளர், 'தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் செயற்திறன் வன்னியில் அவரின் படை நடவடிக்கையில் வெளிப்படுத்தப்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வர் பிரபாகரனின்
# சியூட்டும் நகர்வுகள்.

■- ஜெயராஜ், தமிழீழம் -

**தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் ஓர் இராணுவ மேதை என்பதை மட்டுமல்ல அரசியல் - இராஜதந்திரரீதியில் ஓர் ஆற்றல்மிக்கவர் என்பதையும் காலத்திற்குக் காலம் நிருபித்து வருகின்றார்.**

பட்டிருக்கின்றது. குறைந்த வளத்துடன் இவ்வாறானதொரு நடவடிக்கையை மேற்கொள்ளவோ அன்றி நிலப்பரப்பை மீட்கவோ ஒரு தேர்ச்சி பெற்ற அமெரிக்க ஜெனரலால்கூட முடியுமா என்பது கேள்விக்குரியதே' எனத் தலைவர் பிரபாகரனின் திறன் குறித்து வியப்புத் தெரிவித்தார்.

இதேசமயம் தலைவர் பிரபாகரனின் போர் யுக்திகளில் வலிந்து தாக்குதலும், தற்காப்புச் சமரும் மட்டுமல்ல, பின்வாங்குதலும்கூட முழு அளவிலான போர் யுக்தியின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இதனை இராணுவ நிபுணர்கள் சிலர் சுட்டிக்காட்டியும் உள்ளனர். 'விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பின்வாங்கும் உத்தியானது, சிறீலங்கா இராணுவத்திற்கு ஒரு பொறியாகவே அமைந்து வருகின்றது. இராணுவம் செறிவு நிலையில் இருந்து பரந்து விரிந்து செறிவு குறைந்து ஒடுங்கிய நிலைக்கு வரும்போது அவர் வெண்ணெய்க் கட்டியில் (பட்டரில்) கூர்மையான கத்தி எவ்வாறு ஊடுருவுமோ அதே போன்று செயற்பட்டுவிடுகின்றார்' என புலிகளின் பின்வாங்குதல் தந்திரோபாயத்தில் உள்ள அபாயத்தை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இராணுவ நிபுணரான ஜெராட் சால்வியாண்ட் குறிப்பிடுகின்றார்.

இதேசமயம், தலைவர் பிரபாகரன் சில வரலாற்றுப் படிப்பினைகளையும்கூட மாற்றி அமைத்துள்ளார். பொதுவில் நீண்டகாலப் போராட்டம் ஒருவரைச் சலிப்படையச் செய்து, கொள்கையில் இருந்து வழுவச் செய்துவிடும் என்பது வரலாற்றுப் பாடமாகக் கொள்ளப்படுகின்றது. இதனை சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தலைவர் பிரபாகரன் விடயத்திலும் எதிர்பார்த்திருந்தார்.

சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா இந்தியப் பத்திரிகையாளரான அனிதா பிரதாப்பை சுமார் ஏழு வருடங்களிற்கு முன்னர் ஒரு தடவை சந்தித்தபோது, 'எத்திறன் வாய்ந்த கெரில்லாவும் ஒருபோரில் களைப்புறுவான்' என தெரிவித்திருந்தாராம். ஜனாதிபதி சந்திரிகாவின் இவ்வாறான கற்பிதமே அவர் போரைத் தீவிரமாகத் தொடர்ந்தமைக்குக் காரணமாகவும் இருக்கலாம். ஆனால், தலைவர் பிரபாகரன் அவர்கள் சந்திரிகா குமாரதுங்கவின் அக் கற்பிதத்தைப் பொய்யாக்கியுள்ளார். ஒருபுறம் தன்னை ஒரு கெரில்லாப் படையணியின் தலைவர் என்ற நிலையில் இருந்து ஒரு மரபுப்படையணியின் சிறப்புமிக்க தளபதி என்ற நிலைக்கு மாற்றிக் கொண்டுள்ளதோடு, சலிப்படைவதற்கு மாறாக போராட்டத்தில் தனது உறுதிப்பாட்டையும் ஆற்றலையும் வெளிக்காட்டியுள்ளார்.

ஆனால், தலைவர் பிரபாகரன் அவர்கள் ஓர் இராணுவ மேதை என்பது மட்டுமல்ல, அவர் ஓர் அரசியல் இராஜதந்திர காய்நகர்த்தலில் மிகவும் ஆற்றல் பெற்றவர் என்பதையும் அவர் கடந்தகாலத்தில் நிருபணம் செய்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் பெரும்பாலானவை இராணுவம் சார்ந்ததாக இருப்பதினால் அது ஓர் இராணுவம் சார்ந்த அமைப்பு என்ற ரீதியில் சிலர் விமர்சனங்களை முன்வைத்ததும் உண்டு. இதன் காரணமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தை இராணுவரீதியில் நோக்கவும், அணுகவும் பலர் முற்பட்டதும் உண்டு. இதனால், அவமானகரமான தோல்விகளையும், பின்னடைவுகளையும்கூட அவர்கள் சந்திக்க வேண்டி ஏற்பட்டமையும் வரலாறு.

1987ஆம் ஆண்டில் இந்திய-சிறீலங்கா சமாதான உடன்பாடு ஏற்பட்டபோது அவ்வுடன்பாட்டில் திருப்தியற்றிருந்தபோதும் தலைவர் பிரபாகரன் அதற்கு ஒத்துழைப்பதற்கு முடிவெடுத்தார். அரசியல் இராஜதந்திர நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இம்முடிவானது, அன்றைய சூழலில் அவசியமானதாக இருந்தது.

ஆனால், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இந்திய இராணுவத்தின் வருகை மிகப்பெரும் நெருக்

22.04.2000 அன்று ஆனையிறவுப் பெருந்தளம் கைப்பற்றப்பட்ட பின் வெற்றிக்களிப்பில் மக்களும் போராளிகளும்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1987 இல் இந்தியப்படைகளின் தளபதிகளோடு தேசியத் தலைவர்.



1994இல் தேசியத் தலைவரை கத்தோலிக்க ஆயர்கள் சந்தித்தபோது



1995 இல் அரசபடைகளுக்கும் புலிகளுக்கும் இடையே போர்நிறுத்தத்தைக் கண்காணிக்கவென வந்த வெளிநாட்டுப் பிரதிநிதி ஒருவரை வரவேற்கும் தேசியத் தலைவர்

கடியானதொரு காலகட்டத்தை உருவாக்கியிருந்தது. தமிழ் மக்களின் உரிமைப்போரை மழுங்கடித்துவிடவும், அதற்குத் தலைமைதாங்கி நடத்தும் விடுதலைப் புலிகளையும் அதன் தலைவர் பிரபாகரனையும் அழித்தொழித்துவிடுதல் என்ற விடயத்திலும் இந்திய இராணுவம் பகீரதப்பிரயத்தனத்தை மேற்கொண்டிருந்தது.

இந்நிலையில் இந்திய இராணுவத்தை இராணுவரீதியில் எதிர்கொண்டு போராடியது மட்டுமல்ல, அதிசயிக்கத்தக்கதொரு அரசியல்-இராஜதந்திர நகர்வையும் தலைவர் பிரபாகரன் மேற்கொண்டார். சிறீலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளைத் தொடக்கிய தலைவர் பிரபாகரன், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுத்ததோடு, இந்திய இராணுவத்தை இலங்கையில் இருந்து வெளியேற்றுவதற்கான மார்க்கத்தையும் உருவாக்கினார்.

இந்திய இராணுவத்தினருக்கு எதிரான விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டம் இந்திய இராணுவத்தினரின் மத்தியில் சலிப்பையும், சோர்வையும் ஏற்படுத்தி மனத்தளர்ச்சியை ஏற்படுத்தியிருந்த வேளையில், தலைவர் பிரபாகரன் மேற்கொண்ட அரசியல்-இராஜதந்திர நகர்வானது, இந்திய இராணுவத்தை விருந்தினராக அழைத்த சிறீலங்கா அரசைக்கொண்டே அதனை ஆக்கிரமிப்பு இராணுவம் எனக் கூறவைத்தது. இவ் அவமானகரமான இராணுவ-அரசியல் இராஜதந்திரத் தோல்வியை இந்தியாவினால் இன்றுவரை ஜீரணிக்க முடியவில்லை என்றே கூற வேண்டியுள்ளது.

இந்நகர்வானது தலைவர் பிரபாகரனின் அரசியல்-இராஜதந்திர ஆற்றலை உலகின்முன் வெளிப்படுத்திய சம்பவமாக அமைந்தது. இதனை அன்று சிறீலங்காவிற்கான இந்தியத் தூதுவராக இருந்தவரும், இந்திய-சிறீலங்கா சமாதான உடன்பாட்டின் சூத்திரதாரிகளில் ஒருவருமான கே.என். டிக்சிற் காலம் கடந்தாவது ஒப்புக்கொள்ள வேண்டியே வந்தது.

அவர் சுமார் ஒரு தசாப்தத்தின் பின்னர் எழுதிய 'கொழும்புப் பணி' என்னும் நூலில், 'தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் நலனைப் பிரதிபலிக்கும் பலம்பொருந்திய அரசியல்-இராணுவ சக்தியாக எழுச்சி பெற்று நிற்பதற்கு, பிரபாகரனின் தலைமைத்துவம்தான் காரணம்' எனக்குறிப்பிட்டார்.

இது தலைவர் பிரபாகரனுக்கு, அவரைப் பரமவைரியாகக் கொண்டிருந்தவரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பாராட்டு என்றுகூடக் கொள்ளலாம்.

இவ்வாறாக இராணுவ-அரசியல்-இராஜதந்திரரீதியில் தனது ஆற்றலினையும், திறனையும் கடந்த காலத்தில் வெளிப்படுத்தியுள்ள தலைவர் பிரபாகரன் மீண்டும் ஒரு தடவை அரசியல்-இராஜதந்திர ரீதியில் மேற்கொண்ட முக்கியமானதொரு நகர்வே நோர்வேயின் விசேட தூதுவர் திரு. எரிக் சொல்ஹெய்மை கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி வன்னியில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளமையும் அதன்பின்னர் மேற்கொண்ட நடவடிக்கைகளும், அறிவிப்புக்களும் ஆகும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் சர்வதேச மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தத்தயாராக இருப்பதாக காலத்திற்குக் காலம் அறிவித்தபோதும் அரசியல்-இராஜதந்திர வட்டாரங்களில் அவை முக்கியத்துவம் பெறவில்லை. சிங்களப்- பேரினவாத அரசின் பிரச்சாரத்தை அவை நம்பிக்கொண்டிருந்தமையே இதற்குக் காரணமாகும். ஆனால், பெரும் இராணுவ வெற்றிகள் பலவற்றின் பின்னர் தலைவர் பிரபாகரன் இவ்வாறானதொரு முயற்சியில் ஈடுபடுவார் என எவருமே எதிர்பார்க்கவில்லை.

ஏனெனில், யாழ். குடாநாட்டை இராணுவரீதியில் மீட்டெடுக்கும் வரை புலிகள் அரசியல் பேச்சுக்களில் இறங்கமாட்டார்கள் என்றே பலரும் எதிர்பார்த்திருந்தார்கள். இதனால், தலைவர் பிரபாகரன் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்தது மட்டுமல்ல, அதன் பின்னர் நடந்தேறிய நிகழ்வுகளும் அரசியல்-இராஜதந்திர வட்டாரங்களின் எதிர்பார்க்கைக்கு மாறானதாக அதிர்ச்சி ஊட்டுபவையாகவும் இருந்தன.

அதாவது, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களே சமாதானத்திற்கான தொடர் சமிக்ஞைகளை வெளியிட்ட வண்ணம் இருந்தார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்த பின்னர் நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயார் என்ற அறிவிப்பு அவரிடம் இருந்து வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்பும் வெளி யிடப்பட்டது. இவ் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தம் இராணுவ ரீதியில் பாதகமானதாக அமையலாம் எனத் தெரிந்திருந்தும், தலைவர் பிரபாகரன் இராணுவ வெற்றிகளை அரசியல் பேச்சிற்குப் பணயமாக வைக்கும் அளவிற்கு தமது அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

இதனை உலகம் ஓரளவு புரிந்துகொண்டது. தலைவர் பிரபாகரன் அறிவிப்புச் செய்த போர்நிறுத்தத்தை உலகம்-குறிப்பாக மேற்குலகம் வரவேற்றதோடு, விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து தமது நம்பகத் தன்மையையும் வெளியிட்டன.

விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்சமான போர்நிறுத்த மானது, புலிகளின் பலவீனத்தின் வெளிப்பாடு என்றும், புலிகள் தம்மை மீண்டும் பலப்படுத்திக்கொள்ளவும் அணிசேர்த்துக்கொள்ளவுமே இவ்வாறான நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ளனர் என்பதுமான சிறீலங்கா அரசின் பிரச்சாரத்தை உலகம் பெரிதாகப் பொருட்படுத் தவில்லை.

இதனை உணர்த்துமாப் போன்றே அமெரிக்கா உட்பட மேற்குலகம் சிறீலங்கா அரசு யுத்தநிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதோடு, புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல் வேண்டும் என அழுத்தம் கொடுக்கத் தொடங்கின.

அதிலும் குறிப்பாக, விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கர வாத அமைப்புக்களின் பட்டியலிலிட்டுள்ள அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளே விடுதலைப் புலிகளுடன் அரசு யுத்தத்தை நிறுத் திப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என அபிப்பிராயங்களை வெளியிட்டன.

அதாவது, தலைவர் பிரபாகரனின் இவ் அரசியல்- இராஜதந்திர நகர்வானது இனப்பிரச்சினைக்கு சர்வதேச மத்தியஸ்தத்துடன் ஓர் அரசியல் தீர்வைக்காணும் சந்தர்ப்பத்தை சர்வதேச உலகிற்கு வழங்கியுள்ள அதேவேளை, விடுதலைப் புலிகள் குறித்து சிறீலங்கா அரசு மேற்கொண்டுவரும் பிரச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்ப தாகவும் அமைந்தது.

இது ஒருவகையில் சிறீலங்கா அரசு மீது தலைவர் பிரபாகரன் தனது அரசியல்-இராஜதந்திரரீதியிலான அணுகுமுறை மூலம் கொடுத் துள்ள அழுத்தத்தின் வெளிப்பாடு என்றே கூறலாம். அதாவது, இராணு வரீதியில் மட்டுமல்ல அரசியல்-இராஜதந்திரரீதியிலும் சிறீலங்கா அரசு மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் வகையில் செயற்பட முடியும் என்பதனை தலைவர் பிரபாகரன் வெளிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தற்பொழுது தலைவர் பிரபாகரன் மேற்கொண் டுள்ள அரசியல்-இராஜதந்திர நடவடிக்கைகள் மேற்குலகத்தவரின் இன்றைய உலகம் நோக்கிய பார்வைக்கு ஓரளவிற்கு அனுசரணை யானதாகக் காணப்படலாம். இதனாலேயே அவர்கள் புலிகளின் அர சியல் முயற்சிகளுக்கு வரவேற்பு அளித்தும் இருக்கலாம். இருப் பினும், சிங்களப் பேரினவாதத்தைத் திருப்திப்படுத்தும் நீதியற்ற நடவடிக்கைகளும், தமிழ்த்தேசிய இனத்தைச் சிதைக்கும் சிங்களப் பேரினவாதத்தின் நோக்கத்தை நிறைவுசெய்யும் வகையிலும் மேற் குலகம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாயின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா இழைத்த தவறையே அவையும் இழைத்த தாக இருக்கும்.

ஏனெனில், தமிழ் மக்களின் போராட்டமானது, ஒடுக்கப்படும் இனத்தின் உரிமைக்கானதாகும். இதற்குத் தலைவர் பிரபாகரன் அவர் கள் தலைமைத்துவத்தை வழங்கி முன்னெடுத்துச் செல்கின்றார். இதனை சிறீலங்கா அரசோ அன்றி வேறு எவருமே தமது விருப்பிற்கு ஏற்றபடி பயங்கரவாதம் எனக் கூறி முத்திரை குத்த முனைவதினால் போராட்டத்தை மக்கள் கைவிடப்போவதோ அன்றி தலைவர் பிரபா கரனுக்கு வழங்கும் ஒத்துழைப்பையோ கைவிட்டுவிடப் போவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இந்திய இராணுவம் பெரும் அழுத்தத்தைப் பிரயோகித்தபோது, தமிழ்மக்கள் வழங்கிய அர்ப்பணிப்புடன்கூடிய பெரும் ஆதரவே அவரை உறுதியாகப்



01.11.2000 அன்று தமிழீழத் தேசியத் தலைவரை நோர்வேயின் சிறப்புப் பிரதிநிதி திரு. எரிக் சொல்ஹெய்ம் சந்தித்தார்.



சிங்கள அரச பயங்கரவாதத்தால் பெற்றோரை இழந்த சிறுமிகளைப் பராமரிக்கும் இல்லமான செஞ்சோலையில் தேசியத் தலைவர்



பெற்றோரை இழந்த சிறுவர்களின் காப்பகமான காந்தரூபன் அறிவுச்சோலையில் தேசியத் தலைவர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1991 இல் தனியரசிற்கான நிர்வாகக் கட்டமைப்புக்களில் ஒன்றான தமிழீழக் காவல்துறையின் அணிவகுப்பை ஏற்றுக்கொள்ளும் தேசியத் தலைவரவர்கள்



1992இல் கலைஞர் ஒருவரைக் கௌரவிக்கும் தேசியத் தலைவர்



மறைந்த தமிழக முதல்வர் திரு. எம்.ஜீ.இராமச்சந்திரனுடன் தமிழீழத் தேசியத் தலைவர்

போராட்டத்தைத் தொடரவும், அதன்பின்னர் தன்னை வளர்த்தெடுத்துக் கொள்ளவும் காரணமாகியது. அதாவது, இந்திய அரசு சிறீலங்கா அரசினதும், சில ஆலோசகர்களதும் தவறான கருத்துக்களுக்குச் செவிமடுத்ததன் விளைவே, அது பெரும் இராணுவ-இராஜதந்திர அரசியல் தோல்வியைத் தழுவ வேண்டிய நிலையை உருவாக்கியது.

இவ்வாறான மக்களின் உளப்பூர்வமான ஆதரவு தற்பொழுதும் விடுதலைப் புலிகளுக்கு உண்டு என்பதைத் தற்போதைய நிகழ்வுகளும் நிருபிப்பதாகவே உள்ளன. அதாவது, விடுதலைப் புலிகளின் தற்போதைய அரசியல் நிலைப்பாட்டிற்கும், விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடைசெய்தல்கூடாது என்ற கோரிக்கைக்கும் தமிழ் மக்கள் ஏகோபித்தரீதியில் வழங்கிவரும் ஆதரவு ஒன்றே தமது பிரதிநிதியாக விடுதலைப் புலிகளையே தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதையும், தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் தலைமைத்துவத்தில் பூரண நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதையும் வெளிப்படுத்தப்போதுமானதாகும்.

தமிழ்ச்சமூகம் தேசியத் தலைவர் பிரபாகரன் மீது இவ்வாறான பற்றுறுதியும், நம்பிக்கையும் கொண்டிருப்பதானது, ஏதோவொரு மாயையின் பாற்பட்டதல்ல. இலங்கையில் தமிழ்த்தேசிய இனத்தின் பாதுகாப்பிற்கும், வாழ்விற்கும் சிங்களப் பேரினவாதத்தின் இன அழிப்பு நடவடிக்கையில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் ஆற்றல், திறன் என்பவை அவரிடம் மட்டுமே உள்ளது என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே ஆகும். அத்தனை தூரம் தலைவர் பிரபாகரனின் இலட்சியப்பற்றில் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

மக்களின் இந்நம்பிக்கைக்கு ஏற்றவகையில் தலைவர் பிரபாகரனும் நடந்துகொண்டுள்ளார். எத்தகைய அரசியல்-இராஜதந்திர முயற்சிகளில் அவர் ஈடுபட்டபோதும் அதற்கு இடமளிக்கும்போதும் மட்டுமல்ல, எத்தகைய இராணுவ அச்சுறுத்தலுக்கு உள்ளாகிய போதும் தமிழ் மக்களின் உரிமை என்ற ரீதியில் அவர் எத்தகைய விட்டுக்கொடுப்புகளிற்கும் தயாராக இருக்கவில்லை. இதற்கென அவர் தனது உயிரையே அர்ப்பணிப்புச் செய்யக்கூடிய தீர்மானங்களை மேற்கொள்ளவும் அவர் தயங்கியதில்லை. இதற்கு இந்திய இராணுவத்துடன் யுத்தத்தைத் தொடங்குவது என அவர் எடுத்த தீர்மானமே போதுமான எடுத்துக்காட்டாகும்.

தலைவர் பிரபாகரனின் இவ் உறுதியையும், இலட்சியப் பற்றையும் அவரை விரும்பாதவர்களால்கூட நிராகரித்துவிட முடியவில்லை. இந்தவகையில் தலைவர் பிரபாகரன் குறித்து கொழும்பிற்கான முன்னாள் இந்தியத் தூதுவர் கே.என்.டிக்சிற் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'அவர் கட்டுப்பாடு உடைய ஒழுக்க சீலர், எளிமையானவர், ஈழத்தமிழ் மக்களின் விடுதலையில் ஆழமான பற்றுறுதி கொண்டவர். அவர் மீது எத்தகைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டபோதும், அந்த மனிதனிடம் உள்ளீடான இலட்சிய நெருப்பும் கொள்கை உறுதியும் உண்டு'

இதனை மேலும் உறுதிசெய்கின்றார், தலைவர் பிரபாகரனை நன்கு உணர்ந்துகொண்டவரான பத்திரிகையாளர் அனிதா பிரதாப். அவர் தலைவர் பிரபாகரன் பற்றிக் குறிப்பிடுகையில், 'அவரது ஆழப்பதிந்த பேச்சுக்களுக்கு அப்பாற்பட்ட ஈழம் பற்றிய தளர்ச்சியற்ற ஈடுபாடு எனக்கு அவர் பற்றிய ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது' எனக்குறிப்பிடுகின்றார்.

இந்தவகையில் தலைவர் பிரபாகரன் அவர்கள், தம் மக்களுக்காகவும் இனத்திற்காகவும் எத்தகைய தியாகங்களையும், அர்ப்பணிப்புக்களையும் செய்யத்தயாராக உள்ள அதேசமயம், அவர் தம் மக்கள் மீதும் தமிழ் மக்களின் போராட்டத்திலுள்ள தார்மீகரீதியிலான நியாயப்பாடு குறித்தும் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டுள்ளார். இதுவே, அவரை தமிழ் மக்களின் அபிமானத்திற்கும், நம்பிக்கைக்கும் உரிய தேசியத் தலைவர் என்ற நிலைக்கு உயர்த்தியுள்ளது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒளி நிழல் தேடும் என் நம்பிக்கைக் காத்திருப்பு



முட்கம்பிச் சுருள்களால் தளைப்பட்டு
உயிர் கொல்லும் – உறுப்புகளைத் தின்னும்
நச்சு வெடிகளால் புண்பட்டு
பசுமை வளங் கொழிக்கும்
சோலைகள் பாழ்படுத்தப்பட்டு
வெட்ட வெளியாய்
மொட்டை முகமாய்
எறிகணைப் புகைகவிந்த
கோலத்தினனாய்ச் சிறுத்தபோதும்
நான் வருந்தவில்லை.

உன்னதங்கள் புதைந்து
நீரூற்றுகளைச் சுமந்து
கனி வளத்தின் மூலமாய்
காட்சியுற வேண்டிய வயிற்றுள்
யாரென்று இனங்காணமுடியாத
என் புதல்வர்களின்
உக்கிய உடல்களையும்
அவர் உறவுகள்
அழுது வடித்த துயரக் கண்ணீரையும்
சுமந்து
சாக்கிடங்காய்
நான் மாறியபோது
ஆற்றமுடியாது வலித்தேன்.

என் மொழிப் பண்பறியா
வேற்று மாந்தர் ஏறி மிதித்து
அவர் படைக் கலங்களாற் புண்பட்டு
எனது காலம் கட்டுண்டு
கிடந்த போதெல்லாம்
என் புதல்வர்களின் வருகைக்காய்
காவலிருந்தேன்.

அவர்கள் வந்தார்கள்
போர்க்களத்தின் கொடிய வடிவாய்
என் மேனி சிதையச் சிதைய
முன்வந்து முன்வந்து
அங்குலமங்குலமாய் என்னை
அவர்கள் மீட்கத் தொடங்கிய போது
மகிழ்வுற்றேன்.
சாவை வாழ்வாக்கி
பசியையே உணவாக்கி
என் பாலைகளே தம் சோலைகளாய்
பற்றைகளிற் கரந்துறைந்து

பயணம் தொடர்கையில்
ஓராயிரம் சுனைகள்
எனக்குள் பாய்ந்தன.

என் ஆன்மா மகிழ்ந்து
சிலிர்க்கையில்தான்
அந்த அவலம் நடந்தது.
என் மாந்தர்க்கிரங்காத
'மானுடத்தார்'
என்மேனி கிழித்தோர்க்குக்
கரம் கொடுத்தார்
என் வாழ்வு எரித்த வல்லூறுகட்கு
வாழ்வளித்தார்.
அவர்கள் 'புண்ணியத்தால்'
நான் மீண்டும் அவலமுற்றேன்.
கண்டவர்களின் காற்தடங்கள் சுமந்து
மீண்டும் கீழ்மையுற்றுக் கிடக்கின்றேன்
நான்.

ஆயினும்
எனது காத்திருப்புப் பொய்க்காது
என் மடி பிறந்த
சூரியப் புதல்வனின்
ஒளி நிழலில்
நான் இளைப்பாறுங்காலம்
உள்ளத்தே தெரிகின்றது.
அந்தக் காலத்துக்காய்
சிதைவிலிருந்து மீண்டெழுந்து
புன்னகைப்பேன்
ஆகாயத்துளிகளில் சிலிர்த்துப்
பூத்துக் குலுங்குவேன்.
பாலையெனக் கிடந்த
வாழ்வின் தடங்களாறிச்
சோலை வனமாவேன்
காத்திருப்பே என் வாழ்வாயிற்று
கால நூற்றாண்டுகள் தாண்டி
இன்னும் காத்திருப்பே
என் மீதமாயிற்று
மூச்சாயிற்று
நம்பிக்கையாயிற்று.

- அம்புலி -
தமிழீழம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்ப் பெண்கள் சீறும் புயல்கள்

## பெண்ணே !

நேற்று நீ அடிமைப்பெண்- இன்று
அடிமைத் தழை அறுக்கும் வாள்
மனைவி என்றும் துணைவி என்றும்
அடிமை என்றும் சொன்னவர்
அனலாக நீ மாறியதைக் கண்டு
அதிசயங் கொள்கிறார்
தலைவன் பிறந்தான் பகைவன் பயந்தான்
மாற்றான் படையழிக்க
மகளிர் அணி சேர்த்தான்
உலகப் பெண்ணினத்தில் ஒப்பற்ற சாதனை
எம்மண்ணில் நடந்தது
கந்தகப்பொதி சுமந்து கரும்புலியாய்
வெடித்தனர் மகளிர்
கால் கொலுசை தூக்கியெறிந்து
கையில் துப்பாக்கி எடுத்தனர்
தங்கமாலை வேண்டாமென்று நஞ்சுமாலை
தம் கழுத்தில் தாங்கிக் கொண்டார்
ஆண்களைப் போலவே ஆடினர் களம்- ஈழத்தின்
தூண்களாக விளங்கியது மகளிர் பலம்
கனரக ஆயுதம் கையாள்வதிலும்
கண்விழித்து காவல்கடமை செய்வதிலும்
விழித்திருந்து வேவு எடுப்பதிலும் - வீரக்
களமாடி பகைவனை ஜெயிப்பதிலும்
தொலைந்த பெண் உரிமையை தேடுவதிலும்
அழிந்த எம்மண்ணைக் காப்பதிலும்
அரும் பங்காற்றியது மகளிர் அணி
அங்கையற்கண்ணி போல் ஆயினர்
பல பெண்புலிகள்
மங்கையர் வாழ்வையே மாற்றி வைத்தனர்
பொங்கிடும் கடலிலே புயலெனச் சென்றனர்
மங்கிய ஈழத்தில் புது ஒளி ஏற்றினர்
வீட்டிற்கு தீபமேற்றி விருந்தினர்க்கு
உணவளிப்பதா
உன்வேலை பெண்ணே!
விடுதலைக்கு உரமூட்டி வீரம் படைப்பது - தமிழ்
ஈழப்பெண்களின் தவிர்க்கமுடியாத
கடமை அல்லவா!

அழுதழுது திரிந்த வாழ்வு நேற்றுடன் போச்சு
அண்ணன் அணி சேர்ந்து
அன்னியனைக் கொல்வதே உந்தன் பணியாச்சு
உனைப்பெற்றவர் நான்
பெண்ணைப் பெறவில்லை பெரும்புயலைப்
பெற்றேனென்று பெருமைப்பட்டும்
தாய்நிலம் விடிய தங்கையே நிமிர்ந்திடு
மானம் பெரிது அதனால்தான் உயிரை
அதைவிட சிறிதாக எண்ணினோம்
எழுந்து வா
அடுப்பங்கரையில் உறங்கிய வாழ்வு
நேற்று முடிந்தது
அண்ணன் பிரபாவால் கொடுமைகள் சரிந்தது
பெண் என்றால் அடிமையென்ற
பேதமை ஒழிந்தது
மங்கை என்றால் மனைவி மட்டும்
என்ற மடைமை மறைந்தது
மங்கையர் என்றால் துணைவியர்
என்ற கருத்து தகர்ந்தது
மாலதியின் வழியில் மகளிர் அணி
விரையுது- மறுக்காது
தமிழ்ப்பெண்ணே அவர்களோடு சேர்ந்துவிடு.

**போராளி: யோ. புரட்சி,**
இம்ரான்-பாண்டியன் படையணி,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரித்தானிய மேலாதிக்கம் மீண்டுமொரு தடவை தமிழர்களைப் பழிவாங்கிவிட்டது. அன்று சுயநிர்ணய உரிமையுடன் வாழ்ந்த தமிழர்களின் ஆட்சி அதிகாரத்தைக் கலைத்ததோடு நின்றுவிடாது, தமிழர்கள் மீண்டும் தமது முயற்சியால் தமிழர்கட்கான தனியரசைக் கட்ட முயலும்போதும் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்தான் என்று தமிழ் நெஞ்சங்கள் பொங்கி எழுந்து நின்றபோதும் தமிழர்களின் உணர்வு வெளிப்பாட்டைக் கருத்தில் கொள்ளாது பெரும்பான்மை சிங்கள அரசுடன் மீண்டும் ஒரு தடவை கைகோர்க்க எண்ணிவிட்டது.

பிரித்தானிய அரசு கொண்டுவந்த பயங்கரவாதத் தடையில் புலிகளை இணைத்ததற்குச் சொல்லும் காரணம் என்னவெனில், புலிகள் இலங்கையிலும், இந்தியாவிலும் பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டனர் என்பதே.

புலிகள் இலங்கையிலும் இந்தியாவிலும் பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டனர் என்றால் புலிகளை இச்செயலுக்குத் தூண்டியவர்கள்




# படைதிரளின் தடை உடையும்

– ரமேசப்பா –

யார்? திட்டமிட்டு நடந்த தமிழினப்படுகொலைகள் யாரால் நடந்தது? எமது இனத்தின் பொக்கிசமான நூலகத்தை எரித்த பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டது யார்?

கொதிக்கும் தாரில் தமிழரைப் போட்டுக் கொன்றது என்ன செயல்?

அன்று வெலிக்கடையிலும் இன்று பிந்துநுவேவவிலும் தமிழ் இளைஞர்களை கைதியாகக் கொண்டு சென்றபின் அவர்களைப் படுகொலை செய்ததை எப்படிச் சொல்வது?

கொக்கட்டிச்சோலையில் நடந்த படுகொலைக்கு பிரித்தானியப் பேரரசு என்ன பெயர் வைக்க முயலும்? பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பெண்கள் கிழக்கில் விதவையாக உள்ளனரே இவர்களின் இந்த நிலைக்கு யார் காரணம்?

தமிழரின் பாரம்பரிய பூமியான யாழ்ப்பாணத்தை திறந்தவெளிச் சிறைச்சாலையாகத், தனது ஆளுகைக்குள் வைத்துக்கொண்டு எமது தமிழ் இளைஞர்களைக் காணாமல் போகச்செய்து, தமிழ் யுவதிகளைப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தி செம்மணியில் மனிதப் புதைகுழியை ஏற்படுத்திப் பயங்கரவாதம் புரிந்த சந்திரிகாவிற்கு ஆதரவுக் கரமும் அதேபோன்ற ஒரு மனிதப் புதைகுழி ஏற்படுத்திய மிலேச்ச வீச்சிற்குக் குண்டுத் தாக்குதலும் எனத் தனது இருவேறு முகத்தைப் பிரித்தானிய அரசு காட்டுவதை யார் கண்டிப்பார்?

சிங்களப் பேரினவாதத்தின் பயங்கரவாதம் எவராலும் பட்டியலிட முடியாத அளவிற்கு அளப்பரியது.

கிளிநொச்சியில் எடுத்த 250இற்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் மட்டுமே சிங்களப் பேரினவாதத்தின் பயங்கரவாதத் தோற்றத்தைக் காட்டமுடியும்.

அண்மையில் மிருசுவில் மலக்குழியில் மீட்டெடுத்த பாலகனுக்கு யார் வாழ்வளிக்க முடியும்.

சிறீலங்கா இராணுவத்தின் செயல்களுக்கு எள்ளளவும் குறைந்ததல்ல இந்திய இராணுவத்தின் செயல்.

இந்திய இராணுவ டாங்கிகளில் எமது மக்கள் நசிபட்டு இரத்தமும் சதையுமாக வீதிகளில் கிடந்தனரே. பாடசாலையில் தஞ்சமடைந்த மக்கள் டாங்கியில் இருந்து ஏவிய குண்டுகளால் சிதைக்கப்பட்டனரே.

இரண்டு ஆண்டுகட்குள் எத்தனை படுகொலைகளைச் செய்துவிட்டு, எமது வாழ்வில் கறைபடிந்த அந்த நாட்களை எமக்குத் தந்து சென்றதற்கு பாரத மாதா மன்னிப்புக் கேட்பாளா?

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாதச் செயலைச் செய்யவில்லை. தமது செயற்பாட்டினால் தமிழர்கட்கு எதிராக நடந்த பயங்கரவாதச் செயலைக் குறைத்துள்ளனர். விடுதலைப் புலிகள் இயக்கம் இல்லாவிட்டால் ஈழத்தில் தமிழினம் இருந்த இடம் தெரியாது மாற்றப் பட்டிருக்கும். தமிழ் இனத்தின் வேர் அறுபடாமல் நிலைத்து நிற்கும் ஆற்றலையும், உலகெங்கும் வாழும் தமிழர்கட்கு தாங்கும் சக்தியையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், அதன் தலைவர் பிரபாகரனும் இன்று கொடுத்துள்ளனர். இதை எம்மைத் தடை செய்வோர் அனைவரும் வெகுவிரைவில் புரிந்து கொள்வர்.

பிரித்தானியரின் தடை எப்படி நகரப்போகின்றது என்று பார்த்தால் இது தற்போது ஒரு முன்மொழிவு நிலையிலேயே உள்ளது. சட்டமூலம் ஆக்கிய பின்பும் இதை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்தால் இச்சட்டம் தற்காலிக இடைநிறுத்தம் செய்யப்படும். இவையெல்லாம் நீண்டகாலம் சென்றபின்னரே நிறைவேறும்.

அது அப்படி இருக்க, இந்தத்தடையை எதற்காக ஐரோப்பிய, அமெரிக்க சமூகம் கொண்டு வருகின்றது? ஒன்று ஒரு இனத்தின் விடுதலை உணர்வைக் கிள்ளியெறிந்து தாம் விரும்பும் அரசைப் பேணிவளர்ப்பது. இரண்டாவது எதற்காகவும் தமது கொள்கையில் இருந்து விலகி வளைந்து கொடுக்காத விடுதலைப் புலிகளைத் தமக்கு இசையக்கூடியவர்களாக மாற்றவேண்டும் என்பது. அதற்கான அச்சுறுத்தும் வார்த்தைகளே பயங்கரவாதத்தடை, மனித உரிமை மீறல், தடை உத்தரவு என்பன.

இதை இன்று வளர்ச்சி பெற்றுள்ள தகவல் தொழில்நுட்பம் உலகெங்கும் எடுத்துச் சென்று ஒரு பய உணர்வை மக்கள் மத்தியில் விட்டு கருத்துருவாக்கம் ஒன்றைச் செய்யும். இதைவிட வேறு எதுவும் நிகழப்போவதில்லை. ஏனெனில் இன்று உலகின் தலைசிறந்த மனிதராக உள்ள நெல்சன் மண்டேலா மற்றும் காம்ப்டேவிற்றினதும் வெள்ளைமாளிகையினதும் விருந்தினராக இருக்கும் யாசீர் அரபாத் அனைவரும் இந்தப் பெயரால் அழைக்கப்பட்டவர்களே.

இதைவிட மேலாக நாம் ஒன்றைப் பார்க்கலாம். கியூபா, வியட்நாம், வடகொரியா இவை எல்லாம் 'அமெரிக்கா' என்று பெயரைச்சொல்லி உலகை அச்சுறுத்தும் நாட்டிற்கு எதிராகப் போராடியே தங்கள் நாட்டை இன்று சுதந்திர நாடாக்கித் தலை நிமிர்ந்து நிற்கின்றார்கள்.

உறுதியுடனும் தன்னம்பிக்கையுடனும் நின்று வியட்நாம் மக்கள் போராடியதன் விளைவு இன்று அமெரிக்க ஜனாதிபதியை வியட்நாமிற்கு விஜயம் செய்ய வைத்துள்ளது.

நாமும் இவைகளைத்தான் எமக்குப் பாடமாகக் கொள்ள வேண்டும். எமது மக்கள் அனைவரும் இதில் அறிந்துகொள்ள நிறையவே உண்டு.

'பிரித்தானியா விடுதலைப் புலிகளைத் தடைசெய்தால் உடனே போரைத் தொடங்கவேண்டும்' என பொதுமக்களின் கருத்துகள் சில காதில் விழுந்தன. இது அணியாகப் படைதிரளும் மக்களின் கையிலேயே உள்ளது.


இதுதான் எமது இன்றைய தேவை. எமது நிலங்களை விரைவாக மீட்டு நாம் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டு செல்லும்போது உலகம் வெல்பவன் பின்னால் அணிதிரளும். விரைவாகப் படை திரண்டால் விரைவாகத் தடை உடையும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மார்ச் 8 சம்பிரதாயங்களை புதிய பரிமாணத்தி



ஓர் குறிக்கப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த ஏதாவது ஒன்றுபற்றி, அதன் தனித்துவம், சிறப்புக் கருதி, சமூகத்தில் அதனுடைய தேவையும், விழிப்பும் கருதி அதற்கென ஒரு நாளைத் தேர்ந்தெடுத்து, அந்த நாளை உலகளாவியரீதியில் சிறப்பு நாளாகக் கொண்டாடுவது உலக மரபு. இந்த வகையிலேயே மார்ச் 8, அனைத்துலகப் பெண்கள் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, கடந்த பல ஆண்டுகளாக சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது.

உலகின் அனைத்து நாடுகளிலும், அதாவது வளர்ச்சியடைந்த நாடு, பின்தங்கிய நாடு என்கின்ற பாகுபாடின்றி எல்லா நாடுகளிலுமே இம் மகளிர் தினம் கொண்டாடப்படுவதைக் கொண்டு இந்த நாளின் தேவைபற்றியும் முக்கியத்துவம் பற்றியும் புரிந்து கொள்ள முடியும்.

தாம் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அதாவது, பெண்கள் மீது திணிக்கப்படும் பல்வேறுபட்ட ரீதியிலான அடக்குமுறைகள், வன்முறைகள், பலாத்காரங்கள், ஓரங்கட்டல்கள் போன்ற பல்வேறு வடிவங்களினூடான கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து, சர்வதேசத்தை விழிப்படையச் செய்து, தமது தரப்பு உரிமைகளை வென்றெடுக்கவும், தமது பாதுகாப்பை, சுதந்தித்தை உறுதி செய்து கொள்வதற்குமாய் இத் தினத்தில் அனைத்துலகப் பெண்களும் நாடு, மொழி, மதம் என்கிற பேதமின்றி ஒருமித்துக் குரலெழுப்புகின்றனர். இதன்மூலம் கணிசமான வெற்றியையும் இவர்கள் பெற்றிருப்பதாகவும் கொள்வதுடன் இவர்களது எதிர்பார்ப்புக்கள் யாவும் முழுமையான வெற்றியை எட்டிவிட்டதா? என்கிற வினாவிற்கு இன்றுவரை எந்தவொரு வளர்ச்சியடைந்த நாட்டால்க்கூட முற்றுப்புள்ளி வைக்க முடியாத நிலையே கண்கூடு.

இன்று உலக நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, தமிழீழத்தில் பெண் விடுதலையென்பது ஓர் பரிபூரண வளர்ச்சியை எட்டி நிற்பதனை யாவரும் கண்டுணரக் கூடியதாக உள்ளது. இதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது தமிழீழப் போராட்டம் என்பது திண்ணம்.

"ஒரு விடுதலை இயக்கத்துடன் அணிசேருவதன் மூலமே பெண்ணினம் தனது விடுதலை நோக்கிய இலட்சியப் பாதையில் வெற்றிபெற முடியும்" என்கிற தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் கூற்றிற் கமைவாக இன்று போரியல் துறையில் மட்டுமன்றி, சகல துறைகளிலும் தமிழீழப் பெண் போராளிகள் சிறந்து விளங்கி சாதனை படைத்து வருகின்றார்கள். அவர்களுக்கு ஆதரவாக சகல ஈழத் தமிழ்ப் பெண்களும் உள்நாடு, வெளிநாடு மட்டத்தில் செயற்பட்டு வருவதும் பெண் விடுதலையின் ஓர் மகத்தான வெற்றியே.

கடந்த காலங்களில் தமது தனிப்பட்ட உரிமைகள் தேவைகளுக்காக மட்டுமே பதாகைகள் ஏந்தி, சுலோகமெழுப்பி, ஊர்வலம் சென்ற பெண்கள் இம்முறை யுத்தத்தைத் நிறுத்தி, புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பி, என்கிற நாட்டின் பொதுவான தேவைக்காய் குரல் எழுப்பியிருப்பதன் மூலம், இதுவரை காலகாலமாய் பெண்விடுதலை, பெண் விடுதலை என்று கூறிக்கொண்டு ஒரு வட்டத்திற்குள் இருந்த நிலையை உடைத்தெறிந்து, மேலும் ஓர் பாய்ச்சலை ஈழப் பெண்ணினம் நிலைநாட்டியுள்ளது. அதாவது நாட்டின் அரசியல் மட்டத்தில் தமது குரலை ஆணித்தரமாக வைத்துள்ளது.

இதுவும் பெண் விடுதலையின் இன்னொரு பரிமாணமே.

ஈழத்தின் பல்வேறு இடங்களிலும் மிகச் சிறப்பாக இம்முறை மகளிர்தினம் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிற்கூட துணிந்து தமது விடுதலைக் குரலை முன் வைத்திருக்கின்றார்கள் பெண்கள். வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மலையகம் என மிகப்பெரும் ஊர்வலங்கைளயும், கூட்டங்களையும் சிறப்பாக நடாத்தியுள்ளனர். பெண்கள் தினத்தில் சம்பிரதாயகமாகக் கூறப்படுகின்ற வார்த்தைகளைப் பின்தள்ளி அரசே யுத்தத்தை நிறுத்து என்பது பிரதான கோசமாய் எழுந்தது சிறீலங்கா அரசிற்குக் கசப்பானதாகவே அமைந்திருக்கும்.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி வவுனியா பெண்கள் ஒழுங்கமைப்புக் குழு வெளியிட்ட அறிக்கையொன்றில் பின்வருமாறு கூறப்படுகின்றது "உலகின் சரிபாதியாக விளங்கும் பெண்களாகிய எம்மீது திணிக்கப்படும் அடக்குமுறைகள், சுமைகளினால் உறைந்து போயிருக்கும் நாங்கள் மீண்டும் உயிர்ப் படைய விரும்புகிறோம், எம்மை அழுத்தும் புறத்தடைகளை உடைத்து விடுதலையாகி ஆளுமைச் செழிப்புள்ளவர்களாக வாழவே நாங்கள் ஆசைப்படுகின்றோம். எம்மீது சுமத்தப்பட்ட புறத்தடைகள் நீங்க இந்த யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளதுடன், "யுத்தத்தைக் காரணம் காட்டி வவுனியாவில் விசேடமாக படையினரால் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் பெண்கள் மீதான கெடுபிடிகள், பாஸ் நடைமுறை, வீதிச் சோதனைச் சாவடியில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ... கடந்து

மொறிஸ் தர்மபாலன்

பெண்கள் மீது புரியப்படும் பாலியல் ரீதியிலான சேட்டைகள் என்பன உடன் நிறுத்தப்பட வேண்டும். இதற்காக யுத்தத்தை நிறுத்தி, சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்" என்றும் கேட்கப்பட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமிழ்ப் பெண்கள் மீது சிங்கள இராணுவ பொலிஸ் படைகள் மேற்கொள்ளும் கெடுபிடிகள் மோசமானதே. அதற்கு உதாரணமாக அண்மையில் கூட, மன்னாரில் இரு பெண்களை விசாரணைக்காக அழைத்துச் சென்ற படையினர் அவர்களது ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக்கி பாலியல்ரீதியிலான துன்புறுத்தலை மேற்கொண்டதுடன், அவர்களை வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு சென்றபோது அங்கு சென்று தம்மை பற்றி எதுவும் கூறக்கூடாது என்று மிரட்டியுமுள்ளனர். இது வெளியே கசிந்த ஓர் உதாரணம் மட்டுமே. இதுபோல் இன்னும் பல இருட்டிலேயே முடங்கிவிடுகின்றன.

மகளிர் தினம் என்கிறபோது, மலையகப் பெண்களையும் நாம் மறப்பதற்கில்லை, பிறருக்காய் உழைத்து தமது வாழ்வைக் கருக்கிக் கொள்ளும் இவர்களின் மட்டத்திலும் விடுதலை விருட்சம் பிரகாசமாய் முளைவிடுகின்றது. கடந்த சில வருடங்களாக மலையக மகளிர் மட்டத்திலும் மகளிர்தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு, எழுச்சிக் கலை நிகழ்வுகளும், உரைகளும் ஆற்றப்படுகின்றன. உரிமைக்காய் போராட்டங்கள் நடாத்தப்படுகின்றன. கல்வி மற்றும் ஏனைய துறைகளில் முன்னேற்றம் கண்டு வருகின்றனர். உலக மட்டத்தில் தமது கரங்களையும் உயர்த்தத் தொடங்கிவிட்டனர். இது ஓர் நம்பிக்கையான விடுதலையின் வேட்கையென்பதுடன், அவர்களது விடிவிற்கான தொடக்கம் என்றும் கொள்ளலாம்.

மார்ச் 8 மகளிர் தினம் என்கிறபோது, பெணக்களுக்கு ஏதோ பிரச்சினை இருக்கின்றது. அவர்கள் அதற்காகத்தான் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் என்கிற நிலையை மாற்றி, நாட்டின் அரசியல், இராணுவ மட்டத்திலும் பெண்களின் குரலும், செயற்பாடும் அளப்பரியது, ஆணித்தரமானது என்பதை இம்முறை நடைபெற்ற மகளிர் தினம் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் தமிழீழப் பெண்கள்.





# யுத்தமும் பேச்சும்

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் சித்தாந்தங்களைப் புரிந்து கொள்ளுதல் என்பது எவருக்கும் கடினமானதொன்றே. கடந்த பல வருடங்களாய் சமாதானத்திற்கான யுத்தம் எனக்கூறி சகலரையும் குழப்பி வந்த சந்திரிகா குமாரதுங்கா இறுதியாக இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு, அதேவேளை பயங்கர வாதத்திற்கு யுத்தத்தின் மூலம் தீர்வு எனக்கூறி மீண்டும் ஒரு குழப்பத்தை உருவாக்கி உள்ளார்.

ஜனாதிபதியின் பின்னைய சித்தாந்தமானது, அவரால் ஏற்கனவே வெளியிடப்பட்டு வந்ததொன்றே ஆயினும் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் இதற்குத் தனியானதொரு முக்கியத்துவம் உண்டு என்றே கூறலாம். ஏனெனில் இன்றைய அரசியல் சூழ்நிலையில் இவ்வாறு சந்திரிகா குமாரதுங்கா பேசுவது அரசின் முரண்பாட்டைக்காட்டுவதாகவே உள்ளது.

தற்போதய சூழ்நிலையில் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கான ஏது நிலை தோன்றலாம் என அரசியல் விமர்சகர்கள் ஆருடம் தெரிவிக்கின்றனர். ஆனால் பேச்சுவார்த்தைக்கான இணக்கப்பாடு இன்னமும் ஏற்படவில்லை.

இவ்வாறானதொரு சூழ்நிலையில்தான் சந்திரிகாவின் இச்சித்தாந்தம் மீண்டும் முக்கியத்துவம் பெறுவதோடு கேள்விகளையும் தோற்றுவித்துள்ளது. அதாவது பயங்கரவாதத்திற்கு எதிராக யுத்தமும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வும் என சந்திரிகா குமாரதுங்கா கூறுவதை ஏற்பதானால் ஒன்றுக்கொன்று முரணான இவை யாருடன் மேற்கொள்ளப்படப் போகின்றன என்பது முக்கியமான கேள்வியாகும்.

சிறீலங்கா ஆட்சியாளர்கள் பயங்கரவாதிகள் எனக்கூறுவது விடுதலைப் புலிகளையே என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்றே. ஆகையினால் பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தம் என்பது விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் என்பது வெளிப்படையானது. இதன் மூலம் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும்வரை யுத்தம் தொடரும் என்பது சந்திரிகா குமாரதுங்காவின் அறிவிப்பாக வெளிவந்தது.

அவ்வாறானால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது யாருடன் என்ற கேள்வி தவிர்க்க முடியாது எழுகின்றது. சந்திரிகா குமாரதுங்காவும், அவருக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அனுசரணையாக உள்ளவர்களும் விடுதலைப் புலிகளைத் தவிர்த்து இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு கண்டுவிடலாம் எனக் கருதியவர்கள்தான். ஆனால் தற்பொழுது அது சாத்தியப்பாடானதல்ல என்பது அவர்களுக்குத் தெரியும்.

இதனைச் சிறீலங்கா அரசும், ஏற்றுக்கொண்டுள்ளது. அத்தோடு அதற்குப் பின்புலமாக உள்ள அமெரிக்கா போன்ற நாடுகளும் புரிந்து கொண்டுள்ளன. இதன் வெளிப்பாடாகவே நோர்வே மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு சிறீலங்காவும், அவர்களை ஆதரிப்பவர்களும் இணக்கப்பாடு தெரிவித்துள்ளனர். அவ்வாறு இல்லாது விடுதலைப் புலிகளைத் தவிர்த்து இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு எனின் நோர்வே இதில் சம்பந்தப்படத் தேவையில்லை.

இந்நிலையில் சிறீலங்கா அரசின் கூற்றுப்படி பயங்கரவாதத்திற்கு எதிராக அதாவது புலிகளுக்கு எதிராக யுத்தம் புரியப்போகும் சந்திரிகா அரசு அரசியல் தீர்வு ஒன்றிற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாகவும் அமைகின்றது. அவ்வாறானால் புலிகள் ஒரு இடத்தில் பயங்கரவாதிகளாகவும், ஒரு இடத்தில் அரசியல்வாதிகளாகவும் சந்திரிகா குமாரதுங்காவிற்குத் தெரிதல் வேண்டும்.

உண்மையில் இது அரசின் குழப்பமான நிலைப்பாட்டையே வெளிக்காட்டுவதாகும். ஏனெனில் விடுதலைப் புலிகள் அமைப்பு தமது நோக்கத்தை அடைவதற்கான வழிமுறையாகவே ஆயுதப்போராட்டத்தை நடத்தி வருகிறது. ஆகையினால் சந்திரிகா அரசின் யுத்தமானது விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிரான யுத்தமாக அதன் இலட்சியத்திற்கு எதிரான யுத்தமாகவே பார்க்கப்படும். இந்நிலையில் சந்திரிகாவின் இச்சித்தாந்தம் நடைமுறையில் ஏற்புடையதாக இருக்கமாட்டாது.

ஆனால் சந்திரிகா குமாரதுங்கா இனப்பிரச்சினை விவகாரத்தில்தான் இவ்வாறான முரண்பட்ட சித்தாந்தங்களைக் கைக்கொள்கிறார் என்பதல்ல. அவரின் அரசாங்கமே முரண்பாட்டின் ஒட்டுமொத்தமாகவே உள்ளது. அவ்வாறு இல்லாதுவிடின், யுத்தச் செலவைக் குறைத்து சுபீட்சமான வாழ்வளிப்பேன் என வாக்குறுதி அளித்து தேர்தலில் வென்றபின் யுத்தச் செலவை மக்கள் தாங்கித்தான் ஆகவேண்டும் என அவர் கூறுவாரா?



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ விடுதலைப் புலிகள்

Liberation Tigers Of TAMIL EELAM

# விடுதலைப் புலி

# அரசின் பொய்த்

மூன்றாவது தடவையாக நீடிப்புச் செய்துள்ள இப்போர்நிறுத்தம் மார்ச் 24ஆம் திகதியில் இருந்து

விடுதலைப் புலிகளினால் ஒரு தலைப்பட்சமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் போர்நிறுத்தம் மேலும் நீடிக்குமா என்ற பலமான கேள்வி நிலவிய சமயத்தில், மீண்டும் ஒருமாதகாலப் போர்நிறுத்தத்தைப் புலிகள் அறிவிப்புச் செய்துள்ளனர். மூன்றாவது தடவையாக நீடிப்புச்செய்துள்ள இப்போர்நிறுத்தம் மார்ச் 24ஆம் திகதியில் இருந்து ஏப்ரல் 24ஆம் திகதி வரையில் கடைப்பிடிக்கப்படுமென விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இதேசமயம், இப்போர்நிறுத்த நீடிப்புத் தொடர்பான அறிவிப்பு முன்னைய அறிவிப்புக்களைவிட சற்று எச்சரிக்கையுடன்கூடியதாகவே உள்ளது. சிறீலங்கா ஆயுதப்படையினர் போரைத் தீவிரப்படுத்தினால் விடுதலைப் புலிகள் இயக்கம் தனது போர்நிறுத்தத்தை ரத்துச்செய்ய நேரிடும் என்பதே அவ் எச்சரிக்கையாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த மூன்று மாதகாலமாகப் போர்நிறுத்தத்தைக் கடைப்பிடித்துவந்தபோதும் அதற்கான ஒத்துழைப்பு சிறீலங்கா அரசிடம் இருந்து கிடைக்கப்பெறவில்லை. மாறாக, போர்நிறுத்தத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளும், தமிழ் மக்கள் மீதான அச்சுறுத்தல்களுமே அரசினால் வெளிப்படுத்தப்பட்டும் வந்தன. இதுவே யுத்தநிறுத்தம் மேலும் நீடிக்கப்படுமா? என்ற கேள்வியை எழுப்புவதாக இருந்தன. இருப்பினும் விடுதலைப் புலிகள் அமைப்பு போர்நிறுத்தத்தை மேலும் நீடிப்பதாக அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் கடந்த டிசம்பர் மாதத்தில் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை அறிவிப்புச்செய்தபோது அது குறித்துப் பலவேறு விமர்சனங்கள் எழுந்தன. விடுதலைப் புலிகள் இயக்கம் அரசியல் தீர்வு ஒன்றிற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முன்முயற்சி நடவடிக்கைகளாக நல்லெண்ண அடிப்படையில் அறிவிப்புச் செய்த இப்போர்நிறுத்தம் சந்தேகக் கண்களுடனேயே பார்க்கப்பட்டன.

அதிலும் குறிப்பாகச் சிறீலங்கா அரசாங்கத்தரப்போ இரண்டு அம்சங்களை முன்னிலைப்படுத்தி இப் போர்நிறுத்தத்தை நிராகரித்தது.

1. விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவரீதியில் பலவீனப்பட்டுப் போய்விட்டதினால் இவ்யுத்தநிறுத்த அறிவிப்பைப் பிரகடனம் செய்துள்ளது.

2. புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் பிரிட்டனில் புலிகள் இயக்கம் தடைசெய்யப்படவுள்ளதால் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான நடவடிக்கையே இது எனவும் கூறியது.

இவ்விரண்டு காரணிகளும் ஒரு யுத்தநிறுத்த அறிவிப்பிற்கான வலுவான காரணிகளாக இருக்கக்கூடியவைதான். ஆனால், இவ்விரண்டு காரணிகளும் விடுதலைப் புலிகளைப் பொறுத்து சரியானவையா அன்றி விடுதலைப் புலிகளின் குணநலன்களுக்கு இவை ஒப்பானவையா என்பது கேள்விக்குரியதே ஆகும். ஏனெனில், விடுதலைப் புலிகள் எப்பொழுதுமே நிர்ப்பந்தங்களுக்கு உட்படக்கூடிய செயற்பாடுகளை மேற்கொள்பவர்களாக இருப்பதில்லை.

அதாவது, விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் மிரட்டலின் காரணமாகவோ அன்றி அழுத்தத்தின் காரணமாகவோ நடவடிக்கைகள் எதையும் மேற்கொண்டதாக இல்லை. அதேபோன்று சலுகைகளுக்காகவோ அன்றி மற்றையவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காகவோ தீர்மானங்களை அது எடுப்பதும் இல்லை.

அவ்வாறு தீர்மானங்களை விடுதலைப் புலிகள் எடுத்திருப்பார்களேயானால் இந்தியாவுடன் பகைத்துக் கொள்ளவேண்டிய தேவையோ அன்றி பெரும் இராணுவ அழுத்தங்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய அவசியமோ ஏற்பட்டிருக்கமாட்டாது. மாறாக, அவ்வாறு ஒன்று நிகழ்ந்திருக்குமானால் விடுதலைப் புலிகள் இயக்கம் மெலிந்தும், நலிந்தும் போவது தவிர்க்கமுடியாததாகவும் இருந்திருக்கும்.

அதாவது, விடுதலைப் புலிகள் இயக்கம் யுத்தநிறுத்தத்தை ஒருதலைப்பட்சமாக அறிவித்தபோதும், அதனைத் தொடர்ந்து நீடித்துவருகின்றபோதும் சிறீலங்கா அரசாங்கம் கூறுவதுபோன்றோ அன்றி சில விமர்சகர்கள் தெரிவிப்பது போன்றோ பலவீனப்பட்டுப்போய்விடவும் இல்லை. பிரிட்டனைத் திருப்திப்படுத்தவும் முனையவில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் யுத்தநிறுத்தத்தை அறிவித்த பின்னர் இராணுவரீதியில் சில பின்னடைவுகளைச் சந்தித்ததென்பது உண்மைதான். ஆனால், அப்பின்னடைவுகள் பலவீனத்தின் வெளிப்பாடு எனச் சித்தரிக்க முனைவதுதான் தவறானதாகும். அப்பின்னடைவுகள் 'சமாதானத்திற்கான அர்ப்பணிப்பாகவே' விடுதலைப் புலிகள் இயக்கம் எடுத்துக்கொண்டுள்ளது.

அவ்வாறு இல்லாது அரசு கூறுவது போன்று விடுதலைப் புலிகள் இயக்கம் பலவீனப்பட்டே போயுள்ளது எனின் கினிகிர-09 நடவடிக்கையை இராணுவம் இடைநடுவில் நிறுத்தவேண்டி வந்தது ஏன்? கினிகிர-09 இராணுவ நடவடிக்கைகளின் போது இராணுவம் பெரும் இழப்பை எவ்வாறு சந்திக்கவேண்டி வந்தது?

அதாவது, கினிகிர-09 இராணுவ நடவடிக்கையானது ஜனவரி 16ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டபோது 'ஆனையிறவை மீட்பதற்கான யுத்தம் தொடங்கிவிட்டது. இராணுவம் டாங்கிகள், பீரங்கிகள் சகிதம் ஆனையிறவை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றது' என்றே இராணுவப் பேச்சாளர் அறிவிப்புச் செய்திருந்தார். ஆனால், புலிகளின் பதில்த்தாக்குதல் இராணுவத்திற்கு பெரும் ஆளணி இழப்பைக்கொடுத்ததினால் இந்நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டதோடு அடுத்தகட்ட நகர்வுகள் இடம்பெறின் ஏற்படப்போகும் அழிவுகளை மதிப்பிடவும் அது ஏதுவாக இருந்திருக்கும்.

இந்நிலையில்தான் கடந்த இரண்டு மாதகாலமும் சிறீலங்கா இராணுவம் பெரும் இராணுவ நகர்வு முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. இவ்வாறு தரையில் மாத்திரம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ளின் யுத்தநிறுத்த நீடிப்பு;
# ுப்போன பிரச்சாரங்கள்!

ஆம் திகதி வரையில் கடைப்பிடிக்கப்படுமென விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

ராஜ், தமிழீழம்

அல்ல, கடலிலும் தமது வலுவான நிலையைக் கடந்த 21ஆம் திகதி புலிகள் நடத்திய பதில்த்தாக்குதல்கள் நிரூபித்திருக்கக்கூடும். இஸ்ரேலியத் தயாரிப்பான இரு டோறாப் பீரங்கிக் கலங்கள் மூழ்கடிக்கப்பட்டும், இரு டோறாக் கலங்கள் சேதமாக்கப்பட்டதுமான இத்தாக்குதலில் கடற்படை உயிரிழப்புகளையும் சந்திக்கவேண்டியும் வந்தது.

இவ்விரு அம்சங்களும் கடலிலும்சரி, தரையிலும்சரி விடுதலைப் புலிகள் பலமான நிலையிலேயே உள்ளனர் என்பதையே நிரூபிப்பதாகவுள்ளது. அதாவது, அரசாங்கம் கூறுவதுபோலன்று புலிகள் பலமான நிலையில் மட்டுமல்ல, சிறீலங்கா ஆயுதப் படையினரின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தக்கூடிய வலுவான நிலையிலும் உள்ளனர் என்பதை நிரூபணம் செய்வதாகவும் இருந்தது.

இதேசமயம், விடுதலைப் புலிகள் அமைப்பை பிரிட்டன் அரசு தடைசெய்வதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கே போர்நிறுத்தத்தை அறிவித்தார்கள் எனக்கூறுவது ஒரு சிறு பிள்ளைத்தனமான விளக்கமாகும். ஏனெனில் பிரிட்டனின் தடைச்சட்டமானது 'பயங்கரவாதம்' என்பதற்குக் கொடுத்துள்ள வரையறைகள் தெளிவற்றதும், பரந்துபட்டதும் என்பது விடுதலைப் புலிகளுக்கு ஏற்கனவே நன்கு தெரியும். ஆகையினால் பிரிட்டனில் தடை செய்யப்படுவதற்கு பயங்கரவாதச் செயல் முறைதான் தேவை என்பதல்ல, பிரிட்டனின் அரசியல் குறிக்கோள்களே அவற்றிற்கு அடிப்படையாக அமையப்போகின்றன என்பது ஏற்கனவே உணரப்பட்டும் இருந்தது.

இந்நிலையில், பிரிட்டன் புலிகளைத் தடை செய்யாது விடுவதற்கு, அதாவது பயங்கரவாதப்பட்டியலில் இடம்பெறாமல் செய்வதற்கு ஒரு போர்நிறுத்தத்தை அறிவிப்புச் செய்தால் போதுமானதாக இருக்கும் என எதிர்பார்க்க, புலிகள் அரசியலோ அன்றி இராஜதந்திரமோ புரியாதவர்கள் அல்ல.

ஆனால் அரசு கூறும் அக்கருத்தினை ஏற்றுக்கொள்வதாக இருந்தால்க்கூட, ஏறத்தாள விடுதலைப் புலிகள் பிரிட்டனில் தடை செய்யப்படுவது உறுதியாகிவிட்ட இன்றைய நிலையில் மீண்டும் ஒரு யுத்தநிறுத்தத்தை விடுதலைப் புலிகள் ஏன் நீடிப்புச் செய்தல் வேண்டும்?

இவ்வாறாக சிறீலங்கா அரசதரப்பு விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை அறிவிப்புச் செய்தமைக்கு கூறியுள்ள காரணிகளை அர்த்தமற்றவையாக ஒருபுறம் இருக்கையில் மறுபுறம் இவ்யுத்தநிறுத்தத்தை விடுதலைப் புலிகள் தாமாகவே முறித்துக்கொள்ளும்வகையில் சினமூட்டும் நடவடிக்கைகளை அரசாங்கம் தொடர்ந்தவண்ணமும் இருந்தது.

ஒருபுறம் பல கட்டங்களாக அது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு, குறிப்பிடத்தக்க சேதத்தையும் ஏற்படுத்தியிருந்தது. இது யுத்தநிறுத்தத்தை முறித்துக்கொள்ள நிர்ப்பந்திக்கும் வகையில் செய்யப்பட்டவையாகும். இதனைத்தவிர, சிறீலங்காவின் படை விமானங்கள் அடிக்கடி மக்கள் குடியிருப்புக்கள் மீது குண்டுத் தாக்குதல்களை நடாத்தியதோடு பல அப்பாவிப் பொதுமக்களுக்கு உயிர் இழப்புக்களையும், பெரும் பொருட்சேதத்தையும் விளைவித்துக்கொண்டிருந்தன.

இதேசமயம், விடுதலைப் புலிகள் போர்நிறுத்தத்தைக் கடைப்பிடித்துக்கொண்டிருந்தமையால் சிறீலங்காக் கடற்படையோ கடற்பரப்பில் ஏற்பட்ட சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி அப்பாவி மீனவர்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தியது. இதனால், பல குடும்பஸ்தர்கள், இளைஞர்கள் பலியானதோடு, பெருமளவு மீன்பிடி உபகரணங்களும் அழிவிற்குள்ளாகியுள்ளன.

இவை ஒருபுறம் இனஅழிப்பு நடவடிக்கையாக இருப்பினும், மறுபுறம் விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தை முறித்துக்கொள்ளும்வகையில் ஆத்திரம் ஊட்டும் நோக்கில் செய்யப்படுபவையே ஆகும். அதாவது, இன அழிப்பைத் தீவிரப்படுத்தி விடுதலைப் புலிகளுக்குச் சினமூட்டி, அவர்கள் யுத்தநிறுத்தத்தை முறித்துக்கொள்ள நிர்ப்பந்திப்பதே அரசாங்கத்தின் அணுகுமுறையாகும். அதிலும் குறிப்பாக, யுத்தநிறுத்தம் முடிவிற்கு வருவதற்கு மூன்று தினங்களுக்கு முன்பாக இத்தாக்குதல்களை நடத்துவதன் மூலம் பதட்டத்தை அதிகரித்து விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தைக் கைவிடத்தூண்டும் வகையில் இத்தாக்குதல்கள் திட்டமிட்டு நடத்தப்பட்டன எனலாம். ஆனால், விடுதலைப் புலிகள் இவ்விடயத்தில் பெரிதும் பொறுமை காத்தது மட்டுமல்ல, விடுதலைப் புலிகள் அமைப்பின் பண்பையும் வெளிக்காட்டியுள்ளது எனலாம். அதாவது, புலிகள் இயக்கம் தாம் எடுத்துவைக்கும் அடிகள் ஒவ்வொன்றையும் நிதானத்துடனும், உறுதியுடனும் எடுத்துவைக்கின்றனர் என்பதே அதுவாகும்.

இதன் வெளிப்பாடே சிறீலங்கா அரசாங்கம் யுத்தநிறுத்தத்தை முற்றாக நிராகரித்தது மட்டுமல்ல ஆத்திரமூட்டும் செயற்பாட்டிலும் இறங்கியபோதும் விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தை முறித்துக் கொள்ளாதது மட்டுமல்ல, மேலும் மேலும் நீடிப்புச் செய்துவருகின்றனர். விடுதலைப் புலிகள் கடைப்பிடித்துவரும் பொறுமை தமிழ் மக்கள் மத்தியிலேயே முணுமுணுப்பை ஏற்படுத்தத் தொடங்கியிருப்பினும் புலிகள் தமது நிலைப்பாட்டின் உறுதியை வெளிப்படுத்துவது போன்று மூன்றாவது யுத்தநிறுத்த நீடிப்பைச் செய்துள்ளனர். ஆகையினால், இவை அனைத்தையும் மீறி புலிகள் அறிவிப்புச் செய்துள்ள யுத்தநிறுத்தத்திற்கு அர்த்தமற்ற காரணிகளைக் கண்டுபிடிக்க முனைவதும் யுத்தநிறுத்தத்தை நிராகரிப்பதென்பதும் அரசாங்கம் யுத்தத்தைத் தொடர்வதற்கும், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண்பதில் முனைப்பாக உள்ளமையையுமே வெளிக்காட்டி நிற்கின்றது. வேறுவிதமாகக் கூறுவதானால் விடுதலைப் புலிகள் சமாதானத்திற்காகவும், அரசியல் தீர்விற்காகவும் வழங்கிவரும் ஒத்துழைப்பையும் சகிப்புத்தன்மையையும் வெளிப்படுத்துவதாகவே உள்ளது. இதனைச் சிறீலங்கா அரசு தவறாக மதிப்பீடுசெய்யின் இலங்கையில் சமாதானமும் அரசியல் தீர்வும் தொலைதுாரத்திற்குத் தள்ளப்படுதல் தவிர்க்கமுடியாது போகலாம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மண்ணுக்கு பட்ட கடன் தீர்த்த கணங்கள்.

மாரீசமைந்தன் (போராளி)

இன்றைய நாள் நிச்சயமாய் மீண்டும் ஒரு பெருஞ்சமரைச் சந்திக்கப் போகின்றது. எந்தவொரு சமரும் எமக்கோ அன்றி எதிரிக்கோ இறுதியில் வெற்றியைப் பரிசளிக்கும். ஆனால், இந்த இத்தாவில் தடுப்பரண்களில் வெற்றிபெறுவது நாமாகத்தான் இருக்கவேண்டும். ஏனெனில், நாம் நிற்பது முற்றிலும் பாதுகாப்பானதும், எந்த வேளையிலும் எங்கள் தோழர்கள் எமக்குக் கைகொடுக்கக்கூடியதும், தடங்கலற்ற வழங்கற்பாதையைக் கொண்டதுமான ஒரு பிரதேசமென கற்பனையிலும் எண்ண முடியாதது. இங்கே எமக்கு இரண்டு தெரிவுகள்தான் எஞ்சியிருந்தன. வெற்றி அன்றேல் வீரச்சாவு. ஆனால், இங்கு எது நடந்தாலும் தமிழீழப் போரரங்கில் நிகழும் மாற்றமும் அந்த முடிவுகளைப் போலவே இருக்கும். இங்கு சண்டை மூண்டுவிட்டால் தந்திரோபாயப் பின்வாங்கல்களுக்கோ இடமில்லை. சண்டையின் முடிவில் அப்படிக் கூறிக் கொள்வதினாலும் பயனெதுவும் ஏற்பட்டு விடப்போவதில்லை.

இவற்றையெல்லாம் தெளிவாக விளங்கிக் கொண்டதன் பின்னர்தான் இங்கு தரையிறங்கிக் கொண்டோம். அதனால்தான், இந்நாளின் புலர்வுப்பொழுதுவரை எங்களால் அந்தப் பகுதியைப் பாதுகாக்க முடிந்தது.

ஜெயசிக்குறுச் சமரை எதிரி திட்டமிடும் போது அவனது கவசப்படையை அவன் நம்பினான். அந்தக் கவசங்கள் ஒவ்வொன்றும் பயிற்சிகளின்போது தமிழீழ மண்ணையும் அதன் சொத்துக்களையும் ஏறிமிதிக்கவும், எறிகணைகளால் எரித்துச் சாம்பலாக்கவுமே கற்றிருக்கும். ஆனால், அதே காலப்பகுதியில் எதிரியின் அந்தக் கவசங்களை எரித்துச் சாம்பலாக்க, தலைவரின் தீர்க்கதரிசனங்களால் உருப்பெற்ற விக்ரர் விசேட கவச எதிர்ப்பு அணி பற்றி அறிந்துகொள்ளும் வாய்ப்பைச் சிங்களம் இழந்திருந்தது.

'ஜெயசிக்குறு' சண்டைகளிலும், அதன் பின்வந்த பல சண்டைகளிலும் நேருக்கு நேர் நின்று மோதினார்கள் கவச எதிர்ப்புப் போராளிகள். அங்கே எதிரியின் பலம்வாய்ந்த கவசங்களை எதிர்கொண்டோம். அவை உலகத்தரம் வாய்ந்தவையாகவும் ஒரே நேரத்திலேயே குண்டுகளையும் ரவைகளையும் இடைவிடாது, துல்லியமாக நீண்டதூரத்திற்குச் செலுத்தும் திறன் கொண்டவையாகவும் இருந்தன. அதனால், எம்மீது கொண்டிருந்த பயத்தைவிட அந்தக் கவசங்கள்மீது எதிரிக்கு அதிகமான நம்பிக்கையிருந்தபோதும், ஒவ்வொரு போராளியினதும் நெஞ்சுரத்தால் அவற்றை எதிர்கொண்டோம். இன்றும் அதற்காகவே காத்திருந்தோம்.

கடந்துகொண்டிருந்த ஒவ்வொரு நாட்களிலும் இந்தக் கவசங்களை உடைப்பதற்காக உழைத்துக் களைத்துப் போயிருந்தன கரங்கள். பதுங்குகுழி வெட்டி, அதற்காய்க் குற்றிகள் தறித்துத் தூக்கிய சுமைகளைத் தாங்கிய உள்ளங்கை இப்போது வெடித்து ஆயுதத்தைப் பற்றிப்பிடிக்க முடியாமல் இருந்தது.

கடந்து செல்லும் மணித்துளிகளில் எச்சரிக்கை செய்யாது, எல்லையற்று வீழ்ந்து நொருங்கும் குண்டுச் சிதறல்கள் உடலில் காயத் தழும்புகளை ஏற்படுத்தித்தானிருந்தது. ஆனாலும், முடிவு ஒன்றாகத்தானிருந்தது.

இப்போது பொழுது புலர்ந்துகொண்டிருந்தது. அந்த இரவின் இருளில் இருள் திரட்டுக்களாகத் தெரிந்தவையெல்லாம் அதனதன் உண்மைத் தோற்றங்களுடன் கண்ணுக்குப் புலப்பட்டன.

தூரத்தே எதிரியின் எல்லைக்குள் இருந்து அவனின் கவசங்கள் உரத்து இரைந்துகொண்டு எமது தடுப்பரண்கள் நோக்கி வந்துகொண்டிருந்தன. அந்தப் பகுதி முழுவதும் டாங்கிகளின் இரைச்சலினாலும் எதிரியின் எறிகணைக் குழல்களின் ஒருமித்த குண்டுத் தாக்குதலினாலும் அதிர்ந்து கொண்டிருந்தது. வீழ்ந்து சிதறும் ஒவ்வொரு குண்டும் தீப்பிளம்பைக் கக்கி கரும்புகையை வான் நோக்கித் தள்ளியது. இதுவரை நடந்து முடிந்த சண்டைகளுள் அகப்பட்ட இத்தாவில் சந்தியிலும் அதை அண்மித்த பகுதியிலும் இன்று எமது மண்ணைத் தவிர இழப்பதற்கு எதுவுமில்லை; எல்லாமே சிதைந்தும் நொருங்கியும் காயத்தழும்புகளைத் தாங்கியும் சுடுகாடாய் மாறிக்கிடந்தன.

இவற்றிற்கு மத்தியிலும் அசையாத இனவாதத் துடிப்போடு தங்கள் மீதும், தங்கள் ஆயுதத்தின் மீதும் கொண்டிருந்த நம்பிக்கையைக் கொண்டு கவசங்களை எதிர்க்கத் தயாராகி அந்தத் தடுப்பரண்களில் குழுக் குழுவாக 'ஆர்.பி.ஜி' உந்துகணைச் செலுத்திகளை தோளில் தாங்கியபடி அவற்றின் தொலைக் காட்சிகளுக்குள்ளால் இலக்குகளைத் தேடினார்கள்.

இப்போது கண்டி-யாழ். வீதியின் இடது புறத்தே எங்களது காப்பரண்களை நோக்கி ஒன்றன்பின் ஒன்றாக டாங்கிகள் நெருங்கி வருகின்றன. அந்த டாங்கிகளின் இரும்புச் சங்கிலிகள் நிலத்தைக் கிளறி மண்ணை அள்ளி வீசின. அவை எங்களின் பதுங்குகுழிகளை நோக்கி தங்களின் சுடுகுழல்களைத் திருப்புகின்றன. அதன்பின், எங்களது தடுப்பரண்களை அவை குறிவைத்துத் தாக்கிய போது அங்கே பெருஞ் சண்டை ஆரம்பித்தது.

ஆர்.பி.ஜி.யைத் தாங்கிய அருள்மணியின் குழு அவற்றை எதிர்கொள்கின்றது. அருள்மணியின் சூட்டாளன் டாங்கியைத் தாக்க முயற்சித்தான். புழுதியும் புகை மண்டலமும் அவன் பார்வைப் புலத்திற்குக் கட்டுப்போட்டன. அவன் அவற்றையும் மீறி முதலாவது டாங்கியைத் தாக்கினான். அது வெடித்து எரிந்துகொண்டிருந்தது. அருள்மணி அந்தச் செய்தியைக் களத்திடையே நின்று வழிநடத்திய தளபதிக்கு அறிவிக்க தொலைத்தொடர்புக் கருவியை இயக்கியபோது, அவனது குரலின் சத்தத்தினை மீறி டாங்கிகளின் இரைச்சலும், குண்டுகளின் அதிர்வுகளுமே கேட்டுக்கொண்டிருந்தன.

டாங்கி ஒன்று அழிந்தபோதும், அந்தப் பகுதியை நோக்கி இன்னும் இரண்டு டாங்கிகள் நெருங்கி வந்தது. அவை இடைவிடாது எறிகணைகளைக் கொட்டித் தீர்த்தபோதும்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்தடுத்து இரண்டு டாங்கிகளுக்குத் தாக்கியதால் அவை புகைந்து கொண்டிருக்க எதிரி அவற்றை மீட்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தான்.

ஆனால், எரிந்துகொண்டிருந்த கவசங்களைத் தாக்கிய அருள்மணியும் அவனது குழுவினரும் காயமடைந்திருந்தனர். அந்த நிலையிலும் அவற்றை அழிப்பதற்காகத் துடித்துக்கொண்டிருந்தான் அருள்மணி.

இதே நேரம் மூன்று டாங்கிகள் தங்கள் செயற்திறனை இழந்து போனபோதும், தீச்சுடரில் மோதி எரிந்தழியும் விட்டில்பூச்சிகளைப் போல மீண்டும் கண்டி-யாழ். வீதிக்கு நெத்திமுட்டாக தனது கவசங்களின் ஒரு பகுதியை ஒருங்கிணைத்து ஒரே மூச்சாக முன்நகர்த்தினான் எதிரி.

அவற்றை இப்போது அருள்மணியின் குழு எதிர்கொள்கின்றது. எதிரி டாங்கிகளை முன்நகர்த்திய வேளையிலேயே எறிகணைகளையும், ரவைகளையும் இடைவிடாது மூர்க்கமாய்ப் பொழிந்து கொண்டிருந்தான். அந்த நிலம் முழுவதும் அதிர்ந்து கொண்டிருந்ததால் தோளில் 'ஆர்.பி.ஜி' உந்துகணையை வைத்த போதும் இலக்கை இணைக்கக் கடினமாயிருந்தது. ஆனாலும் தாக்கினார்கள்.

டாங்கி ஒன்று புகைந்த பின் இப்போது எரிந்துகொண்டிருந்தது. எரிந்துகொண்டிருந்த டாங்கிக்குள் இருந்த எறிகணைகள் பெரும் சத்தத்துடன் வெடித்துச் சிதறி செந்நிறத்துகள்களாக இரும்புத் துண்டங்கள் தரையில் வீழ்ந்தன.

செயலற்றுப் போனவை தவிர்ந்த ஏனைய கவசங்கள் மூர்க்கமாய்த் தாக்கின. அந்தத் தாக்குதலிற்குள்ளும் தாக்குப்பிடித்து மேலும் இரு டாங்கிகளை அடித்துச் சேதப்படுத்திய போதும், எதிரி தன் முயற்சியில் இன்னமும் தளரவில்லை. ஆனால், தொடர்ச்சியான தாக்குதலில் அருள்மணியின் நிலை எதிரியின் கண்களுக்குள் சிக்கியதால் அந்தப்பகுதி மீது அவன் ஒருமித்துத் தாக்கினான். அங்கே, இந்த வீரர்களில் இருந்து குருதி வெளியேறிக் கொண்டிருந்தது, உயிரும் அது போலவே.

களத்தின் நிலைமையைப் புரிந்துகொண்ட தளபதி வேகமாக அந்த இடத்திற்கு மற்றுமோர் திட்டத்தை செயற்படுத்தினார்.

முன்னேறிக்கொண்டிருந்த டாங்கிகளை இலக்குவைத்து இப்போது அகழ்நெஞ்சன் ஓடிக்கொண்டிருந்தான். அங்கே அவன்முன் குண்டுச் சிதறல்கள் மரங்களை முறித்து விழுத்தின. வெடித்துச் சிதறி வெப்பம் ஆறாமல் கிடந்த சிதறுதுண்டங்களும், சித்திரை மாதத்துச் சூரியனின் வெப்பக்கதிர்களும், எல்லாவற்றிற்கும் மேலாய் எதிரியிடம் வீழ்ந்து செல்லும் ஒவ்வொரு துளிமண்ணையும் இழப்பதான நெஞ்சத்து அனலும் வீச அவன் தன் குழுவையும் அழைத்துக்கொண்டு வேகமாய் ஓடினான்.

அந்த வேகத்துடனேயே அவன் எஞ்சிய இலக்குகளை அழிக்கத் தொடங்கினான். 'அகழ்நெஞ்சன் விடக்கூடாது, எப்பிடியும் நீங்கள் ராங்கை வரவிடக்கூடாது' தளபதியிடம் இருந்து வந்த வார்த்தைகளின் ஆழத்தைப் புரிந்த அகழ்நெஞ்சன் 'இல்லையண்ணை உங்கட பக்கமா 'ராங்' வாறதா இருந்தா அது என்ர சாவுக்குப் பிறகுதான்' என்று உறுதியாகச் சொன்னான்.

அகழ்நெஞ்சனின் சூட்டாளன் எமது தடுப்பரண்களுக்குள் ஊடுருவ முயற்சித்துக் கொண்டிருந்த டாங்கி ஒன்றை அடித்து நிறுத்தினான். அது எரிந்த வண்ணமிருந்தது.

இதேவேளை, களமுனையில் எதிரியின் கவசப்படையின் பலம் இப்போது வெகுவாகக் குறைந்தபோதும், மீண்டும் கண்டி-யாழ். வீதியின் இடதுபுறம் எமது தடுப்பரண்களைக் கவசங்கள் நெருங்குகின்றன. அங்கே விழுப்புண்பட்ட அருள்மணி நிலத்திலிருந்து எழமுடியாமல் துடித்துக் கொண்டிருந்தான். அங்கே அவனைத் தூக்கும் நிலையில் தோழர்களும் இல்லை. அவன் தன்னால் இயலாத வேளையில், அந்தச் செய்தியைத் தளபதிக்குச் சொல்லிவிட தொலைத்தொடர்புக் கருவியை இயக்க முயற்சித்து முடியாமல்போக, அவன் முன்னே வந்த டாங்கி அவனை நெருங்குகின்றது. அவனது கரங்கள் அந்த டாங்கியை அழிக்கத் துடித்த போதும், அவனால் அது முடியாமல்போனது. அந்த டாங்கி அவனின் மேல் ஏறி எங்களின் காப்பரண்களுக்கூடாக உள்நுழைகின்றது. அதனுடன் துருப்புக்களும்....

அகழ்நெஞ்சனின் சூட்டாளன் ஒரு டாங்கியைத் தாக்கிய மறுகணங்களில் புண்பட்டு விழ அகழ்நெஞ்சன் அந்த ஆர்.பி.ஜி.யை தன் தோளில் ஏந்தி இலக்கினைத் தேடியபோது, அங்கே அவனுக்குப் பின்னே எங்களின் பகுதிக்குள் துருப்புக்களின் நடுவே இருகவசங்கள் சுழல் மேடையைச் சுற்றியபடி இலக்குகளை இணைத்துக் கொண்டிருந்தன. அவன் நிதானமிழக்காது, அந்தக் கவசங்கள் மீது துல்லியமாகக் குறிபார்த்துச் சுட்டான்.

ஒன்று தீப்பற்றி எரிய மற்றையது சேதமடைந்தது. அதன்பின், அகழ்நெஞ்சன் விழுப்புண்பட அவன் உணர்விழந்து கொண்டிருந்தான்.

இத்தனை இழப்புக்களைச் சந்தித்த பின்னரும், அந்தப் பாதையை இணைத்துவிட வேண்டுமென எதிரி துடித்துக் கொண்டிருந்தான். அதற்காக எஞ்சியிருந்த கற்பனைகளைக்கொண்டும் எஞ்சியிருந்த டாங்கிகளைக் கொண்டும் தொடர்ந்தும் தாக்க முயற்சித்தான்.

எங்களது நிலத்தை அபகரித்துத் தக்கவைப்பதற்கு எதிரிக்கு இத்தனை துடிப்பென்றால், எங்களது தாய்நிலத்தைக் காப்பதற்கு எமக்கு எத்தனை துடிப்பிருக்கும் என்பதை எதிரி இந்தச் சந்தர்ப்பத்திலும் மறந்துதான் போனான்.

புதிதாக இப்போது மனோ தன் குழுவையும் அழைத்துக்கொண்டு ஓடினான். ஆனால், எறிகணைகளின் புகைமண்டலத்தால் அவன் இடத்தை இனங்காண முடியாமல், எதிரியின் பிரதேசத்திற்குள் சென்று அவனுடன் சண்டையிட்டுச் சாதுரியமாய்த் தப்பித்து, மீண்டும் தன் இலக்கு நோக்கி ஓடினான். 'அண்ணை நான் போய்க்கொண்டிருக்கிறன். ஆனா எனக்கொன்றும் தெரியேல்லை' அவன் மீண்டும் மீண்டும் அதையே சொல்லிக் கொண்டிருந்தான். ஆனாலும், அவன் டாங்கிகளின் இரைச்சலை நோக்கி ஓடினான். அவன் டாங்கியை இனங்கண்டுகொண்டு தன் சூட்டாளனுக்கு அதைக் காண்பித்துக் கொண்டிருக்கும்போதே அந்த டாங்கி அவர்களைக் குறிவைத்துத் தாக்கியது. அதனால், அவர்கள் இருவரும் காயமடைந்தனர். மனோவின் சூட்டாளன் தன் காயத்திலிருந்து குருதி வழிந்த போதும், தன் சக்திகளை ஒன்றுதிரட்டி அந்த டாங்கி மீது ஒரு ஆர்.பி.ஜி. எறிகணையைச் செலுத்தியபோது அது புகைந்து பின்னர் தீப்பற்றி எரிந்தது. இப்போது எரிந்து கொண்டிருக்கும் டாங்கியைப் பார்க்க மனோ உயிருடன் இருக்கவில்லை.

அதன்பின், மனோவின் சூட்டாளன் தன் காயங்களுக்கு இரத்தத்தடுப்புத் துணியைக் கட்டிவிட்டு மீண்டும் இலக்கிற்காகக் காத்திருந்தபோது 'பவள்' கவசவாகனமொன்று அவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தது. காயமடைந்து இரத்தம் வெளியேறியதால் அவன் உடல் சோர்வாயிருந்தது. அவன் மீண்டும் ஆர்.பி.ஜி.யை தோளில் தாங்கி சிறிது தூரம் நகர்ந்து, அந்த பவள் கவசவாகனம் மீதும் தாக்கினான். அது செயலற்றுப்போக எதிரி அந்தக் கவசவாகனத்தைக் கட்டி இழுத்துக்கொண்டு சென்று கொண்டிருந்தான்.

இதேநேரம் புகைந்தபடி இருந்த டாங்கி ஒன்றை மீட்கவந்த துருப்புக்காவி தாக்குதலிற்குள்ளாகி வெடித்து எரியத்தொடங்கியது. இப்போது எதிரியிடம் எஞ்சியிருந்த கற்பனைகளும் அதனுடன் சேர்ந்து எரிந்தன.

காலையிலிருந்து மாலைவரை நடந்த சண்டையில் எதிரியின் கவசப்படை சந்தித்த இழப்பை அவனால் ஏற்றுக்கொள்ளவும், நம்பவும் முடியவில்லை. அன்றைய நாளுடன் அவனின் ஆனையிறவினையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் கனவிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

விக்ரர் விசேட கவச எதிர்ப்பு அணி இந்நாளில் தன் 14 புதல்வர்களை இழந்தது. ஆனாலும், அந்த வீரர்கள் குருதி சிந்திய மண் இப்போதும் பத்திரமாய் இருக்கின்றது.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலிகள் இயக்கம் மீதான பிரிட்ட
# சமாதான வழிக்கு ஒரு த

பிரித்தானிய அரசு புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடை செய்யப்படவுள்ள வெளிநாட்டு அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் இணைத்துக் கொண்டுள்ளமை தமிழ் மக்களுக்கு ஓரளவு ஏமாற்றம் அளிக்கும் ஒன்றாகவே இருந்தது. ஆனால், அது ஒரு அதிர்ச்சி அளிக்கும் விடயமாக இருந்தது என்று சொல்வதற்கில்லை.

தமிழ் மக்களின் அனைத்துத் தரப்பினரும் விடுதலைப் புலிகள் இயக்கம் மீது பிரித்தானிய அரசு தடை விதிக்கக்கூடாது என்ற கோரிக்கையை பல்வேறு வடிவில் பல்வேறு தரப்பினரிடமும் விடுத்திருந்தனர். தமிழ்ப் பிரதேசம் எங்கும் நடத்தப்பட்ட பொங்குதமிழ் நிகழ்ச்சிகள், கையெழுத்து வேட்டைகள், சிறீலங்காவிற்கான பிரித்தானியத் தூதருக்கான கடிதங்கள், பிரித்தானிய பிரதம மந்திரிக்கான கடிதங்கள், கொழும்பிலுள்ள இராஜதந்திரிகள் மற்றும் இலங்கைக்கு விஜயம் செய்த இராஜதந்திரிகள் மற்றும் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடனான சந்திப்புக்கள் என்பனவற்றின் மூலம் இக்கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

இவை ஒருபுறம் இருக்க, இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பான விவகாரத்தில் பிரித்தானிய அரசிற்குச் சில தார்மீகக் கடமைகளும், பொறுப்புக்களும் உண்டு எனவும் தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். அரசியல் சித்தாந்தத்தில் 'தார்மீகம்', 'நீதி' என்பவை எல்லாம் இரண்டாம் பட்சமானது என்பது தமிழ் மக்களுக்குத் தெரியாதவையல்ல.

இதனாலேயே பிரித்தானிய அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்ய முற்படுகின்றமை அதிர்ச்சியூட்டும் ஒன்றாகத் தமிழ் மக்களுக்கு இருந்ததில்லை. ஏனெனில், பிரித்தானியாவின் கடந்தகால வரலாறும், தற்போதைய அதன் வெளியுறவுக் கொள்கையும் அதிர்ச்சி ஏற்படாமல் போனமைக்குக் காரணமாகும்.

பிரித்தானியா தன்னை ஜனநாயகத்தின் தாயகமாகவும், பாதுகாவலனாகவும் கூறிக் கொண்டாலும், அதன் கடந்த கால வரலாற்றில் பல ஒடுக்குமுறை அரசுகளுக்கு அது ஆதரவாகவே இருந்துள்ளது. அதிலும், குறிப்பாக ஜனநாயக விரோத அரசுகளாக இருந்துள்ள தென்னாபிரிக்க, சிம்பாப்பே சிறுபான்மை இனவெறி அரசுகளின் பாதுகாவலனாக அது இருந்துள்ளது.

இதனைத்தவிர, விடுதலைப் போராட்டங்களுக்கு எதிராக அடக்குமுறை அரசுகளுக்கும், ஆட்சியாளர்களுக்கும் ஆதரவாகவும் அது செயற்பட்டு வந்துள்ளமை ஒன்றும் புதியதல்ல. இந்தவகையில் பாலஸ்தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேலின் ஒடுக்குமுறைக்கு இவர்களின் அங்கீகாரம் இருந்து வந்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

இவை ஒருபுறம் இருக்க, ஜனநாயகம் என்ற ரீதியில் பெரும்பான்மையினரின் சர்வாதிகாரத்திற்கும், இடதுசாரிகளுக்கு எதிரான நிலைப்பாடு என்ற ரீதியிலும் தீவிர வலதுசாரிகளுக்கும், ஒடுக்குமுறையாளருக்கும் குறிப்பாக முடியாட்சிகளுக்கும், இராணுவ ஆட்சிகளுக்கும் பிரித்தானியா ஆதரவு கொடுத்து வந்துள்ளமை மறந்துபோய்விட்ட விடயமல்ல.

இதனைத்தவிர, அண்மைய அரசியல் வரலாற்றில் அமெரிக்காவின் நிலைப்பாட்டையே தனது நிலைப்பாடாகப் பிரிட்டன் கொண்டுள்ளமையும், அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையின் வழியே பிரிட்டன் சென்று கொண்டிருப்பதும் எவருக்கும் புரியாததுமல்ல. ஆகையினால், அமெரிக்கா புலிகளைத் தடைசெய்துள்ள நிலையில், பிரித்தானியா விடுதலைப் புலிகள் விடயத்தில் தார்மீகத்தின் அடிப்படையிலோ அன்றி நீதியின்பாற்பட்டோ தீர்மானத்தை மேற்கொள்ளும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

ஆகையினால், பிரித்தானியா தடைசெய்யும் அமைப்புகளின் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பையும் உள்ளடக்கியுள்ளமை தமிழ் மக்களைப் பொறுத்து ஆச்சரியமளிக்கும் ஒன்றாக இருக்கவில்லை. இதேசமயம் இத்தடையானது தமிழ் மக்கள் பிரித்தானியா மீது மேலும் அவநம்பிக்கைகொள்ளவும், இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் அதன் பாத்திரத்தை கேள்விக்குள்ளாக்கும் நிலையையுமே தோற்றுவித்துள்ளது.

அத்தோடு, பிரித்தானிய தடை விவகாரத்திற்கு அளவிற்கு அதிகமான முதன்மை அளிக்கப்பட்டுவிட்டது என்பதே உண்மையாகும். சிங்களப்பேரினவாத ஆட்சியாளர்கள் பிரித்தானியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்படின் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஏதோ முடிவுக்கு வந்துவிடும் எனவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற்பாடு முற்றாக இல்லாது ஒழிந்து, இயக்கமே செயலிழந்து போய்விடும் என்பது போன்றும் பெரும் பிரச்சாரத்தில் இறங்கியிருந்தமையே அதிக முக்கியத்துவத்திற்குக் காரணமாகும்.

ஆனால், சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் இவ்வாறான தோற்றப்பாடு ஒன்றை உருவாக்குவதற்கு முனைவதானது அவர்கள் சந்தித்துவரும் அரசியல் இராஜதந்திர நெருக்கடிகளும், இராணுவரீதியில் தாம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கான அங்கீகாரத்தைத் தேடுவதற்குமே ஆகும். இதனைத்தவிர, இத்தடை விவகாரத்தில் பெரும் அனுகூலங்களைச் சிறீலங்கா அரசு கூறுவது போன்று பெற்றுக்கொள்ளுதல் முடியாது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பொறுத்து இத்தடையானது பிரித்தானியாவில் அதன் அரசியல்ரீதியிலான செயற்பாட்டில், சில இடையூறுகளை விளைவிப்பதாக இருக்கலாம். ஆனால், சிறீலங்காவின் பேரினவாத ஆட்சியாளர்கள் இன்று பிரச்சாரப்படுத்துவதுபோன்று விடுதலைப் புலிகள் இயக்கம் என்றுமே சந்திக்காததொரு பாரிய நெருக்கடியைச் சந்தித்துள்ளது போன்றும், விடுதலைப் புலிகள் இயக்கம் முன்னர்போல் இனி செயற்படுவதென்பது இயலாது போய்விடும் என்பதும் அர்த்தமற்ற யதார்த்தத்திற்கு மாறான பேச்சாகும்.

அண்டை நாடான இந்தியாவின் தடையையும் மீறி விடுதலைப் புலிகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இராணுவ அரசியல் இராஜதந்திர வழிகளில் திறம்பட முன்னெடுத்திருந்தனர் என்பது வரலாறு. இதன் வெளிப்பாடே இன்று இனப்பிரச்சினைத் தீர்விற்கு சர்வதேச மத்தியஸ்தம் அவசியம், சர்வதேச தலையீடு இன்றி பிரச்சினை தீர்ப்பதற்கான வாய்ப்பும் இல்லை என்ற நிலைமைக்கான ஏதுவாகியது.

சிறீலங்காவைப் பொறுத்து பிரித்தானியாவில் கிடைக்கும் பெரும் தொகையான நிதி... விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவும், அவற்றைக் கடல் மார்க்கமாக இலங்கைக்குள் கொண்டுவந்து சேர்க்கவும் உதவுகின்றது என்பதாகும். ஆகையினால், பிரித்தானியாவில் புலிகள் மீது தடை வருமானால் நிதிவளம் வற்றிப்போக புலிகள் பலவீனப்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரின் தடை;
# டைக்கல்!




பட்டுப்போய்விடுவார்கள் என்பது அவர்களின் பிரச்சாரத்திற்கான அடிப்படையாகும்.

ஆனால், சிறீலங்காவின் இப்பிரச்சார மும், பிரிட்டனின் இத்தடையும் எத்தனை தூரம் இவர்களின் குறிக்கோள்களுக்கு ஒத் திசைவானதாக இருக்கும் என்பது கேள்விக் குரியதே. ஏனெனில் விடுதலைப் புலிகள் அமைப்பு பிரித்தானியாவிலும்சரி ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும்சரி நிதிவளங் களைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பதை அந்நாடுகளினால் ஆதாரபூர்வமாக ஊர்ஜி தம் செய்யமுடிந்திருக்குமானால் அவை ஏற் கனவே தடையின்றியே சட்டநடவடிக்கை களை மேற்கொள்ளக்கூடியதாக இருந்திருக் கும். ஆனால், இவ்வாறான முயற்சிகளில் இந்நாடுகள் ஏற்கனவே பலதடவைகள் முயன்று தோல்வி கண்டுள்ளன. இந்நிலை யில் தடைமூலம் எதனைச் சாதிக்க சிறீலங் காவும், பிரிட்டனும் முற்பட்டு நிற்கின்றன என்பது கேள்விக்குரியது.

ஆனால், இத்தடை மூலம் சிறீலங்காப் பேரினவாத ஆட்சியாளர்களுக்கு சில அனு கூலங்கள் இல்லாமலும் இல்லை. இனப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வையே முனைப் புப்படுத்திவரும் பேரினவாத ஆட்சியாளர் களுக்கு இது தென்பூட்டும் ஒன்றாக இருக் கும். இதன்மூலம் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளை முனைப்புப்படுத்தவும், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கும் ஆட்சியாளர்கள் முற்பட்டு நிற்பதற்கு இது வழிவகுப்பதாக இருக்கும்.

பிரித்தானியாவின் தடையானது பேரின வாதிகளுக்குப் பெரிதும் உற்சாகம் ஊட்டுவ தாக அமையும் என்பதில் கேள்விக்கு இட மில்லை. அதிலும் குறிப்பாக பிரிட்டனின் இத்தடையானது பௌத்த சிங்களப் பேரின வாத அமைப்புக்கள் மேலும் உற்சாகம் பெறவும், ஆட்சியாளரை இராணுவத் தீர்வை யும், இன அழிப்பையும் தொடருமாறு நிர்ப்பந்திக்கவும் உதவக்கூடும்.

மறுவளமாக இத் தடையறிவிப்பானது இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சி களுக்குப் பலமான முட்டுக்கட்டைகளை உருவாக்கும் ஒன்றாகவும் அமையக்கூடும். அத்தோடு, இனப்பிரச்சினை விவகாரத்தில் இருந்து பிரித்தானிய அரசை அந்நியப்படுத் தும் நிலைக்குக் கொண்டு சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பிரித்தானிய அரசைப் பொறுத்து இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் அது தனது அக்கறையை வெளிப்படுத்தி யிருந்ததோடு, மத்தியஸ்தருக்குரிய பாத் திரத்தை வகிக்க முனைந்தது, விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது குறித்து ஆராய்ந்து கொண்டிருந்த காலகட் டத்திலேயே இவ்வாறான அபிப்பிராயத்தை பிரிட்டன் வெளிப்படுத்தியிருந்தது. ஆனால், அது தமிழ் மக்களின் போராட்டத்தில் உள்ள நியாயப்பாட்டின் அடிப்படையில் தனது அக்கறைகளை வெளிப்படுத்தவில்லை. அமெரிக்கா தலைமையில் உருவாக்கமுனை யும் 'புதிய உலக ஒழுங்கின்' ஓர் அம் சமாகவே இவ்வாறான நிலைப்பாட்டை பிரித் தானியா எடுத்திருந்தது என்பதே உண்மை யாகும்.

விடுதலைப் புலிகள் பிரித்தானியா ஆற்ற வேண்டிய பங்களிப்பிற்கு தமது ஆதரவைத் தெரிவித்திருந்தபோதும், பிரித்தானிய அரசு புலிகள் மீது விதித்த தடை மூலம் அதனை நிராகரித்துவிட்டது என்றே கூறலாம். பிரித்தானியா தடைவிதித்த பின்னரும் புலிகள் நோர்வேயின் சமாதான முயற்சி களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என அறிவித்திருப்பினும், பிரிட்டனுடனான உறவு எவ்வாறு அமையும் என்பதை பிரிட்டன் தடை விடயத்தில் எவ்வாறு நடந்து கொள் கின்றது என்பதைப் பொறுத்தே தீர்மானிக் கப்படும் என்பதைச் சுட்டிக்காட்டியதில் இருந்தே புரிந்துகொள்ள முடியும்.

தடையானது இலங்கை இனப்பிரச் சினைக்கு அரசியல் தீர்வு என்பதையும், இலங்கையில் சமாதானத்தை உருவாக்கு தல் என்பதுமான நிலைப்பாட்டையும் பல வீனமானதாக்கிவிடும். இந்தவகையில் பிரிட் டனின் தடையானது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்ற சிந்தனைக்கு மாறான தாகச் சமாதானத்தைத் தொலைவிற்குத் தள்ளியுள்ளது என்றே கூறலாம். இது இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்ற பிரிட்டனின் அறிவிப்பிற்கு மறு தலையானதாகவே இருக்கமுடியும்.

ஒட்டுமொத்தத்தில் பிரித்தானியாவின் தடையானது சிறீலங்கா ஆட்சியாளர்களை மேலும் இராணுவத்தீர்வில் நாட்டம் காணச்செய்து சிறீலங்காவை மீளமுடியாத நெருக்கடிக்குள் மேலும் தள்ளுவதாகவே இருக்கும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிலிப்பைன்ஸ் தேசம் 7100 தீவுகளைக் கொண்ட தேசம். இதில் 1000 தீவுகளில் மாத்திரமே மக்கள் வாழ்கின்றனர். இவை மூன்று பெரிய பிரிவுகளாக உள்ளது. அவை லுசோன், விசாயா, மின்டானோ என்பனவே அப்பிரிவுகளாகும்.

பிலிப்பைன்சின் தெற்குப் பகுதியில் 12 மில்லியன் மொறோ மக்கள் வாழ்கின்றனர். அவர்களுடைய பாரம்பரியத் தாயகப் பகுதிகளாக பிலிப்பைன்ஸின் இரண்டாவது பெரிய தீவான மின்டானோ, பசிலன், சூலு ஆர்ச்சிபலாகோ, பலவான் ஆகிய தீவுகள் விளங்குகின்றன. பிலிப்பைன்ஸ் என்ற தேசம் உருவாகுதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பங்சா மொறோ தேச மக்கள் சுயாட்சியோடு இருந்துள்ளனர். மொறோ தேசத்தின் பரப்பளவு 116,896 சதுர கிலோ மீற்றராகும்.



# மின்டா

## பங்சா மொறோ தாயக

13ஆம் நூற்றாண்டில் இவர்கள் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டனர். அதற்கு 3நூற்றாண்டுகளுக்குப் பின்னர் 1521இல் மெகல்லனின் வருகையோடு இப்பிராந்தியத்தில் கிறிஸ்த்தவம் பரவியது. இருந்த போதிலும் மொறோ மக்களிடையே கிறிஸ்த்தவம் பரவமுடியவில்லை. ஸ்பானியர் விசாயா மற்றும் லுசான் பகுதி மக்களை கிறிஸ்த்தவர்களாக மாற்றினர். மணிலாவிலிருந்த ஆட்சியாளர்களைத் தோற்கடித்த ஸ்பானியரால் பங்ஸா மொறோ பகுதியை தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரமுடியவில்லை. 1898 டிசம்பர் 25இல் பாரிஸ் ஒப்பந்தத்தின் பிரகாரம் பிலிப்பைன்ஸ் தீவுக் கூட்டம் அமெரிக்கரின் கைக்கு மாறியது.

மொறோ மக்களின் தனித்துவத்தை இல்லாமல் செய்வதற்கென 159 குடியேற்றங்கள் மின்டானோவில் அமெரிக்கர்களால் 1902-1912ற்கும் இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்டன.

மின்டானோவின் சுதந்திரப் போராட்டம் ஸ்பானியர்களின் காலத்தில் இருந்து நடைபெற்று வருகின்றது. மின்டானோ தீவின் தென்மேற்குப் பகுதியிலும், சூலு ஆர்ச்சிபலாகோ (Sulu Archipelago) பிரதேசங்களிலும் நடைபெற்று வருகின்ற கிறிஸ்தவ பிலிப்பினோக்களின் ஆக்கிரமிப்பை மொறோ மக்கள் வன்மையாக எதிர்க்கின்றனர். மொறோ மக்கள் தமது தாயகமான பங்சா மொறோவின் விடுதலையை வென்றெடுப்பதை தமது நீண்டகால இலட்சியக் கனவாகக் கொண்டுள்ளனர். மொறோ மக்கள் கிறிஸ்தவர்கள் மற்றும் வெளியாரின் ஆக்கிரமிப்பினை வன்மையாக எதிர்க்கின்றார்கள். ஸ்பானியர்கள் ஒருபோதும் பூரணமாக மொறோ மக்களை அடிமைப்படுத்திவிட முடியவில்லை. மாறாக மொறோ இஸ்லாமியர்களின் போராட்டம் அமெரிக்க காலனித்துவ காலத்தின்போதும் தொடர்ந்தது. அமெரிக்கர்களால் மொறோக்களின் போராட்ட வழிமுறைகள் பெரிதும் சிலாகித்துப் பேசப்பட்டன. 1948 இன் ஜுலை 4ஆம் திகதி அமெரிக்காவினால் வலோற்காரமாக பங்சா மொறோ தாயகம் பிலிப்பைன்ஸோடு இணைக்கப்பட்டது. பிலிப்பைன்ஸ் சுதந்திரத்தின் பின்னர் மொறோ மக்கள் தொடர்ச்சியாக மணிலாவின் ஆட்சிக்கு எதிராகப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். அது 1970களில் விடுதலைப் போராக விரிவடைந்தது.

1960களில் தெற்குப் பிலிப்பைன்ஸில் சட்டமீறல்களும் அரசிற்கெதிரான போராட்டங்களும் அதிகரித்தன. குடியேறிய கிறிஸ்தவர்களுக்கும் மொறோ மக்களுக்குமிடையே எப்போதும் மோதல் நிலையே இருந்து வந்துள்ளது. பொருளாதார, நிலம், வளங்கள் மற்றும் அரசியல் அதிகாரங்கள் இடையே இருதரப்பாருக்குமிடையே பலத்த போட்டி. வடக்கேயிருந்து வந்த கிறிஸ்தவ பிலிப்பினோக்களின் அதிகரிப்பும் மொறோ மக்களிடை பலத்த பயப்பீதியை ஏற்படுத்தியுள்ளது. தமது தாய்நிலத்திலேயே தாங்கள் சிறுபான்மையினராகி விடுவோம் என்ற அச்சமே மொறோ மக்களிடையே எழுந்து நிற்கின்றது. 1972இன் நடுப்பகுதியில் மின்டானோ தீவும், அதன் அயலிலுள்ள சூலு ஆர்ச்சிபலாகோ தீவும் தாம் பூரணமாகப் பிரிந்து செல்லும் உரிமையைக் கோரின. 1972 செப்டெம்பர் மாதம் பிலிப்பைன்ஸ் அரசால் மார்சல்லோ எனப்படும் சர்வாதிகாரச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது.

பல்வேறு விடுதலை அமைப்புக்கள் மொறோ மக்களிடைய தோன்றின. நூர் மெசௌரி (Nur Misuari) தலைமையிலான மொறோ தேசிய விடுதலை முன்னணி (Moro National Liberation Front- MNLF) சக்தி மிக்க விடுதலை அமைப்பாக உருவெடுத்தது. பெருமளவிலான சிறிய அமைப்புக்கள் அனைத்தும் இந்த அமைப்போடு இணைந்து கொண்டனர். லிபியாவிலிருந்தும், மலேசியாவிலிருந்தும் திரும்பிய கல்விமான்களில் பலர் விடுதலைப் போரை ஆதரித்தனர். 1973-75 காலப்பகுதிகளில் விடுதலைக்கான போர் என்றுமில்லாத அளவிற்கு உச்சநிலையை அடைந்தது. MNLFஇன் இராணுவப் பிரிவான பங்சா மொறோ இராணுவம் 30,000 போராளிகளைக் கொண்டிருந்தது. பிலிப்பைன்ஸ் இராணுவத்தின் 70-80 வீத பலம் மொறோ மக்களிற்கு எதிராகத் திருப்பிவிடப்பட்டது. 50,000ற்கும் மேற்பட்ட மொறோ மக்கள் கொல்லப்பட்டனர். 1976இல் மலேசியாவிலிருந்து ஆயுதங்கள் வருவது குறைந்ததும் சற்றே மொறோ விடுதலைப் போராட்டம் சிறிது பின்னடைவைச் சந்தித்தது.

1976இல் இஸ்லாமிய நாடுகளின் ஒத்துழைப்போடு மொறோ விடுதலைப் போராளிகளுக்கும், பிலிப்பைன்ஸ் அரசிற்குமிடையே



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிச்சயிக்கப்பட்ட தேசம்



## ...னா

–அனித்தா–



காசிம் சலாமட்

பேச்சுக்கள் ஆரம்பமாயின. பேச்சுக்களின் விளைவாய் லிபியத் தலைநகர் திரிப்பொலியில் ஒப்பந்தம் MNLFற்கும் பிலிப்பைன்ஸ் அரசிற்குமிடையே ஏற்பட்டது. அதன்பிரகாரம் தென் பிலிப்பைன்ஸில் மொறோ சுயநிர்ணய சபை உருவாக்கப்படுவது எனவும் அதற்குப் பதிலாக தெற்குப் பிலிப்பைன்ஸில் யுத்த நிறுத்தம் செய்யப்படுவதெனவும் முடிவெடுக்கப்பட்டது. சிறிதுகால போர் ஓய்விற்குப் பின்னர் ஒப்பந்தத்தின் பிரகாரம் எதுவும் நடைபெறாத காரணத்தால் போராளிகள் போரில் குதிக்க வேண்டியதாயிற்று.

ஆனால் மீளவும் மொறோ புரட்சியாளர்களால் உத்வேகமாகப் போரினைத் தொடர முடியவில்லை. MNLF இன் சீரழிவிற்கு அதனிடையே ஏற்பட்ட பிளவுகளும் வேறுபாடுகளுமே காரணமாகும். MNLF மூன்றாக உடைந்தது. முதலாவது உடைவு 1977இல் ஏற்பட்டது. காசிம் சலாமட் தலைமையிலான அணியினர் பிரிந்து மொறோ இஸ்லாமிய விடுதலை முன்னணியை (Moro Islamic Liberation Front- MILF) உருவாக்கினர். இந்த அமைப்பினரை மகின்டனாஸ் இன மின்டானோ தீவு வாழ் மக்கள் ஆதரித்தனர்.

மெசௌரி அவர்களுடைய பிரதான அமைப்பிலிருந்து மற்றொரு இனக்குழுவினரான மின்டானோ மறானோஸ் பிரிந்து பங்சா மொறோ விடுதலை அமைப்பு என்ற அமைப்பினை உருவாக்கினர். இறுதியாக மெசௌரியின் அமைப்பில் சூலூத் தீவின் டௌசா(Tausug) குழுவினரே எஞ்சினர். பங்சா மொறோ விடுதலை அமைப்பிலும் உடைவுகள் ஏற்பட்டு அதிலிருந்து பிரிந்தவர்கள் மொறோ தேசிய விடுதலை முன்னணியின் புரட்சிகரக் குழு எனும் பெயரில் அமைப்பொன்றினை உருவாக்கினர்.

தொடர் பிளவுகளின் காரணமாக 1983இல் விடுதலைப் போராளிகளின் எண்ணிக்கை 15,000மாகக் குறைந்தது. 1986இல் ஆட்சிக்கு வந்த அக்கினோ அம்மையார் போராளிக்குழுக்களோடு பேச்சுக்கள் நடத்தி நாட்டின் நிலைமையை சீர்செய்யப்போவதாக அறிவித்தார். 1986இன் நடுப்பகுதியில் மூன்று பிரதான போராளி அமைப்புக்களோடும் பேச்சுக்களை நடத்தினார். இதன் விளைவாக 1986 மார்கழி மாதத்தில் போர்நிறுத்தம் தென் பிலிப்பைன்ஸ் பிராந்தியத்தில் நிலவியது. 1987 ஜனவரியில் MNLF இற்கும் அக்கினோ அம்மையாரின் அரசாங்கத்திற்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் இஸ்லாமிய மொறோ இன மக்கள் வாழும் மாநிலங்கள் அனைத்தையும் இணைத்து சுயாட்சிப் பிராந்தியத்திற்கு அரசு ஒப்புக்கொண்டது. விடுதலை அமைப்புக்களில் அடுத்த பெரிய அமைப்பான சலாட் காசிமின் மொறோ இஸ்லாமிய விடுதலை முன்னணி இந்த ஏற்பாட்டை நிராகரித்ததோடு போர்நிறுத்தத்தை முடிவிற்கு கொண்டு வந்து தாக்குதலை ஆரம்பித்தது. 1987இல் பேச்சுக்கள் தொடர்பில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டது. இறுதியில் MNLF 1988 பெப்ரவரியில் மீள ஆயுதப் போராட்டத்திற்கு தனது துருப்புக்களுக்கு உத்தரவிட்டது.

இதனால் அக்கினோ அம்மையாரின் அரசு விடுதலை அமைப்புக்கள் எதுவுமில்லாமல் சுயநிர்ணயசபை ஒன்றை உருவாக்குவதற்கு திட்டமிட்டது. 1987இன் அரச சீரமைப்பின் 10வது சரத்தின் பிரகாரம் இஸ்லாமிய மின்டானோ சுயநிர்ணய கவுன்சில் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு 1990 நவம்பர் 6ஆம் திகதி ஆரம்பமான போதிலும் இச்சுயநிர்ணய சபையானது மொறோ மக்களது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யத்தக்கதாக இருக்கவில்லை. 1996 செப்டெம்பர் 2ஆம் திகதி மீளவும் வெளியெடுக்கப்பட்டு MNLFஇற்கும் அரசிற்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. ஆனால் இதனால் எவ்வித பலனுமில்லை என தனித்தாயகமே இறுதி முடிவென நிற்கும் மொறோ இஸ்லாமிய விடுதலை முன்னணி போரைத் தொடர்கின்றது. MNLF இந்த ஒப்பந்தத்தை ஒத்துக்கொண்டு சுயநிர்ணய சபையை ஏற்றுக்கொண்டாலும், மொறோ இஸ்லாமிய விடுதலை முன்னணி பாரம்பரிய தாயகத்தின் ஐந்திலொரு பங்கை தனது கட்டுபாட்டில் வைத்துக்கொண்டு தொடர்ந்து மீட்பில் முனைப்பு காட்டுகின்றது.

தளராத துணிவோடு பல பின்னடைவுகள் வந்தாலும் மொறோ மக்கள் தமது தாயகமான பங்சாமொறோவின் பூரண விடுதலைக்காக போராடுகின்றனர். ஏறக்குறைய 479 வருடங்கள் சலிக்காமல் விடுதலைப் போரை நடத்துகின்றனர். பிலிப்பைன்ஸ் அரச படைகளின் தாக்குதல்களால் இதுவரைக்கும் 120,000 மொறோ மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இலட்சியத்தால் ஒன்றுபட்ட மக்களை எந்தவொரு சக்தியாலும் அழிக்கமுடியாது.

## ...த்திற்கான 5 நூற்றாண்டுப் போராட்டம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'இன்று ஆக்க இலக்கியத்தின் மையம் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பை மையப்படுத்திய கிழக்கு மாகாணத்தை நோக்கி மாறிக்கொண்டிருக்கின்றது என்ற பரவலான கருத்துக்கு வலுவூட்டுவது போல அண்மையில் அங்கிருந்து பல கவிதைத் தொகுப்புக்கள், சிறுகதைத் தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன' என்று 1998 நவம்பரில் வெளியான ஓட்டமாவடி அரபாத் அவர்களின் 'நினைந்தழுதல்' சிறுகதைத் தொகுப்புக்கு வழங்கிய முன்னுரையில் மு.பொ. அவர்கள் குறிப்பிடுகின்றார்.

மேலும், அவர் மையப் படுத்தல் என்பது தரமற்ற தொகைகூடிய ஆக்கங்களை இங்கு குறிப்பதைவிட சிறிதள வானாலும் தரமுள்ள தொகையைக் குறிப்பதே சரியானதாக இருக்கலாம் எனவும் அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

அவ்வாறு குறிப்பிடும் மு.பொ. அவர்கள், சென்ற வருடம் வெளியான சரிநிகர் (செப் (17-23) 2000) 261 ஆவது இதழில் வன்னியில் வெளியான கவிதை நூல் தொடர்பான தனது விமர்சனக் குறிப்பில் பின்வருமாறு தன் கருத்தினை வெளிப்படுத்துகின்றார்.

'யாழ்ப்பாணத்தில், ஆரம்பத்தில் களைகட்டிய கவிதைப் போக்கு மட்டக்களப்பில் பெரிதாகப் பிரவகித்து இப்போது வன்னி நோக்கி குவிமுகம் கொண்டு வருகிறதா?'

நாடறிந்த கவிஞர் மு.பொ. அவர்களால் தெரிவிக்கப்பட்டதால் இக்கருத்து முன்னுரிமை பெறவில்லை.

ஆனால், மு.பொ. போன்ற பல படைப்பாளிகள், விமர்சகர்களின் பார்வையை தம்பக்கம் இழுப்பதில் வன்னிப்படைப்பாளிகள் கணிசமான அளவு செயற்பட்டுள்ளார்கள் என்பது வியக்கவைக்கும் ஒரு செய்தியல்ல.

'ஒரு இனத்தின் ஆண்களையும், பெண்களையும், மனிதர்களே இல்லையென மறுக்கும் ஒரு நாட்டில், மனித நிலைக்குக் கீழாக ஒரு இனத்தை அரசியலமைப்பே ஒதுக்கி வைத்திருக்கும் ஒரு நாட்டில், படைப்புச் செயல் என்பதே ஒரு மறுப்பு நடவடிக்கையாகவும் எதிர்ப்புச் செயலாகவும் அமைகின்றது. மனிதனாக இருப்பதின் அடிப்படையான அடையாளமே படைப்புத்திறன்தான். ஒருவனுடைய படைப்புத்திறனை வலியுறுத்துவது என்பதே ஒருவனின் மனிதத் தன்மையை வலியுறுத்திக்கொள்வதாகும்'

தென் ஆபிரிக்க கவிஞர் டென்னிஸ் புரூட்ஸ் அவர்கள் தென் ஆபிரிக்க விடுதலைப் போராட்ட காலத்தில் கூறிய மேற்குறித்த கருத்து ஒரு முக்கியமானதாகும்.



ஏனெனில், இன்று வன்னியில் வாழ்தல், அதாவது அந்த வாழ்தலுக்கு அடியாதாரங்களை தேடிக்கொள்வதுகூட சிங்கள அரசுக்கு எதிரான ஒரு செயற்பாடாகும்.

பொருண்மியத் தடை, மருந்து, எரிபொருள் தடைகளைத் தாண்டியும் மக்கள் வாழ்விடங்கள், பாடசாலைகள் மீது நடத்தும் வலிந்த இராணுவத் தாக்குதல்கள் இதனைத்தவிர வேறு எதனை நிரூபிக்கும்.

ஆக மொத்தத்தில் வன்னியில் மக்கள் ஒரு வாழ்வினைக்கொண்டு நடாத்துவதைப்போலவே வன்னிப்படைப்பாளிகள் எந்தச் சமயத்திலும் வீழ்ந்து கிடக்காமல் தலை நிமிர்ந்து தமது படைப்புக்களை வலிமையுடன் படைத்து வருகின்றனர்.

வீதியோரங்களிலும், மழைகொட்டும் குடிசைகளிலும் குப்பை பறக்கும் மரங்களின் கீழும் வன்னி மக்கள் வாழ்ந்தாலும், அழுகின்ற நேரத்தில் அழுதும், சிரிக்கின்ற நேரத்தில் சிரித்தும் எவ்விதம் வாழ்கின்றார்களோ அவ்விதமே வன்னிப்படைப்பாளிகளும் உள்ளனர்.

சுந்தரராமசாமி அவர்கள் புலம்பெயர் நாடுகளில் உள்ள ஈழத் தமிழர்களின் இதழ்கள் பற்றிக்குறிப்பிட்ட ஒரு விடயத்தினை இங்கு பொருத்திப் பார்ப்பது நல்லது.

'எனினும் இதழ்கள் வந்துகொண்டிருக்கிற இவற்றின் தரம் பல சமயங்களில் சீராக இல்லை என்பது உண்மைதான். வாழ்க்கையில் அவர்கள் எதிர்கொள்ளும் தத்தளிப்பை அவர்கள் நடத்தும் பத்திரிகைகள் பிரதிபலிக்கத்தான் செய்யும். இருப்பினும் பல சந்தர்ப்பங்களில் மிகச் சாதாரணமான எழுத்திற்குப் பக்கத்திலேயே மிகத் தரமான கட்டுரை ஒன்றை, மிகத் தரமான கவிதை ஒன்றை, மிகத் தரமான மொழிபெயர்ப்பு ஒன்றைப் பார்க்கக் கிடைக்கின்றது. ஆனால், எப்போதும் எல்லாத் தரத்தைச் சேர்ந்த எழுத்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துக்களுக்கும் பின்னால் நிற்பது ஒரு தீவிர மனநிலை. இங்கு நாம் தழைத்துக் கொழிக்க வைத்திருக்கும் வணிக புத்திகளுக்கு அப்பாற்பட்ட ஒரு தீவிர மன நிலை, அற்ப தமாஷ், சில்லறைத் தமாஷ், கௌபீனத்தை முண்டாகக் கட்டிக்கொள்ளும் மார்தட்டல் ஒருபோதும் இல்லை. அங்கு வாழ்க்கையைப் பற்றிய தீவிரம் விவேகத்தைக் கட்டாயப்படுத்தியிருக்கின்றது'

(காற்றில் கலந்த பேரோசை பக்கம் - 289)

வன்னிப் படைப்பாளிகளின் படைப்பாக்க திறனின் உந்துசக்தியே இந்த தீவிர மனநிலைதான்.

இந்த மனநிலைதான் வன்னிப் படைப்பாளிகளை சிங்கள அரசின் சகல ஒடுக்குமுறைகளையும் தைரியத்துடன் எதிர்கொள்ளவைக்கின்றது.

படைப்புலகத்தில் அழகாக நடனம் புரிகின்றனர்.

இன்று வன்னியில் ஒன்றன்பின் ஒன்றாக பல தொகுப்புக்கள் வெளிவருகின்றன, வரப்போகின்றன. இவற்றில் எத்தனை தோல்விப்படைப்புக்கள், எத்தனை வெற்றிப்படைப்புக்கள் என்று பார்க்க மீற்றர் கோல்களுடன் யாரும் நிற்க முடியாது.

இங்கு கவிதைத் தொகுப்புக்களைவிட சிறுகதைத் தொகுப்புக்களே அவசியம் வெளிவரவேண்டும் என்ற கருத்து சிலரால் முன்வைக்கப்பட்ட சூழ்நிலையிலேயே ஏழிற்கு மேற்பட்ட தனிக்கவிதைத் தொகுப்புக்கள் வெளிவந்துவிட்டன என்பதும் கவனத்துக்குரியன.

இங்கு ஒரு மாற்றம் நடைபெற்றுள்ளது என்பது சடுதியாக ஏற்பட்ட மாற்றம் அல்ல.

இந்தப் படைப்பாளிகளின் அநேகமான படைப்புக்கள் வன்னியில் வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளியானவை. தொகுப்புக்களை வெளியிட்ட பல படைப்பாளிகளின் பரிசோதனைப் படைப்புக்களைக்கூட வன்னியில் வெளியான பத்திரிகைகளே பிரசுரித்தன.

ஒற்றை ஒற்றையாக அவை வெளிவந்த போது, அதனைக் கண்கொண்டு பார்க்காத நம்மூர் இலக்கியவான்கள்கூட இப்போது மு.பொ. மட்டத்துக்கு வந்து புகழ்ச்சி பேசுவது முக்கியமான விடயமாகும்

மு.பொ. அவர்கள் மூன்றாவது மனிதன் இதழ் 9இல் வன்னிக் கவிஞர் சித்தாத்தனின் கவிதைத் தொகுப்பின் விமர்சனம் தொடர்பாக பின்வருமாறு தொடங்குகின்றார்.

'90களின் இறுதிப் பகுதியில் அடுத்தடுத்து வன்னியிலிருந்து வெளிவந்த கவிதைத் தொகுப்புக்கள் ஈழத்து இலக்கிய ஆர்வலரை வியக்கவைத்துள்ளன. ஒக்ரோபர் 99இல் கருணாகரனின் 'ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்' கவிதைத் தொகுதி வெளிவந்ததற்குப் பின்னர் முல்லைக் கமலின் 'மனமும் மனத்தின் பாடலும்' அமரதாஸின் 'இயல்பினை அவாவுதல்' சித்தாத்தனின் 'காலத்தின் புன்னகை' இன்னும் ஏனைய வன்னிக் கவிஞர்களின் தொகுப்பான 'ஆனையிறவு' என்று மளமள வென ஐந்து தொகுப்புக்கள் வெளி வந்துவிட்டன. ஏற்கனவே ஈழநாடு, ஈழநாதம் வெளிச்சம் பத்திரிகைகளில் அவ்வப்போது எழுதி தம்மைச் செப்பனிட்டுக் கொண்டிருந்த இக்கவிஞர்கள், இப்போது தம் படைப்புக்களை தொகுப்புக்களாக வெளியிட்டு தம் ஆளுமையை நிலைநாட்டியுள்ளனர். தொகுப்புக்கள் வன்னித் தொகுப்பாக இருந்தபோதும் படைப்புக்கள் முதிர்ச்சியின் எட்டுதலைக் காட்டுவனவாய் உள்ளதே நமது அக்கறைக்குரியதாகும்'

# னிப் படைப்பாளிகள்
# ப் முதிர்ச்சி

படைப்பாக்கத்திறன், முதிர்ச்சி எல்லாம் புகையடித்துப் பழுக்கவைக்கும் சங்கதிகள் அல்ல. எறும்பு ஊரக் கல் தேயும் சமாச்சாரம். அதாவது, மெல்ல மெல்லப் படிந்து படிந்து இறுகிப் பெருகும் விடயம்.

'கானமயிலாடக் கண்டிருந்த வான் கோழி' போலத்தான் படைப்பாளிகள் பலர் (வன்னி என்றால் என்ன, எந்த இடமாக இருந்தால் என்ன?) படைப்புலகத்திற்கு வருகின்றார்கள். ஆனால், பலர் வான் கோழிகளாகவே இருந்து விடுவதில்லை. நிஜமயில்களாக காலநகர்வில் மாறி விடுகின்றார்கள்.

சிலர் முனை மழுங்கடிக்கப்படுகின்றார்கள். வான்கோழிகளாகவே மரித்தும் போகின்றனர். மயில்களாவோர்தான்

வெளியிடப்பட்ட தொகுப்புக்களின் படைப்பாளிகள் எல்லோரும் பாஸ் கெடுபிடிகளைத் தாண்டி புஸ்பக விமானத்தில் ஒரே நேரத்தில் வன்னியில் வந்து இறங்கியவர்களும் அல்ல.

வன்னி தொடர்பாக இப்போது இலக்கிய உலகில் பேசப்படும் காலப்பகுதியினை யாழ்ப்பாண இடப்பெயர்வுக்குப் பிந்திய காலமாக எடுத்துக்கொண்டாலும், அத்தனை படைப்பாளிகளும் அதற்குப் பின்னர் தாம் எழுதிச்சேர்த்த படைப்புக்களையே தொகுதிகளாக்கியுள்ளனர்.

ஆக மொத்தத்தில் நமக்கு ஒரு உண்மை புலனாகின்றது. படைப்பாளிகள் பலரின் படைப்புக்கள் ஒரு தொகுப்பு நூலாக வந்த பின்னரே அதுபற்றிய முழுமையான மதிப்பீடு வெளிப்படுத்தப்படுகின்றது.

இந்தக் கருத்துக்கள் ஒரு தொடர் செய்முறையினையே வலியுறுத்துகின்றன.

ஆகமொத்தத்தில் இளம் படைப்பாளிகளை முளையிலேயே கருவறுக்காமல் அவர்களின் படைப்பாக்கத் திறனுக்கு துணைபுரிவதன் ஊடாக எத்தனையோ படைப்பாளிகளை வெளிக்கொண்டுவர முடியும் என்பது வெளிப்படையான உண்மை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்ற இதழ் தொடர்ச்சி

1995இல் தன் அடிப்படைப் பயிற்சியை முடித்த காலத்திலிருந்தே மருத்துவப் போராளியாகச் செயற்பட்டு வந்த லெப். எழிலினிக்கு ஓயாத அலைகள்-1 இல் ஏற்பட்ட காயத்தால் இடதுகை இயலாமல் போய்விட்டது. சட்டெனக் கோபப் படுவார். பயிற்சி நடைபெறும் வேளைகளில் தானாகவே வந்து பங்குகொள்வார். அம்பகாமத்தில் சிறப்பு நடவடிக்கைக்கென வந்து நின்ற மாலதி சிறப்புப் படையணிக்குரிய மருத்துவப் போராளியாக இவர் நின்றிருந்தார்.

மட்டக்களப்பைச் சொந்த இடமாகக் கொண்ட லெப். இளங்குமாரியும் 1995இல் தன் அடிப்படைப் பயிற்சி முடிவடைந்த நாளிலிருந்தே மருத்துவப் போராளியாகப் பணியாற்றியவர்.

சற்றே பயந்த இயல்பைக் கொண்டவர் வீரவேங்கை நிலா. ஆனால், லெப். குகப்பிரியாவை ஒருமுறை பாய்ந்து, தூக்கியது நிலாதான். தொடர்ச்சியாகப் பின்னணி விநியோக வேலைகளையே செய்து வந்தார்.

1995 கடைசியில் அடிப்படைப் பயிற்சி முடிய முன்னரே சூரியக்கதிர்-1 நடவடிக்கையை எதிர்கொண்ட 2ஆம் லெப். அனுசியா புளியங்குளத்தில் ஜெயசிக்குறுப் படைகளைத் தடுத்து நிறுத்த மிகக் கடுமையாக நாம் சண்டை செய்துகொண்டிருந்தபோது, எதிரியின் கடும் எறிகணை மழைநடுவே எங்கள் காயக்காரர் ஒருவரையும் தவற விடாமல் தூக்கிப் பின்னுக்கு அனுப்பினார். மெல்ல மெல்லத் தன்னை வளர்த்துக் கொண்டவர்.

மிகவும் சின்ன உருவம் கொண்ட வீரவேங்கை தூயவள் வேலரசி அமைதியாகப் பேசுவார். சின்னவர் என்பதாலேயே சண்டைக்கு விடப்படாமல் பின்னணி வேலைகளுக்கென விடப்பட்டிருந்தார்.

அப்போதுதான், பயிற்சி முடிந்து புதிதாகச் சண்டைக்கென வந்திருந்த வீரவேங்கை பொற்செல்வி, வீரவேங்கை சுடர் அத்தனைபேரையும் நாம் ஒன்றாக இழந்த அவலம் உன் மடியில் நடந்தேறியது. எங்களுக்குத் தாங்க முடியவில்லைத்தான். எதிரிக்குப் பதிலடி கொடுக்க நல்லதொரு வாய்ப்புக்காகக் காத்திருந்தோம். வாய்ப்பு இரண்டாவது (1998-06-05) நாளே தேடி வந்தது.

சண்டை எங்களுக்கு நேரேயே தொடங்கியது. எதிரியை மாலதி படையணியின் சிறப்புப் படையணியே எதிர்கொண்டது. நேருக்கு நேர் கடும் மோதல் தொடங்கிவிட்டது. மிக நெருக்கமாக எம் நிலைகளை அண்மித்து சண்டை செய்து கொண்டிருந்த பகைவர்களால் நீண்ட நேரமாகியும் எம்மைக் கடந்து போகமுடியாமல் இருக்கவே, எம்மைவிட்டு தம் வலப்புறமாக (ஒட்டுசுட்டான் பக்கமாக) விலகிப்போய் எம்மைக் கடக்க முயல, எம்மவர்களும் நகர்ந்து நகர்ந்து போய் தடுத்துக்கொண்டேயிருக்க, கடும் சண்டை தொடர்ந்தது. எதிரியால் அன்றைய சண்டையில் எங்களைக் கடந்து செல்ல முடியவில்லை. ஒருகட்டத்தில் எங்கள் பக்கம் சண்டையை அப்படியே நிறுத்திக்கொண்ட எதிரி, ஆண் போராளிகளின் பகுதியில் போய் முட்டத் தொடங்கினான்.

உடனடியாகவே, சண்டை நடக்கும் பகுதியை நோக்கி உதவிக்கென இங்கிருந்து ஒரு அணி புறப்பட்டது. கடும் எறிகணை வீச்சுக்கு முகம் கொடுத்தவாறு அந்த அணி தன் வேகத்தை அதிகரித்தது. தலைக்குமேல் கூவியவாறு ஒரு எறிகணை வந்தது.

நீண்டு நெடிதுயர்ந்த மரக்கிளைகளையுடைய கம்பீரமான எங்கள் நண்பனே! உன்னோடு உரசியவாறுதானே அந்த எறிகணை வந்து எம் தோழிகளிடையே விழுந்தது.

1995இன் இறுதியில் தன் அடிப்படைப் பயிற்சியை முடித்துக்கொண்ட லெப். சுபநந்தினி, தன்பின்னால் வந்த புதியவர்களுக்குப் பயிற்சி கொடுத்து அவர்களையும், அழைத்துக்கொண்டு வந்து சண்டைகளில் பங்குகொண்டார். மன்னகுளம், மூன்றுமுறிப்புப் பகுதியில் ஜெயசிக்குறுவை எதிர்கொண்டிருந்தார். மாலதி சிறப்புப் படையணியின் தடையுடைக்கும் அணியொன்றில் இருந்த இவர், அன்று உதவிக்கென விரைந்த அணியை வழிநடத்திச் சென்றார்.

லீமா 07, பாசறையில் பயிற்சி முடித்து சிறப்புப் படையணியுடன் நின்ற வீரவேங்கை காண்டீபனா நல்ல சுறுசுறுப்பான திறமையான போராளி. லெப். சுபநந்தினியுடன் உதவியணியில் ஒருவராகச் சென்றிருந்தார்.

என்றும் இளமை குன்றாத அம்பகாமவனமே! 5ஆம் திகதி எதிரியோடு மோதியவாறு நிலைகளை நாம் அகட்டியதும், அடுத்த நாள் முழுதும் தொடர்ந்து ஓய்வொழிச்சல் இல்லாது நிலைகளைப் பலப்படுத்தியவாறு அந்தக் குளத்தருகே எமது கடைசி நிலையை அமைத்துக்கொண்டதும், மறுநாள் (1998-06-07) விடிந்ததும் மறுபடி நாம் சண்டையை எதிர்கொண்டதுமான அவசர நாட்களை இனி ஒரு ஊழி வந்து உலகம் அழியும்வரை நீ மறக்கமாட்டாய் என நம்புகின்றோம்.

தூள் பறந்த சண்டை மிகக் கடினமானதும், சிக்கலானதுமான சண்டை. எதிரி அநேகமான தனது பலத்தையெல்லாம் ஒருங்குகுவித்து எம்மைத் தாக்க, நாமும் எம்மால் முடிந்தவரையிலான கடும் எதிர்ப்பைக் காட்ட நடந்த சண்டையில், வீரச்சாவும் காயங்களும் ஏற்பட்ட காவலரண்களை நாம் கைவிட்டுப் பின்னகர, அவற்றுள் எதிரி புகுந்துகொண்டான். ஒரேயொரு நிலையை மட்டும் நாம் கைவிடவில்லை. அந்த நிலையினுள் மாலதி படையணியின் சிறப்புப் படையணியின் பொறுப்பாளர், அவர்களின் மருத்துவப் போராளி மேஜர் சுமைதா, தலையில் காயமடைந்த போராளி ஒருவர், இதைவிட இரண்டு போராளிகள், நாலாபுறமும் சூழ்ந்துகொண்ட எதிரி அந்த நிலையைப் பிடிக்க முயன்றான். நெருங்குகின்ற ஒவ்வொரு இராணுவத்தையும் துவாரத்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தூடே குறிபார்த்துப் பார்த்துச் சுட்டார்கள். தேவையற்று ஒரு ரவையையும் வீணாக் கவில்லை. எதிரி இவர்களின் நிலைக்கு RPG அடித்து முடித்துவிட்டு கையெறி குண்டுகள் எறியும் தூரத்துக்கு நெருங்கி விட்டான்.

உள்ளே தலைக்காயம் அடைந்த போராளிக்குக் கட்டுப்போட்ட மேஜர் சுமைதா அவருக்கு சலைன் ஏற்றிக்கொண்டிருந்தார்.

வெளியே கடும் சண்டை நடந்துகொண்டி ருந்தது. கையெறிகுண்டுடன் நெருங்கிய இராணுவமும் துவாரத்தினூடே பார்த்துச் சுட்டுக் கொல்லப்பட்டான்.

எதிரியிடம் கைமாறிய காவலரண்களை மீளக் கைப்பற்றியவாறு ஆண் போராளி களின் அணி வந்து சந்திக்கும்வரை அந்த நிலையை அவர்கள் தக்கவைத்தவாறு நிலைமை சொல்லிக்கொண்டிருந்த வீரத்தை நீ அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் சொல் லிக் கொண்டேயிரு நண்பனே. உன்மடி யில் உதிர்ந்து காய்ந்து கிடந்த சருகுகளின் மேல் அன்று எத்தனை தோழியரின் இரத் தம் தோய்ந்தது.

ஆரம்பத்திலேயே சிறந்த வேவுப் போரா ளியாகச் செயற்பட்டுவந்த மேஜர் சுபத்திரா 1997 ஆனையிறவு-பரந்தன் ஊடுருவித் தாக் குதலின்போது வேவு நடவடிக்கையிலும் ஈடுபட்டு, சிறுத்தை மகளிர் அணியின் வழி காட்டியாகப் போயிருந்தார். ஓயாத அலை கள்-1 இலும் வேவுப் போராளியாகப் பங் கேற்றிருந்தார். சிறப்புப் படையணியில் இருந்தபோது மண்கிண்டிமலை வேவுக்குப் பொறுப்பாகப் போய்வந்தார். பதவியாச் சண்டைக்கு அணியொன்றின் பொறுப் பாளராகப் போய்வந்தார். முன்னர் இயக் கச்சியில் வேவுக்காகப் போயிருந்தபோது உள்ளங்கையில் காயமடைந்திருந்தார். ஆள் சற்றுப் பலவீனமானவர். ஆனால், பயிற்சியின்போது நீண்ட தூரங்களை பாரப் பொதிகளுடன் ஓடிமுடிப்பார். இந்தச் சண்டையில் காயக்காரரைப் பின்னுக்கு அனுப்பி, சண்டையில் நின்றவர்களுக்கான ரவை, உணவு விநியோகத்தை ஒழுங் குபடுத்திக் கொண்டிருந்தார்.

LMG, 50 கலிபர் என்பவற்றுடன் தன் ஆரம்பக் களங்களை அமைத்துக்கொண்ட கப்டன் மோகனா, மாவீரன் கப்டன் பல்ல வனின் சகோதரி. (பின்னாளில் அம்பகாமத் தில் இவர் தங்கை மேஜர் தனாவும் வீரச் சாவடைந்தார்). 1997 ஆனையிறவு- பரந் தன் ஊடுருவித் தாக்குதலுக்கு சோதியா படையணியுடன் ஒரு குழுவின் பொறுப் பாளராகப் போயிருந்தார். எழுத, வாசிக்கத் தெரியாது. கேட்டு அறிந்துகொள்ளும் திறமை அதிகம். பதவியா, கருநாட்டுக் கேணி, சாம்பன்குளம், மணலாற்று நடவடிக் கைகளில் சிறப்புப் படையணியுடன் பங்கு கொண்டிருந்தார்.

சரியான குள்ளமாக குடுகுடுவென ஓடித்திரியும் கப்டன் லலிதாவுக்கு குழந்தை களுக்கான கீச்சு கீச்சு ஷுதான் வாங்கித் தரவேண்டுமென்று தேசியத் தலைவர் சிரிப் பார். அவரின் அளவுக்கு எப்போதுமே ஷு ஒரு பிரச்சினைதான். அடிப்படைப் பயிற்சி எடுக்காமலேயே அரசியல்துறையில் பணி யாற்றி, பயிற்சி எடுத்தபின் சிலகாலம் தையல் வேலையில் ஈடுபட்டுவிட்டு படையணிக்கு வந்தார். 1997 ஆனையிறவு-பரந்தன் ஊடு ருவித் தாக்குதலுக்கு மாலதி படையணி யின் ஒரு குழுப் பொறுப்பாளராகப் போயி ருந்தார். காயமடைந்ததால் கையில் ஒரு விரல் இல்லை. மாலதி சிறப்புப் படையணி யிலும் ஒரு குழுப் பொறுப்பாளராகவே பணியாற்றினார். கல்யாணபுரச் சண்டைக் குப் போயிருந்தார்.

லெப். கேணல் மைதிலியால் வேவு வேலைக்குப் பயிற்றுவிக்கப்பட்டவர் கப்டன் கண்ணகி. வீட்டில் ஆறு ஆண் பிள்ளை களின் நடுவே பிறந்த ஒரேயொரு பெண் குழந்தை. 1997 ஆனையிறவு-பரந்தன் தாக்குதலுக்கு மேஜர் சுபத்திராவுடன் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். மாலதி சிறப்புப் படையணியில் கிளைமோர் வைத் திருந்தார். ஓயாத அலைகள்-1, கல்யாண புரம், மணலாற்றுச் சண்டைகளுக்குப் போயிருந்தார். ஆள் சரியான வளர்த்தியும் அமைதியும். திடீரெனப் பம்பலடிப்பார். இவர் முதன் முதலாக மேடையேறி நிகழ்ச்சி செய்ததே தேசியத் தலைவரின் முன்னிலையில்தான்.

கறுப்பு, குண்டு, கட்டை, பெரியவிழிகள், முள்முடி இத்தனையும் கொண்ட லெப். சூரியாவுக்கு நாங்கள் வைத்த பட்டப்பெயர் உருளைக்குத்தி. சரியான ஞாபகசக்தி, மிக நல்ல கவிதைகளை ஒரு கொப்பி நிறைய எழுதி வைத்திருக்கின் றார். சண்டைக்கெனச் சிறப் புப் படையணியினர் தடல்புட லாகப் பயிற்சிகளைச் செய்வ தும், கிலோ மீற்றர் கணக் காகப் பாரப் பொதிகளுட னும் ஒருவர் ஒன்றுக்கு மேற் பட்ட ஆயுதங்களைச் சுமந்து கொண்டும் ஆறு, குளம், காடு, மேடெல்லாம் கடந்து நடந்து செல்வதும், தாக் குதல் செய்வதும், அல்லது அங்கு ஏதோ சில காரணங் களால் அந்தத் தாக்கு தலைச் செய்யமுடியாத சூழலில் திரும்பிவந்து மறுபடியும் விடாமல் பயிற்சி செய்வதையும், அவரின் நீண்ட கவிதை ஒன்று நகைச்சுவை யோடு குறிப்பிடுகின் றது. இவர் சிறப்புப் படையணியின் அநேக நடவடிக்கை களில் பங்கு கொண்டிருக்கின் றார்.

**தொடரும்**

# அடைகாத்த வனமும் அலை எழுந்த விதமும்

-நதி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





— வைத்திய கலாநிதி எழுமதி



# பலவீனமாகக் கருதப்பட்ட பலங்க

அந்தக் காலத்தில் இருந்து 90 ஆண்டு காலப்பகுதிவரை பெண்ணியம் பற்றிய ஆய்வு நூல்களும், பொதுவான அபிப்பிராயங்களும் பெண்களுக்கு இரண்டாம் இடத்தையே ஒதுக்கியுள்ளன. ஆண்கள் வேலை செய்பவர்களாகவும், பெண்கள் வெறுமனே சமைப்பதும், படுக்கையப்பகிர்வதும்தான் என்ற ரீதியில் தொடர்ந்து சித்திரிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் இந்த நிலைப்பாடு இன்று மாறத் தொடங்கியுள்ளது. கணிசமான அளவு முன்னேற்றம் கண்டுள்ளது. இன்று பெண்கள் விமானம் ஓட்டுகின்றனர். விண்வெளிக்குச் செல்லுகின்றனர். களத்தில் ஆண்களுக்குச் சரிக்குச் சமனாக நின்று எதிரியை எதிர்த்துச் சமராடுகின்றனர். பெரிய தொழில் நிறுவனங்களை நிர்வகிக்கின்றனர். கல்லூரி முதல்வர்களாகவும், வைத்திய நிபுணர்களாகவும், கட்டிட பொறியிலாளர்களாகவும் திகழ்கின்றனர். மேலும் வயலில் ஆண்களுடன் சேர்ந்து வேலையைப் பங்கு போட்டுச் செய்கின்றனர்.

உடலமைப்புரீதியாகவும், உடற்றொழில் ரீதியாகவும் ஒரே வயதுடைய ஆண்பெண் இருபாலாரையும் ஒப்பிட்டுப்பார்க்கும் இடத்தில் உயரம், நிறை, பலம் ஆகியவற்றில், ஆண்கள் பெண்களைவிட கூடியவர்களாகவே உள்ளனர். மேலும் பெண்ணின் வாழ்க்கையில் பிரத்தியேகமாக ஏற்படுகின்ற உடற்றொழிலியல் மாற்றங்களான மாதவிடாய் வருதல், மகப்பேறு அடைதல் ஆகிய விடயங்களையும் பெண்களின் பலவீனங்களாகப் பார்க்கின்றனர். மேற்குறிப்பிட்ட இரண்டு காரணங்களையும் மனதில் நிறுத்திப் பெண்களை 2ம் இடத்தில் நிறுத்தியுள்ளனர். ஆனால் இக்காரணங்கள் அனைத்தும் பெண்களின் பலவீனம் அல்ல. அவை பலம் என்று வாதிடும் காலம் வந்துவிட்டது. இதற்குப் பல ஆய்வுகளும் உறுதுணையாக நிற்கின்றன. ஹெலன் பிஷர் ( Hellen Fisher ) என்ற பிரசித்தி பெற்ற அமெரிக்க மனித வர்க்கவியல் நிபுணர் பரிணாம வளர்ச்சியின் தொடர்ச்சியாகப் பெண் 21ம் நூற்றாண்டின் தலைவியாக வருவாளென்று எதிர்வு கூறுகின்றார். மேலும் அவர் தனது ஆய்வு நூலில் உளவியல்ரீதியாக ஆண்களிலும் பார்க்கப் பெண்கள் பல மடங்கு பலம் வாய்ந்தவர்கள் என்றும் அவர்கள் தலைமைப்பதவியை வகிக்கத் தகுதிபெற்றவர்கள் என்றும் கூறுகின்றார். பெண்களின் தலை சிறிதாக இருப்பதனால் மூளையும் ஒப்பீட்டளவில் ஆண்களின் மூளையைவிட சிறிதாக உள்ளது. ஆனால் மூளையினுள் காணப்படுகின்ற நியூரோன்கள் எனப்படும் நரம்புக்கலங்களின் எண்ணிக்கை பெண்களில் கூடுதலாக உள்ளது. மேலும் ஆண்களின் குருதியில் ஈமோகுளோபினின் அளவு கூடுதலாகவும் பெண்களின் குருதியில் இமினோகுளோபினின் அளவு கூடுதலாகவும் உள்ளது. இதனைப் பெண்கள் வீட்டிலும் வெளியிலும் தங்களின் பணியை எதுவித ஓசையுமின்றி செய்து முடிப்பதினை வைத்தே கண்டு கொள்ளலாம்.

1995ம் ஆண்டு அமெரிக்க இராணுவத்தில் ஓர் பரீட்சார்த்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் முன்பு பயிற்சி எதிலும் ஈடுபடாத 41 பெண்கள் (இதில் மாணவிகள், வழக்கறிஞர்கள், வியாபாரநிலைய ஊழியர்கள், ஆறு மாதகாலத்திற்கு முன்பு, மகப்பேறு அடைந்த தாய்மார்கள் போன்றோர் அடங்குகின்றனர்) யாவரும் ஐந்திலிருந்து ஆறுமாதகாலப் பயிற்சியில் 34 கிலோ கிராம் பாரத்தினை தோளில் சுமந்தபடி 3 கிலோமீற்றர் தூரம் ஓடுவதற்கும், 45 கிலோகிராம் எடையைச் சுமந்தபடி நிலத்தில் இருந்து எழும்புவதற்கும் கற்றுக் கொண்டனர். ஆனால் அவர்களைப் போன்ற தரத்தில் உள்ள ஆண்களினால் அப்படி முன்னேற முடியவில்லை என்பதனையும் அப்பரீட்சார்த்த ஆய்வில் கண்டறியப்பட்டது. மேலும் 1964 தொடக்கம் 1995 வரையான காலப்பகுதியில் மரதன் ஓட்டத்தில் பெண்களின் சாதனை விகித உயர்வு 32 வீதமாகவும், ஆண்களின் விகித உயர்வு 4.5 வீதமாகவும் காணப்பட்டது. இதுவும் பெண்களின் பரிணாம வளர்ச்சியின் மாற்றத்தினை எடுத்துக் காட்டும் ஒரு சான்றாகும். இவ்வாறு ஆய்வுகளும் பரீட்சார்த்த செயற்பாடுகளும், பெண்களின் பலத்தினை வெளிக்கொண்டு வந்திருக்கும் இவ்வேளையில் பெண்களும் பல பரிணாம வளர்ச்சிகளைத் தம் செயற்பாடுகளுடாகக் காட்டிவருகின்றனர். எனினும் இன்றும்கூட எம் மத்தியில் பெண்களைப் பல வீனமானவர்களாகவும், இரண்டாந்தர நிலையிலுள்ளவர்களாகவும் பார்க்கின்ற நிலை காணப்படுகின்றது. இந்த நிலைமாற வேண்டுமாயின் முதலில் பெண்கள் தம்பலத்தினை அறிந்து வைத்திருக்க வேண்டும். அடுத்ததாக என்னென்ன விடயங்களை வைத்துப் பெண்களைப் பலவீனமாக எடை போடுகின்றனர் என்று அறிந்து அவை, ஏன் பலவீனமான விடயங்களாகக் கருதப்பட்டு வந்தன என்பதையும் நோக்க வேண்டும். மேலும் இவ்விடயங்கள் யாவும், இன்று பலமானவையாகச் செயற்படுகின்றன என்ற விஞ்ஞானரீதியான ஆய்வு உண்மையையும் அறிந்திருக்க வேண்டும்.

முதலாவதாக மதக் கோட்பாடுகள் பெரும்பாலும் பெண்ணை ஆணுக்குக் கீழ்ப் பட்டவள் என்றும் ஆணுக்கு அடிமையானவள் என்றும் சித்தரிக்கின்றன. சிவன், பிரம்மா, விஷ்ணு, முருகன், யேசு, அல்லா, புத்தர் எனக் கூறப்படும் தெய்வங்கள், மதத்தலைவர்கள், மதப்போதகர்கள் அனைவருமே ஆண்கள். ஆண்கள் தலையெடுத்த சமூக அமைப்பில் முதன்மையான தெய்வத்தையும், ஆண்களாகவே படைக்க முடிந்தது. இதனால் பெண்களின் மனதிலும் நினைவிலும் கருத்தியல்ரீதியாகவும், உளவியல்ரீதியாகவும் நாம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்






www.tamilarangam.net

# ள்

தரம் குறைந்தவர்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்த முடிந்தது.

இன்றும் மக்களிடையே பெரும் ஆதிக்கத்தைப் பெற்றுள்ள புராண இதிகாசக் கதைகளும் பெண்களை ஆண்களின் அடிமைகளாகவே படைக்கின்றன. உதாரணமாக பஞ்ச பாண்டவர்கள் திரௌபதியைத் தம் மனைவியாகக் கொண்டிருந்தனர். ஆனால் அவளுக்கு அவர்களில் ஒருவரை மட்டும் கணவனாக ஏற்றுக் கொள்ளும் உரிமை கிடையாது. குழந்தைப்பருவத்தில் ஆணும் பெண்ணும், சரிசமமாக வளர்கின்றனர், வளர்க்கப்படுகின்றனர். ஆனால் பெண்கள் பூப்பெய்துகின்றபோது உடல், உள ரீதியாக பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை வருவதனால் சமூகம் அவளின் செயற்பாடுகளை சுதந்திரத்தினை மட்டுப்படுத்துகின்றது. இதன் ஒரு அங்கமாகவே அந்தக் காலத்தில் பெண் பூப்பெய்தினால் வீட்டை விட்டு சுதந்திரமாக நடமாட முடியாமல் தடுக்கப்பட்டிருக்கிறாள். அதன் உச்சக்கட்டமாக மாதவிடாய்க் காலத்தின்போது அவள் வாழும் வீட்டில் இருந்துகூட தூரத் தள்ளிவைக்கப்படுகின்றாள். எதுவித பணியுமின்றி வீட்டின் ஒரு மூலையில் கைதிபோல் அடைக்கப்பட்டிருக்கிறாள். இதற்கு குற்றம், துடக்கு என்ற சாட்டுக்களும், இரத்தப் போக்கு இருப்பதனால் ஓய்வு தேவை என்ற காரணமும் காட்டப்படுகின்றது. ஆனால் இன்று பெண்கள் மாதவிடாயின்போது நாளாந்தம் செய்து கொண்டு வந்த சகல பணிகளையும் இடைநிறுத்தாது, செய்கின்ற நிலையினைக் காண்கிறோம். இது எப்படி சாத்தியமானது என்பதனை விஞ்ஞான ரீதியாகப் பார்ப்போம். மாதவிடாய் மாதம் ஒரு முறை ஏற்படுகின்றபோது நான்கு அல்லது ஐந்து நாட்களிற்கு இரத்தப் போக்குக் காணப்படும். இது காயத்தின்போது ஏற்படுகின்ற குருதி இழப்புப் போல சடுதியாக ஏற்படுகின்ற குருதி இழப்பு அல்ல. ஓமோன்களின் செயற்பாட்டால் ஒரு மாதகாலமாகப் பருமன் தடித்து வழமைக்கு அதிகமாக குருதி விநியோகத்தைப் பெற்றிருந்த கருப்பை உட்சுவர் உடைந்து உதிர்வதனாலேயே இரத்தப் பெருக்கு ஏற்படுகின்றது. இதன்போது ஐந்து நாட்களுக்கும் சேர்த்து ஆகக் கூடுதலாக 300 மில்லிலீற்றர் இரத்தமே வெளியேறுகின்றது. எந்த ஒரு பெண்ணும் 18 வயதிற்கு மேல் 500 மில்லிலீற்றர் இரத்தத்தை உடலில் எதுவித பாதிப்பும் இன்றி இழக்கலாம் என்பது ஆதாரபூர்வமான உண்மையாகும். இந்த அடிப்படையில்தான் இரத்ததானம் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு இரத்ததானம் செய்யப்படுகின்றபோது, உடலில் பல நன்மைகள் ஏற்படுகின்றன. இவ்விழப்பிற்கு ஈடாக, புதிய இரத்தம் இரு கிழமைகளில் உருவாகி விடுகின்றது. இதனால் இரத்தத்தில் புதிய அணுக்கள் சேருகின்றன. இதேபோல் பெண்களும், மாதாமாதம் இரத்தத்தை வெளியேற்றுகின்றபோது அவ்விரத்தம் இருகிழமைகளில் ஈடு செய்யப்பட்டுக் கொண்டே வருகின்றது. இதனால் உடல் புதுத்தெம்பு பெறுகின்றது. ஆகவே பெண்கள் மாதவிடாய் காலத்தின்போது ஓய்வெடுக்காமல் வேலை செய்யக்கூடிய உடல் உளபலம் உண்டு என்பதே உண்மையாகும்.

அடுத்ததாக மகப்பேற்றினை எடுத்துக் கொள்வோம். இங்கு பெண்ணானவள் ஒரு புதிய உயிரை பத்துமாதங்கள் தன்னகத்தே சுமந்து பிரசவ வேதனையைத் தாங்கி அவ்வுயிரை வெளிக் கொணர்ந்து உலகிற்குத் தருகின்றாள். பின் இக்குழந்தையின் வளர்ப்புக்காக சிறுகாலம் தன் கடமையில் இருந்து ஓய்வு எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இக்காலத்தில்தான் ஆண் கடமையில் முன்சென்று உயருகின்றான். ஓர் உயிரைப் பிரசவிப்பது என்பது பெரிய கடமை. ஆண்களிற்குக் கிடைக்காத பெரும் பாக்கியம் பெண்களுக்குக் கிடைக்கின்றது என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இதனை ஒரு பலவீனமாகப் பார்க்காது, பலமாகப் பார்க்க வேண்டும். மேலும் மாதவிடாய் நிற்றலையும் பெண்ணின் ஓர் பலவீனமான அறிகுறியாகப் பார்த்து வந்துள்ளனர். ஏனென்றால் மாதவிடாய் நிற்கின்றபோது ஓமோன்களின் சுரப்பு குறைவதனால் உடல் உள நோய்கள் ஏற்படுவதனால் அவர்கள் வேலை செய்வதற்குத் தகுதி இல்லாதவர்கள் என்று காரணம் காட்டி ஓய்வில் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஆனால் இன்றைய உலகில் இதனைப் பல பெண்கள் பொய்யாக்கி உள்ளனர். மேலும் மாதவிடாய் நிறுத்தத்தின் பின்பு பெண்களின் ஆற்றல் பல மடங்காக அதிகரித்து உள்ளதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மனிதவர்க்கவியல் நிபுணர்களான அற்றின் சீல்மான், நான்சீரானர் ஆகியோர் 1970இல் பழங்குடி மக்கள் மத்தியில் மேற்கொண்ட பல ஆய்வுத்தரவுகளின்படி அங்கு அவர்களின் நாளாந்த உணவில் 70 வீதமான உணவினைப் பெண்கள் சேகரித்து வருகின்ற தாவர உணவும், 30 வீதமானது ஆண்கள் வேட்டையாடி வரும் மாமிச உணவும் பூர்த்தி செய்கின்றன என்று தெரியவந்துள்ளது. ஆனால் ஆண்கள் வேட்டைக்காரர்களாகவும், பெண் குகையில் இருந்து ஆண்களுக்கு அடிமை வேலை செய்வதாகவும், ஆதி மனித வரலாறுகள் தெரிவிக்கின்றன. ஆனால் இதனை இன்றைய ஆய்வாளர்கள் நிராகரிக்கின்றனர். அவுஸ்திரேலியாவின் திவி இன பழங்குடி மக்களில் பெண்கள்தான் வேட்டைக்குச் செல்கின்றனர். அதேபோல் கொங்கோவில் அடர்ந்த காடுகளில் வசிக்கும் பழங்குடிமக்கள், தங்கள் வேட்டைப்பணியில் முழுக்குடும்பத்தினையும் ஈடுபடுத்துவதாக கிறிஸ்நைற் என்ற ஆய்வாளர் தெரிவிக்கின்றார். மேற்குலகச் சம்பிரதாயங்களின்படி வேட்டைக்குரிய தெய்வங்கள் யாவரும் பெண்களாகவே இருக்கின்றனர்.

இறுதியாக பெண்ணில் ஏற்படுகின்ற சில தவிர்க்க முடியாத உடற் தொழில் மாற்றங்களினால் அவள் கடமையில் பின்தங்கும் போது அதனைப் பலவீனமாகப் பார்க்கும் நிலைதான் அன்று இருந்துள்ளது. இன்று இதனைப் பலமாகப்பார்க்கும் காலம் தொடங்கி விட்டது. இதற்குப் பெண்கள் அனைவரும் தம்மிடம் உள்ள பிற்போக்குச் சிந்தனைகளைக் களைந்து தம் ஆற்றல் திறனையும் முற்போக்குச் சிந்தனையையும் வளர்க்க வேண்டும். அத்துடன் அறிவியல்ரீதியாகவும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இவ்வாறு செயற்படும் போது பெண்கள் ஆண்களிற்குச் சரிசமனான பலமுள்ளவர்களாகத் திகழ்வார்கள் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிங்களத்திற் சிக்கிச் சிதைந்த "புத்தப்பல்"

2500 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்த கௌதம புத்தரின் உடல் எரியூட்டப் பட்டது. எரியுண்ட சாம்பல் எடுக்கப்பட்ட போது, எரியாது எஞ்சியிருந்த 4 பற்கள் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

நான்கு பற்களிலே ஒன்று தற்போது சீனத் தலைநகரான பீக்கிங்கில் உள்ளது. அதை அங்கே யார், எப்போது எடுத்துச் சென்றனர் என்பது தெரியவில்லை.

மற்றொரு பல், கலிங்க மன்னரால் இலங் கைக்குக் கொடுக்கப்பட்டது. இந்தப் பல் இலங்கையிலே பட்டபாடு கொஞ்சமல்ல. மூன்றாவது பல் திபேத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

நான்காவது பல்லுக்கு என்ன நடந்த தென்பது எந்த ஓர் ஆராய்ச்சியாளராலும் இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

திபேத்துக்குப்போன பல், மாசேதுங்கின் சீனச் செம்படைப் புரட்சியின்போது, இந்தியா வுக்குக் கடத்தப்பட்டு, புத்த துறவியரால் வணக்கத்துக்குரியதாக வழிபடப்பட்டுவந் தது. சில புத்த துறவியரினால் அது மீண்டும் கடத்தப்பட்டு, தைவானுக்குக்கொண்டு செல் லப்பட, இன்றுவரை அந்தப்பல் தைவானில் இருக்கின்றது. அந்தப் பல் எங்களுக்கே உரியதென சீனா, இந்தியா, தைவான் ஆகிய மூன்று நாடுகளும் மூச்சுப்பிடித்து உரிமை கோரிக்கொண்டிருக்கின்றன.

இலங்கைக்கு வந்த பல்லின் கதை மிகவும் சுவையானது. 'தேரவாத பௌத்தத்தின் திருப் பூமி' என்று சொல்லப்படும் இலங்கையும், சிங்களவரும் இந்தப்பல்லோடு பட்ட, படு கின்ற பாடு வரலாற்றின் தலையைப் பிசைய வைக்கக் கூடியதாகவுள்ளது.

இந்தப் பல் 'பௌத்த வெறியின்' அடை யாளக் குறியாக்கப்பட்டது. இப்பல்லைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவர் எவரோ அவருக்கே இலங்கையின் ஆளுமுரிமை உண்டென்றும், அவரது ஆளுகையைப் புத்தரின் பல் பழுதுறாது காப்பாற்றும் என் றும், சிங்கள மக்கள் நெடுங்காலமாகவே மூடக்கொள்கையில் ஊறிக்கிடந்தனர்,

நாட்டையும் அரசின் நலத்தையும் காக் கும் 'புனிதச்சின்னம்' எனப் போற்றப்பட்ட இந்தப் பல்லைக் காப்பாற்ற, சிங்கள மன்னர்கள் பேரல்லற்பட்டனர்.

மகாசேனனின் மகன் சிறிமேகவர்ணனின் 9ஆவது ஆட்சியாண்டில், கலிங்க இளவரசி 'ஹேமபாலி' கலிங்கத்தின் தலைநகரான தந்தபுரத்திலிருந்து புத்தரின் புனிதப்பல்லைத் தன் தலைமுடிக்குள் மறைத்து எடுத்துவந்து சிறிமேகவர்ணனுக்குக் கொடுக்க, அவன் அநுராதபுரத்தில் அதற்கெனக் கோயில் எடுத்து 'அபயகிரி' விகாரையின் பொறுப்பில் விட்டான்.

கி.பி. 479-497, பெற்ற தந்தையைக் காலவேவாக் கரையிலே உயிரோடு கல்ல றைக்குள் வைத்துக் கட்டியவனும்; தம்பி முகலனிற்கு துணையாக வரக்கூடிய தமிழ கப் படையெடுப்புக்கு அஞ்சித் தன் தலைந கரை சிகிரியா மலைக்கு மாற்றியவனும்; பெருங்கலைஞனெனக் கொண்டாடப்படு பவனுமாகிய காசியப்பனின் ஆட்சிக் காலம் 18 ஆண்டுகள். கி.பி.623-691 தமிழரின் துணையோடுதான் யாரும் ஆட்சியமைக்க முடியும் என்ற நிலை அநுராதபுரத்தில் நில விய காலப்பகுதி இது. கி.பி. 781-787 தமி ழர்களுக்கு அஞ்சிய 7ஆம் அக்கிரபோதி தனது தலைநகரைப் பொலநறுவைக்கு மாற்றி ஆட்சிசெய்த காலப்பகுதி இது.


புத்தரின் பல் இருப்

1ஆம் சேனனின் (கி.பி. 846-866) ஆட் சிக்காலத்தில் தமிழகத்திலிருந்து பாண்டியன் சிறிமாறசிறிவல்லபன் படையெடுத்துவர, எதிர்கொள்ள அஞ்சிய 1ஆம் சேனன், அரச செல்வங்களுடன், புத்தரின் திருப்பல்லையும் எடுத்துக்கொண்டு உருகுணை நோக்கித் தலைதெறிக்க ஓடினான்.

சோழர் படையெடுப்புக்குத் தாக்குப் பிடிக்கமுடியாத 1ஆம் உதயன் (கி.பி.901-912), தன் முன்னவர் போலவே, செல்வங்களையும், திருப்பல்லையும் எடுத்துக்கொண்டு தென் பகுதியின் அடர்காட்டுக்குள் ஓடிமறைந்தான்.

சோழர்களின் 82 ஆண்டு (கி.பி.992-1073) ஆட்சிக்காலத்தில், புத்தரின் திருப்பல் அநுரா தபுரத்தில் இருக்கவில்லை. இப்பெரும் படையெடுப்பின் தொடக்க காலத்திலேயே



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



க நம்பப்படும் கண்டியிலுள்ள தலதாமாளிகை.

திருப்பல் உருகுணைக் காட்டுப்பகுதிக்குச் சிங்கள மன்னர்களாலும், பிக்குகளாலும் எடுத்துச் செல்லப்பட்டுவிட்டதாகத் தெரிய வருகின்றது.

உருகுணைக்குள் மறைத்துவைக்கப் பட்ட புத்தரின் திருப்பல்லை 1ஆம் விச யபாகு (கி.பி.1055-1110) மீட்டுவிட்டு, தனது அரண்மனைக்கு அருகே பெரியமாளிகை கட்டி அங்கே வைத்தான். அம்மாளிகைக்கு 'தலதாமாளிகை' எனப் பெயரிட்டான். தமிழ் வேளைக்காரப்படையினரின் கிளர்ச்சியின் போது, திருப்பல் வேதகிரி மலைக்குத் தூக்கிச் செல்லப்பட்டு, மீண்டும் 1085இல் திரும்பவும் கொண்டுவரப்பட்டது. திருப்பல் லைக் காக்கும் பொறுப்பைத் தமிழ் வேளைக் காரப் படையினரிடம் 1 ஆம் விசயபாகு பொருத்தனை செய்து ஒப்படைத்தான்.

இந்தியாவிலிருந்து படையெடுத்துவந்த வீரத்தேவனுக்கு (கி.பி. 1111-1132) அஞ்சிய பௌத்தத்துறவிகள், திருப்பல்லை உருகு ணைக்குத் தூக்கிச் சென்று மறைத்தனர்.

1ஆம் விக்கிரமபாகுவின் மகன் 2ஆம் கஜபாகுவை வெற்றிகண்ட மானாபரணன் (கி.பி.1132-1153)உருகுணையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த திருப்பல்லைக் கைப்பற் றிப் பொலநறுவையில் அதற்கெனக் கோயில் எழுப்பி வழிபட்டான். 2ஆம் கஜபாகுவுக்குத் துணையாக 1ஆம் பராக்கிரமபாகு படை யெடுத்தபோது, தோல்விகண்ட மானாபரணன் திரும்பவும் திருப்பல்லைத் தூக்கிக் கொண்டு உருகுணைக்கே ஓடினான். மானா பரணனின் தாயாரும், 1ஆம் பராக்கிரமபாகு வின் (கி.பி.1153-1186) சிறியதாயாருமான சகலாவிடம் திருப்பல் இருப்பதை அறிந்த 1ஆம் பராக்கிரமபாகு அதனைக் கைப்பற்றி வருமாறு தனது படைத்தலைவனான தமிழன் 'ரக்கன்' என்பவனைப் பெரும்படை யோடு உருகுணைக்கு அனுப்பி, அதை மீண்டும் மீட்டுக்கொண்டு வந்து பொலந றுவைக் கோயிலில் வைத்தான்.

1ஆம் பராக்கிரமபாகுவின் மறைவை யடுத்து 26 ஆண்டுகளில் (1186-1215) தமி ழரும் சிங்களவருமாக 14 பேரிடமும் அடுத் தடுத்து ஆட்சி கைமாறி, நாட்டிற் பெரும் குழப் பம் நிலவியது. இக்காலகட்டத்தில் நிசங்க மல்லனின் ஆட்சியில் மட்டும் 9 ஆண்டுகள் அவனாற் கட்டப்பட்ட 'ஹட்டதாஹே' யில் புத்தரின் திருப்பல் வீற்றிருந்தது.

தமிழ்ப்படைகள் பொலநறுவையைத் (கி.பி.1215-1220) தாக்கிக் கைப்பற்றியபோது, புத்தரின் புனிதப் பல்லையும் ஏனைய தாதுக் களையும் கொத்மலைக்குக் கொண்டு சென்று புதைத்த பௌத்த துறவிகள் தென்னகத் துக்கு ஓடித்தப்பினர்.

3ஆம் விசயபாகு (கி.பி. 1220-1224) , ஓடி ஒளித்த பௌத்த துறவிகளை வரவழைத்து, புதைத்திருந்த திருப்பல்லைக் கிண்டி எடுத்துத் தனது தலைநகரான தம்பதெனியாவிலே கோவில் எழுப்பி வழிபாடு இயற்றினான். கி.பி. 1234இல் 2ஆம் பராக்கிரமபாகு ஆட்சிக்கு வந்ததும், திருப்பல் பெலிகலவிலிருந்து தம்பதெனியாவுக்குக் கொண்டுவரப்பட்டது.

4ஆம் விசயபாகு (கி.பி.1267-1270) தனது தந்தையான 2ஆம் பராக்கிரமபாகுவுக்கு பொலநறுவையில் முடிசூட்டியதோடு தம்ப தெனியாவில் தரித்திருந்த திருப்பல்லை மீண் டும் பொலநறுவைக்குக் கொண்டு வந்து கோயிலெழுப்பி வழிபட்டான்.

13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குலசேகர பாண்டியனின் அமைச்சரும் தள பதியுமான ஆரியச்சக்கரவர்த்தி பொலநறுவை மீது பெரும்படை நடத்தி, 1ஆம் புவனேகபா குவை (கி.பி. 1271-1310) வெற்றிகொண்டு, அரச செல்வங்களோடு புத்தரின் திருப்பல்லை யும் தமிழகம் கொண்டுசென்று, பாண்டியன் கையிற் கொடுத்துவிட்டான். திருப்பல்லை வைத்திருக்காத எந்த ஒருவரையும் தமது அரசனாகச் சிங்கள மக்கள் ஏற்கமாட் டார்கள் என்பதனால், 1ஆம் புவனேகபாகு வின் சகோதரனான 3ஆம் பராக்கிரமபாகு தமிழகம் சென்று, சடாவர்மன் குலசேகர பாண்டியனைத் தாழ்ந்து, இரந்து நின்று திருப்பல்லை மீண்டும் இலங்கைக்குக் கொண்டுவந்து அரசனாக முடிசூட்டிக் கொண் டான்.

இதன்பின், யாழ்ப்பாண அரசின் பெரும் வலிக்கஞ்சிய, சிங்கள ஆட்சிமையம் தெற்கு, தென்மேற்கு நோக்கி நகரத் தொடங்கிய போது,புத்தரின் திருப் பல்லும் அதன் பின்னாலேயே நகரத் தொடங்கியது.

கி.பி-1415இல் 6 ஆம் பராக்கிரமபாகுவின் ஆட்சிமையம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுரக் கோட்டை யில் அமைந்தபோது, புத்தரின் திருப்பல் லுக்கு அங்கே கோயில் எழுப்பப்பட்டது. கி.பி.1560இல், போர்த்துக்கேயர்களுக்கு அடிமையாகிவிட்ட தனது மகன் தர்மபாலாவை விட்டு வெளியேறிய விதியபண்டார புத்தரின் புனிதப்பல்லை யாழ்ப்பாணப் பேரரசுக்குக் கடத்திவந்து, 1ஆம் சங்கிலியின் பாதுகாப் பில் ஒப்படைத்தான். சங்கிலியோடு நடந்த போரின்போது இந்தப்பல் போர்த்துக்கேய ரின் கைகளில் அகப்பட்டது. சிங்கள மக்களி னதும், அரசினதும் உறுதியைக் குலைத்து அவர்தம் நெடுநாள் நம்பிக்கையின் வேரைப் பிடுங்க நினைத்த போர்த்துக்கேயர் 1561 அளவில் புத்தரின் திருப்பல்லை பொதுமக் கள் முன்னிலையில் நீறாக எரித்துக் கட லிலே கரைத்துவிட்டதாகப் போர்த்துக்கேய ரின் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

இலங்கைக்கு வந்த புத்தரின் பல், சிங்கள பௌத்த மன்னர், துறவிகளிடம் பட்டுப் போகாத இடமெல்லாம் போய் மறையுண்டு, புதையுண்டு பிறகு எரியுண்டு, கடல் நீரோடு ஒன்றாகக் கலந்துபோயிற்று என்பதுதான் வரலாறு பதிந்து வைத்திருக்கும் உண்மை. இந்தப் பல்லுப்போன பாதைகள், தமிழ ரின் வரலாற்று வெற்றிகளையும் சொல்லி நிற்கின்றன. அதனைப் பேணிக்காப்பதற்குத் தமிழர் செய்த பெரும் பங்களிப்பினையும் சுட்டிக்காட்டுகின்றன. சுருங்கச் சொல்வதா யின், திருப்பல்லின் வாழ்வுக்கு, தமிழரின் பேருதவி ஏதோ ஒருவகையில் எந்தக்கால கட்டத்திலும் சிங்கள ஆட்சிகளுக்குத் தேவைப் பட்டிருக்கின்றது என்பது கசப்பாக இருப் பினும் சிங்கள பௌத்தம் ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மையாகவே இருக்கின்றது.

புத்தரின் திருப்பல் கடலில் கரைந்து போனபின்னால், இன்றுவரை யானை ஊர் வலங்காணுகின்ற பல் யாருடையது அல்லது எதனுடையது என்பது இன்று ஆய்வாளர் முன்னேயுள்ள விடைதெரியாக் கேள்வியா கவுள்ளது.

புத்தரின் திருப்பல்லை தன்னகங் கொண்டி ராதவன் ஆட்சிமையத்தில் முடிசூடி ஆள முடியாது என்பது சிங்கள மக்கள் மனதில் வேரூன்றிய நம்பிக்கை. எனவேதான், கடலிலே கரைந்துபோன பல்லுக்குப் பதிலாக இன் னொரு பல்லைப் புத்தரின் திருப்பல்லாகக் கதைபடித்து, தமது ஆட்சியுரிமையைப் பிற்காலச் சிங்கள மன்னரும், பௌத்த துறவிகளும், தொடர்ந்து வந்த அரசியலாளர் களும், தலதாமாளிகைத் திருப்பல் ஊர்வலக் காட்சிகளால், சிங்களப் பொதுமக்களைத் திருப்தி செய்கின்றார்கள் என்பது ஆய்வாளர் களின் கருத்தாகும்.




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமாதானத்திற்கான யுத்தம் வளர்த்த இனவாதசக்தி

# "சிஹல உறுமய"



**வேலவன்**

1994 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் சிங்கள பூமி புத்திர கட்சி, ஜே.வி.பி., மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற கட்சிகள் தோற்கடிக்கப்பட்ட போது; அத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் கட்டிலிலிருந்து இறக்கப்பட்டபோது; பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிப்பீடம் ஏறியபோது; பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆதரித்த தென்னிலங்கை 'முற்போக்குச்' சக்திகள் சில சிங்கள மக்களால் இனவாதம் தோற்கடிக்கப்பட்டுவிட்டதாக புளகாங்கிதம் கொண்டிருந்தன.

ஆறு வருடகால பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தின் பின் நடைபெற்ற தேர்தலின் முடிவு என்ன? ஜே.வி.பி 10 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. மக்கள் ஐக்கிய முன்னணி பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரவணைப்பின் கீழ் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றிருக்கின்றது. இதனைவிட 'சிஹல உறுமய' என்ற முற்றுமுழுதான பேரினவாதக் கட்சியொன்று ஒரு பாராளுமன்ற ஆசனத்தைப் பெற்றுள்ளது.

இதுபற்றி தென்னிலங்கையிலுள்ள முன்னர் சந்திரிகாவை ஆதரித்த முற்போக்கு சக்திகள் கூறுவதென்ன? இன்று இலங்கையில் சிங்களப் பேரினவாதம் நிறுவன மயப்பட்டுவருகின்றது என இவர்கள் கூறிவருகின்றனர். இதற்குக் காரணமாக இருப்பது சிங்கள வீரவிதான இயக்கத்தின் 'சிஹல உறுமய' வினது தீவிர வளர்ச்சியாகும். சிஹல உறுமய இன்று ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரை மட்டும் கொண்ட ஒரு கட்சியாக இருக்கின்ற போதிலும்கூட இதன் பின்னணியைத் தெரிந்து கொண்டவர்கள் அதன் அதீத வளர்ச்சி எதிர்காலத்தில் ஏற்படுத்தப்போகும் விளைவுகள் குறித்து கவனத்திற்கொள்ளவே செய்வர்.

நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும் யுத்தத்தை முழுமூச்சுடன் ஆதரித்தும் அது செய்துவரும் தீவிர பிரச்சாரம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது என்பதைப் புரிந்து கொள்ளவும் இது உதவக்கூடியதாகும்.

'சிஹல உறுமய' கடந்த வருடம் ஏப்பிரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்சி வெகுவிரைவிலேயே அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியாகப் பதிவுசெய்யப்பட்டு கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெற்ற தேர்தலில் வடக்கு கிழக்கு உட்பட அனைத்துத் தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிட்டது. மாவட்டரீதியாக இக்கட்சி ஓர் ஆசனத்தைக்கூட பெறாத நிலையிலும் 'நாடு' முழுவதும் பெற்ற ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 63 வாக்குகளினால் (1.47 வீதம்) ஒரு தேசியப்பட்டியல் உறுப்பினரைப் பெற்று சிறீலங்காவின் பாராளுமன்றத்தினுள்ளும் பிரவேசித்துள்ளது.

சிஹல உறுமய ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் என்ன? இதற்கு அது வெளிப்படையாகக் கூறிக்கொண்ட காரணம் சிங்களவரின் அரசியல் உரிமைகளையும் சிங்கள இனத்தின் கலாச்சாரத்தையும் பேணுவது என்பதாகும்.

இங்கு சிங்கள பௌத்தர்களை மட்டுமல்ல அனைத்துச் சிங்களவர்களையும் இது உள்ளடக்கும் என்று அது கூறியது. இதற்காகவே இந்தக் கட்சியில் பௌத்த சிங்களவரை முதன்மைப் படுத்தும் சிங்கள பூமிபுத்திரக் கட்சியை இணைத்துக் கொள்ள வில்லை என்று அக்கட்சியின் முன்னாள் தலைவர் எஸ்.எல். குணசேகர கூறியிருந்தார். பின்னர் கடந்த பொதுத்தேர்தலில் இக்கட்சிக்குக் கிடைத்த ஒரே ஆசனத்தைப் பெற்றுக்கொள்ள இவர் தகுதியற்றவர் ஆக்கப்பட்டதற்கு இவர் பௌத்த சிங்களவராக இல்லாததே காரணமாக அமைந்தது. எனவே 'சிஹல உறுமய' என்னதான் சிங்களவர்கள் அனைவரைப் பற்றியும் பேசிக் கொண்டாலும் பௌத்த சிங்களவரின் கட்சியே அது என்பது இதன்மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

சிஹல உறுமய ஆட்சிபீடத்திலுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி குறித்தும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குறித்தும் என்ன கருதுகின்றது? இந்த இருகட்சிகளும் ஆட்சி பீடமேறுவதற்காக சிறுபான்மைக் கட்சிகளின் பின்னால் ஓடுபவை என்பதே அவை பற்றி சிஹல உறுமய கொண்டுள்ள கருத்தாகும். இந்த நோக்கத்திற்காக சிறுபான்மையினத்தவர் சொற்படி கேட்டு அவர்களுக்கு சிங்கள மக்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளை தாரைவார்த்துக்கொடுக்கும் கட்சிகளாக அவற்றை சிஹல உறுமய கருதுகின்றது.

இந்த நாட்டிலே உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் எனக்கூறிவரும் இக்கட்சிகளின் கூற்றுக்களை சிஹல உறுமய முற்றாகவே புறக்கணிக்கின்றது. இதனடிப்படையில் சந்திரிகா அரசாங்கம் முன்வைத்த அரசியல் தீர்வுப் பொதியையும் நோர்வேயின் சமாதான முயற்சிகளையும் இக்கட்சி மூர்க்கமாக எதிர்த்து வருகின்றது.

இனப்பிரச்சினை குறித்து சிஹல உறுமயவின் நிலைப்பாடு என்ன? தமிழ் மக்களுக்குப் பிரத்தியேகமான வரலாற்றுரீதியான பிரச்சினை எதுவும் இல்லை. பொதுவாக தமக்கென வரலாற்று உரிமைகளை, மொழியை, கலாச்சார அடிப்படைகளை மற்றும் நாடு ஒன்றைக் கொண்டுள்ள மக்களையே இனம் என்கின்றோம். இலங்கையில் வரலாற்றுரீதியாக அரசை நடத்தியவர்கள் சிங்களவர் மட்டுமே. இங்கே வாழும் தமிழ் மக்கள் இனக்குழுக்களாகவே கருதப்படக்கூடியவர்கள். ஏனெனில், அவர்களுக்கு வரலாற்றுரீதியாக அரசு இல்லை என்றும் அது கூறுகின்றது.

- சிங்கள மக்கள் தங்கள் அடையாளம் குறித்து பயங்கர அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர்.
- தமிழ் மக்கள் இலங்கையின் எப்பகுதியிலும் வாழும் உரிமை பெற்றிருக்கின்றனர். சிங்கள மக்களுக்கு அந்த உரிமை இல்லை.

இவ்வாறு அதன் நிலைப்பாடு அமைகின்றது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் பற்றிய சிஹல உறுமய என்ன கருதுகின்றது. வடக்குக்கிழக்கில் நடைபெறும் யுத்தம் இலங்கை முழுவதையும் கைப்பற்றும் தமிழர்களின் சதித்திட்டத்தின் ஒரு பகுதியாகும் என அது கருதுகின்றது.

இவ்வாறான கருத்தைக் கொண்டுள்ள சிஹல உறுமய இதனை யுத்தம் செய்து புலிகளை அழிப்பதன் மூலமே முறியடிக்க வேண்டும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனக்கூறிவருகின்றது.

சிஹல உறுமயவில் தென்னிலங்கையில் இயங்கும் இனவாத அமைப்புகளான ஹெல உறுமய, ஜாதிக சிந்தனய, எக்சத் பிக்கு பெரமுனை, தேசப்பிரேமி பிக்கு பெரமுன ஆகிய அமைப்புக்களுடன் சிங்கள வீரவிதான என்னும் அதிதீவிர அமைப்பும் அங்கம் வகிக்கின்றது.

இக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், பொதுச்செயலாள ருமாகிய திலக் கருணாரட்ணா சிறீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்க் கட்சியாக இருந்தவேளை கட்சிக்குள்ளேயே 'ஹெல உறுமய' என்னும் அமைப்பை உருவாக்கி அதன் தலைமைப்பதவியை வகித்து வந்தவர். பின்னர் ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திலக் கருணாரட்ணா சிஹல உறுமயவில் இணைந்து கொள்வதற்காகவே ஐ.தே.கட்சியிலிருந்து வெளியேறினார். இவரின் 'ஹெல உறுமய' அமைப்பு சிஹல உறுமயவில் அங்கம் வகிக்கின்றது.

இக்கட்சியின் முக்கிய அங்கமாக விளங்குவது 'சிங்கள வீரவிதான' என்னும் அமைப்பாகும். சிங்கள வீரவிதானவின் ஓர் அங்கமே 'சிஹல உறுமய' என்றும் கூறப்படுமளவுக்கு சிங்கள வீரவிதானவின் செல் வாக்கு இக்கட்சிக்குள் வியாபித்திருக்கின்றது எனக்கூறலாம்.

சிங்கள வீரவிதான இயக்கம் 1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் தன்னைப் பிரகடனப்படுத்திக்கொண்டது. ஆரம்பத்தில் இது தன்னை ஒரு அரசசார்பற்ற நிறுவனமாக பதிவுசெய்துகொண்டது. இதன் தலைவராக இருப்பவர் சிஹல உறுமய இயக்கத்தின் தேசிய அமைப் பாளராகிய சம்பிக்க ரணவக்க என்பவராவர். ஜே.வி.பி.யின் முன்னாள் உறுப்பினராகிய சம்பிக்க ரணவக்க அதிலிருந்து விலகி தேச பக்த ஐக்கிய முன்னணி என்னும் பெயரிலான அமைப்பொன்றை உரு வாக்கியிருந்தார். பின்னர் 1994ஆம் ஆண்டுத் தேர்தலின்போது பொதுஜன ஐக்கிய முன்னணிக்குச் சார்பாகச் செயற்பட்டு வந்தார்.

1997இல் நீதிபதி ஒருவரின் தலைமையில் 42 பௌத்த அமைப் புக்களால் அமைக்கப்பட்ட சிங்கள ஆணைக்குழுவுக்கு சிங்கள வீர விதான இயக்கமே பின்னணியில் இருந்தது. அன்னியர் இலங்கையை ஆக்கிரமித்திருந்த காலப்பகுதியிலும் சுதந்திரத்திற்குப் பின்னரும் இலங்கையில் சிங்கள மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர் பாக இந்த ஆணைக்குழு பலரது சாட்சியங்களைப் பதிவு செய்தது. இதன் அடிப்படையில் வெளியிடப்பட்ட அறிக்கை வரலாற்றுக் குப்பைத் தொட்டிக்குள் வீசப்படும் என்று கூறிய அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராக 'அவருக்கு தெய்வசாபம் சூளுமாறு' பிக்குகள் சிதறு தேங்காய் அடித்தனர். இறுதியில் தனது கூற்றுக்கு விளக்கம் கூறவேண்டிய நிலைக்கு அமைச்சர் தள்ளப்பட்டார்.

பின்னர் மருதானையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பைத் தொடர்ந்து பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய முன்னணி என்னும் அமைப்பை சிங்கள வீரவிதான இயக்கம் அமைத்தது. இந்த இயக்கம் 'பயங்கர வாதத்தை' ஒழிப்பதற்கான தேசிய செயற்திட்டம் ஒன்றை 1999 ஜனவரியில் வெளியிட்டது. இந்தச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் ஒப்புக்கொண்டால் ஒரு லட்சம் சிங்கள இளைஞர்களை ஒரு மாதகாலத்தில் படைக்குச் சேர்த்துத் தருவோம் என சம்பிக்க ரணவக்க கூறியிருந்தார்.

சிங்கள வீரவிதான இயக்கம் பிக்குகள் அமைப்பு, வர்த்தக அமைப்பு, பெண்கள் அமைப்பு, பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய அமைப்பு என்பவற்றை உப அமைப்புகளாகக் கொண்டு இயங்கிவருவதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், சிங்கள வீரவிதான இயக்கத்தின் சர்வதேசக் கிளைகள் ஜேர்மனி யில் பேர்லின், மூனிச் நகர்களிலும் லண்டன், அமெரிக்கா, இத்தாலி போன்ற இடங்களிலும் காணப்படுகின்றது.

இதிலே வர்த்தக அமைப்புகளின் கீழ் தென்பகுதியில் இயங்கிவந்த வியாபாரிகள் சங்கங்கள் அனைத்தும் இணைந்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தென்னிலங்கை யின் வர்த்தகம் முழுவதும் சிறுபான்மையினரின் கைகளிலேயே சிக்கியுள்ளதாக இந்த வியாபாரிகள் சங்கங்கள் கூறுகின்றன. அதாவது, இலங்கையின் 80 வீதமான வியாபார நடவடிக் கைகள் தமிழ் முஸ்லீம் மக்களின் கைகளிலே உள்ளதென சிங்கள வீரவிதான கூறுகின்றது.

இந்நிலையை சிங்கள வீரவிதான இயக்கம் எதிர்ப்பதால் இந்த வியாபாரிகள் சங்கங்கள் வீரவிதான அமைப்பின் கிளைகளாக மாறியுள்ளன. இப்பொழுது வீரவிதான தமிழ் மக்களின் வர்த் தக நிலையங்களில் சிங்கள மக்கள் பொருட்களைக் கொள் வனவு செய்யக்கூடாதென பிரச்சாரம் செய்து வருகின்றது. அத்துடன், சிங்கள விவசாயிகளுக்கு நிதிஉதவி வழங்கிவரும் இந்த அமைப்பு, விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை சிங்கள வர்த்தகர்களுக்கே விற்பனை செய்யவேண்டும் எனவும் கேட்டு வருகின்றது. இவ்வாறான பிரச்சாரங்களில் பௌத்தபிக்கு கள் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், 'தமிழ் வியாபாரிகளுக்கு நீங்கள் வழங்கும் பணத் தின் ஒருபகுதி உங்களுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டுவரும் 'பயங்கரவாதிகளுக்குப்' போய்ச்சேருகின்றது' என்ற பிரச்சாரத் திலும் அது ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

இவை ஒருபுறமிருக்க, தென்பகுதியில் தமிழ் மக்களின் தொகை அதிகரித்து வருவதாகக் கூறிவரும் சிங்கள வீரவிதான இயக்கம் தமிழ் மக்களுக்கு எதிரான சுவரொட்டிகளை ஒட்டிவரு கின்றது. இந்தச் சுவரொட்டிகள் படையினரின் வாகனங்களில் எடுத்துச் செல்லப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இதனடிப்படையில் சிங்கள வீரவிதான இயக்கத்தின் முதல் இலக்காக மலையகத் தமிழ் மக்கள் உள்ளார்களா? என்ற கேள் வியை நடைபெற்றுள்ள சம்பவங்கள் எழுப்புகின்றன. அதாவது, அரசியல்ரீதியாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும் அதன் மறைந்த தலைவர் தொண்டமானையும் எதிர்த்து சிங்கள வீர விதான மேற்கொண்ட நடவடிக்கைகள் இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கவையாகும்.


புலிகளுக்கு ஆதரவாக குரல்கொடுக்கிறார், புலிகளைப் புகழ்ந்து பேசுகிறார் எனக்கூறி அமைச்சர் தொண்டமான் பதவி விலக வேண்டும் என அவரின் வீட்டுக்கு முன்னால் சிங்கள வீரவி தான அமைப்பு முன்னர் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தது.

பின்னர், 1999ஆம் ஆண்டு நுவரெலியாவில் இ.தொ.கா. மேதினம் நடத்தியபோது அதனை சிங்கள வீரவிதான இயக்கம் குழப்பியது. இந்த நடவடிக்கையின் பின்னணியில் அமைச்சர் ஒரு வர் இருப்பதாக அமைச்சர் தொண்டமான் கூறியபோதும், அந்த அமைச்சரின் பெயரை அவர் இறுதிவரை வெளியிடவேயில்லை.

ஆனால், தொண்டமானின் முறையீட்டின் அடிப்படையில் நுவ ரெலியா பொலிஸ் அத்தியட்சகர் அரசாங்கத்தால் இடமாற்றம் செய்யப்பட்டபோது, அதற்கு எதிராக அதிஉயர் பாதுகாப்பு வல யமாகிய அலரிமாளிகைக்கு முன்னால்கூட சிங்கள வீரவிதான இயக்கம் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

இதன்பின்னர், அங்கிருந்து ஊர்வலமாகச் சென்றவர்கள் இ.தொ.கா.வின் தலைமையகமான சௌமியபவனைத் தாக்கி சேதப்படுத்தியதுடன், அங்கு பறந்துகொண்டிருந்த இ.தொ.கா. கொடியை கிழித்தெறிந்துவிட்டு, சிங்கள வீரவிதான கொடியை ஏற்றிவைத்தனர். ஆனால், இது குறித்து அரசாங்கத்தால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுடன் இதற் கெதிராக இ.தொ.கா. நடத்தமுனைந்த ஊர்வலம், கடையடைப்பு என்பன அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டிருந்தன.

மலையகத் தமிழர் குறித்து 'சிஹல உறுமய' வின் கருத்து என்ன? மலையகத் தமிழர்களை இந்தியாவுக்குத் திருப்பி





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனுப்பியிருக்கத் தேவையில்லை. அவர்களைச் சிங்களவர்களாக மாற்றுவதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்திருக்கலாம் என்று கூறுகிறார் அக் கட்சியின் செயலாளர் திலக் கருணாரட்ண.

சிங்கள வீரவிதான அமைப்புக்கு சிங்கள புத்திஜீவிகள், இருபிரதான கட்சியிலுமுள்ள அரசியல்வாதிகள், படை உயரதிகாரிகள், பௌத்த பிக்குகள், வர்த்தகர்கள் என பலதரப்பட்டவர்களினதும் நேரடி, மறைமுக ஆதரவு இருப்பதாக தகவல்கள் கூறுகின்றன. பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்குக்கூட இந்த அமைப்புடன் தொடர்பு இருக்கலாம் என்றும் சிலர் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

இந்த இயக்கம் சிங்கள வர்த்தகர் சமூகத்தின் ஆதரவைப்பெற்றிருப்பதும் தென்பகுதியில் பெரிய நிதி நிறுவனம் ஒன்று சிங்கள வீரவிதான அமைப்பின் செயற்பாடுகளுக்கு நிதி வழங்கி வருவதும் அதன் பொருளாதார வளத்தை வெளிப்படுத்துகின்றது.

சிங்கள வீரவிதான இயக்கம் உலகளாவிய தனது பிரச்சாரத்திற்காகவும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பிரச்சாரத்திற்காகவும் கணனி தகவல் தளங்கள் பலவற்றை வைத்திருக்கின்றது. சிறீலங்காவில் இயங்கிவரும் பல ஊடகங்கள் சிங்கள வீரவிதான அமைப்பின் கருத்துக்களைச் சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லத் தயாராக இருக்கின்றன.

'சிங்களவர்களை ஒன்றுதிரட்டி நீண்டகால இலக்கைக்கொண்ட வேலைத்திட்டத்தைக் கொண்டு செல்வதே எமது நோக்கம்' என சிஹல உறுமயவின் செயலாளர் திலக் கருணாரட்ண தெரிவித்திருக்கின்றார். சிஹல உறுமயவின் தோற்றம் தமக்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சி தோற்றம் பெற்ற காலத்தை நினைவூட்டுவதாக சிஹல உறுமய கட்சியினர் கூறியிருக்கின்றனர்.

பண்டாரநாயக்காவினாலும் அவரைத் தொடர்ந்துவந்த ஆட்சியாளர்களாலும் தூண்டப்பட்ட இனவாதம் படிப்படியாக வளர்ச்சியடைந்து பெரும் யுத்தத்திற்கு வழிகோலியது. இந்த யுத்தத்தின் தீவிரத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அதனை நிறுத்தி சமாதான முயற்சிகளை மேற்கொள்வதற்காகவே சந்திரிகா அம்மையாரை பதவியில் அமர்த்தியிருந்தனர்.

ஆனால், ஆறுவருடகாலம் சந்திரிகா அம்மையார் நடத்திய யுத்தம், ஊட்டிய யுத்த வெறி தீவிர இனவாத அமைப்புகளை வளர்த்துவிட்டது மட்டுமல்லாது, மக்களை அச்சக்திகளை ஆதரிக்கும் நிலைக்கும் தள்ளிவிட்டுள்ளது.

இதன்விளைவு என்னவெனில் இப்பொழுது சந்திரிகா அம்மையார் தனது நெருக்கடியிலிருந்து நீங்க சமாதானம், அரசியல் தீர்வு என்பவற்றுக்கு முயன்றாலும் அவர் வளர்த்துவிட்ட இனவாதிகளை மீறி அவரால் செயற்பட முடியாமல் போகும் என்பதையே சிஹல உறுமயவின் வளர்ச்சி எடுத்துக்காட்டுகின்றது.



# அத்திவாரக் கற்கள்

**-பூமாதேவி**

முற்றிப்பழுத்த நெல் மணிகள் சூழ்ந்து நின்று கலகலக்க, நடுவே கம்பீரமாக நிமிர்ந்து நின்றது அந்தத் தென்னந்தோட்டம். அதுதான், தம்பலகாமம் அன்னமார்திடல். இயற்கையின் அரவணைப்பில் மகிழ்ந்து களித்தனர் அத்திடல் மக்கள். அந்த நிலமும், அந்த மக்களும் பதின்மூன்றாம் கட்டையில் இருந்து இராணுவக்கெடுபிடிகளால் இடம்பெயர்ந்த தம் சொந்த உறவுகளுக்குத் தஞ்சமளிக்கத் தவறவில்லை. அப்படித் தஞ்சமடைந்தவர்களில் தங்கத்தின் குடும்பமும் ஒன்று. ஆனாலும், அவர்களால் இங்கேயும் நிம்மதியாக வாழமுடியவில்லை. அடிக்கடி சுற்றிவளைப்புக்களும், கைதுகளும் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

தங்கத்திற்கு நான்கு ஆண்பிள்ளைகளும், ஒரேயொரு பெண்ணும். அவள் அப்போது எட்டு வயதுச் சிறுமி. சின்னண்ணா என்றால் அவளுக்கு உயிர். எந்தநேரமும் அவனின் தோளிலேயே தொங்கிக்கொண்டிருப்பாள். காலையும், மாலையும் யோகன் பட்டிகளுக்குச் சென்று பால் எடுத்து கடைகளுக்கும், வீடுகளுக்கும் விநியோகம் செய்து திரும்புவான். அந்த நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களிலெல்லாம் அவனின் உலகம் தங்கச்சிதான். கூத்தும், கும்மாளமுமான அவர்களது மகிழ்ச்சி பகல்பொழுதுகளில் மட்டுந்தான். மாலை ஆறுமணியானதும் ஒவ்வொருவரும் நத்தைகளைப் போல தம் கூடுகளுக்குள் பதுங்கிக்கொண்டு விடுவர். இளைஞர்களுக்கு அதற்குக்கூடச் சுதந்திரமில்லை. அயலில் உள்ள முஸ்லீம் கிராமமான சூரண்கல்லுக்குப் புறப்பட்டு விடுவார்கள், இரவு நேரங்களில் பயமின்றி நிம்மதியாய் உறங்குவதற்காக.

ஒருநாள் இரவோடு இரவாக அன்னமார் திடல் பல நூறு அரசபடைகளால் சுற்றி வளைக்கப்பட்டது. படையினருக்கு நிலையெடுப்பதற்கு வசதியான உருமறைப்புக்களாக நெற்பயிர்கள். எவருமே இராணுவத்தினரின் வருகையை அறிந்திருக்கவில்லை. தாம் சுற்றிவளைக்கப்பட்டுவிட்டோம் என்பது யாருக்குமே தெரியாது.

யோகனின் தம்பி முருகனுக்கு அன்று மாலையில் இருந்து கடுமையான வயிற்று வலி, வலிகுறைவதாகவே இல்லை. பரியாரியிடம் சென்று காட்டி, மருந்து எடுத்து, முருகன் உறங்க பன்னிரண்டு மணியாகி விட்டது. அன்று அன்னமார்திடல் இளைஞர்கள் சூரண்கல்லுக்குச் செல்லவில்லை. தம்மைச்சுற்றி இராணுவ வேலிகள் என்பதை அறியாத அந்த இளைஞர்களும் உறங்கிவிட்டனர்.

தீடீரென அருகில் கேட்ட துப்பாக்கி வேட்டொலியால் விழித்துக்கொண்ட இளைஞர்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் சிதறி ஓடத் தொடங்கினர். வயிற்று வலியால் துடித்த முருகன் மட்டும் தாயாருடன் பதுங்கிக் கொண்டான். எல்லோரும் ஓடிவிட, யோகனும் இன்னுமொரு இளைஞனும் குண்டடிபட்டு வீழ்ந்தனர். 'அம்மா... தண்ணீ... அம்மா... தண்ணீ....' யோகனின் தீனமான குரல் கேட்டும் யாரும் வெளியில் வரவில்லை. அவனின் குட்டித்தங்கை மட்டும் 'அண்ணா... அண்ணா...' என அலற, அவளின் சின்ன வாய்க்கும் பெரியவர்களின் கைகள் பூட்டுப்போட்டன. 'சட் சட்' மீண்டும் இரண்டு வேட்டொலிகள் 'நான் கடைசி வரையும் ஆமியில பிடிபடமாட்டேன். அவனுகளிட்டப் பிடிபடுறதக் காட்டியும் சாகலாம். நான் ஓடுவன்... அவன் கட்டாயம் சுடுவான்' என்று எப்போதும் கூறும் யோகனின் குரல் ஓய்ந்தது. வீடுகளுள் நுழைந்த வெறியர் கூட்டம் எஞ்சிய ஐந்து இளைஞர்களையும் 'றக்'கினுள் அள்ளிப் போட்டுக் கொண்டு, இரு உடல்களுடனும் சென்றுவிட்டது. அவர்களுள் முருகனும் ஒருவன்.

தங்கம் தவியாய்த் தவித்தாள். அவளின் இரண்டு குஞ்சுகளும் வல்லூறுகளின் பிடியில். என்ன செய்வாள் அவள். இரக்கமற்ற அந்த இராட்சகர்களிடம் கெஞ்சினாள். கதறினாள். யோகனின் உடலை 'விடுதலைப் புலி' என்று கையொப்பமிட்டால் தருவோம் என்றனர், தங்கம் மசியவில்லை.

'என்ர பிள்ளை புலியில்லை. நான் கையெ முத்துப் போடமாட்டன். அவன்ர உயிரில்லாத வெறும் உடம்பை வேணுமெண்டால் கொண்டு போய் சுட்டுத்தின்னுங்கள்' என்று பொங்கிவந்த கோபம், பாசஉணர்வு, இயலாமை எல்லாமே ஒன்றுசேர மண் அள்ளித் திட்டினாள், பிள்ளைகளைப் பெற்றதாய்.

இவள் மட்டுமா? இன்னும் எத்தனை எத்தனை தாய்களினதும், மனைவிகளினதும் திட்டுக்கள், சாபங்கள், கண்ணீர்கள்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாழ்த்துச் செய்தி



**போராடிக்கொண்டிருக்கும் எம்தேசத்தின் காலக் கண்ணாடியாய் உண்மையின் விம்பமாய்த் திகழ்ந்து, பன்னிரண்டாமகவையை எட்டும் ஈழ இதயமாம் ஈழநாதமே உன் வீச்சுக்கள் விரிந் தெம்மிலும் பட்டுத் தெறிக்கும் வையமெங்கும்.**

தமிழீழ மக்களின் இதயநாதமாய் விளங்கிக் கொண்டிருக்கும் ஈழநாதம் தினசரி 12வது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை ஒட்டி தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி.

விபரிக்கமுடியாத துன்பங்களும், வியக்கத்தக்க தியாகங்களும் நிறைந்த ஒரு மகத்தான வீரகாவியமாக எமது இனத்தின் விடுதலைப் போர் பரிணமித்து, மனித இனத்தின் விடுதலை எழுச்சிக்கு ஓர் உன்னத எடுத்துக்காட்டாக இன்று வளர்ந்து நிற்கின்றது. இத்தகைய உயர்ந்த வளர்ச்சியினையும் எழுச்சியினையும் கண்டு எமது எதிரி மனம் பொறுக்காது மிகவும் நுட்பமானதும் சாதுரியமானதுமான பிரச்சாரப் போரினை மேற்கொண்டு எமது விடுதலை இயக்கத்தையும், எமது விடுதலைப் போராட்டத்தையும் பயங்கரவாதமாகச் சித்தரிக்கின்றான்.

அதேவேளை உலகத்தை ஏமாற்ற வெள்ளைக்கொடியை உயர்த்தியவாறும் சமாதானப் புறாவைப் பறக்கவிட்டவாறும் எமது எதிரி ஒரு பெரும் இனஅழிப்பு யுத்தத்திற்குத் தயாரா கின்றான். உலகின் மூலைமுடுக்குகளிலிருந்தெல்லாம் அழிவாயுதங்களை வாங்கிக் குவிக்கின் றான். அப்பாவிச் சிங்கள இளைஞர்களுக்கு இனவெறியூட்டிப் போர்ப்படையிற் சேர்க்கின்றான்.

தன்னைப் போரிற்குத் தயார்ப்படுத்தியவாறு எமது மக்கள் மத்தியில் விரக்தியையும் சோர்வையும் குழப்பத்தையும் நம்பிக்கையீனத்தையும் தோற்றுவித்து எமது தேசவிடுதைலப் போராட்டத்தை வலுவிழக்கச் செய்ய எதிரி புதிய அலைவரிசைகளையும் செய்தியூடகங் களையும் உருவாக்கி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பொய்யான புளுகுரைகளையும் கருத்துரைகளையும் பரப்பி வருகின்றான்.

இப்படியாக எமது எதிரி பொய்யையும் புளுகையுமே ஆயுதமாகக் கொண்டு தனது பரப்புரையை மேற்கொண்டபோதும், அதனை முறியடிக்கும் வகையில் எமது மக்கள் தினசரியான ஈழநாதம் கடந்த பதினொரு ஆண்டுகளாக உண்மையையும் சத்தியத்தையும் நிலைநிறுத்தி பெரும் இடையூறுகளுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் சிறப்புறச் செயற்பட்டுவருகின்றது.

மேலும் சிங்கள அரசு எமது தேசத்தின் மீது பொருண்மியத் தடைகளை விதித்து எமது மக்களின் அறிவியல் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முயன்றபோதும் எமது மக்கள் தினசரி தனது பெருமுயற்சியால் இன்றைய அறிவியல் உலகில் ஏற்பட்டு வருகின்ற விந்தைகளையும் அதனால் மனிதவாழ்வில் ஏற்பட்டுள்ள பிரமிக்கத்தக்க மாற்றங்களையும் தனது அறிவியல் கட்டுரைகள் மூலமாக மக்களுக்கு எடுத்துக் கூறி ஒரு பரந்த உலகப் பார்வையையும் விரிந்த வாழ்பனுபவத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்திவருகின்றது.

அத்துடன், எமது தேசிய இனக்கட்டமைப்பைச் சிதைத்து எமது மொழியையும் கலையையும் கலாச்சாரத்தையும் அழிக்க எமது எதிரி தீவிரமாக முயன்றபோதும், அவனது ஆசை நிறைவேறாதவாறு மக்களைச் சிந்திக்கத் தூண்டும் வகையிலும் மக்கள் மனதில் புரட்சிகரப் பார்வையைத் தோற்றுவிக்கும் வகையிலும் எமது மக்கள் தினசரி தனது படைப்புக்களை உருவாக்கி வருகின்றது.

எமது எதிரி தனது கட்டுப்பாட்டிலுள்ள தொடர்பூடகங்களை முழுமையாகப் பயன்படுத்தி உண்மைகளைத் திரித்து, பொய்களைப் புனைந்து, மக்களைக் குழப்பி. போராட்டத்தை மழுங்கடிக்கக் கங்கணம் கட்டிச் செயற்பட்டபோதும், எமது மக்கள் தினசரி போராட்ட யதார்த்தத்தையும் புறநிலை உண்மைகளையும் மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களுக்கு தேசிய விழிப்புணர்வையும், விடுதலையுணர்வையும் ஊட்டி வளர்க்க ஆற்றும் பணி அளப்பரியது. மேலும், பொருளாதாரத் தடைகளும் இடப்பெயர்வுகளும் எம்மை வாட்டியபோதும், ஈழநாதம் தொடர்ந்தும் சிறப்பாக வெளிவர அதன் பொறுப்பாளரும் ஆசிரியரும் செய்தியாளர்களும் பணியாளர்களும் ஆக்கங்களை வழங்குபவர்களும் அயராது ஆற்றும் பணி போற்றுதற்குரியது.

பன்னிரண்டாவது அகவையை எட்டும் ஈழநாதத்தின் இப்பணி மென்மேலும் சிறக்க எனது வாழ்த்துக்கள்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

சு.ப.தமிழ்ச்செல்வன்,
பொறுப்பாளர்,
தமிழீழ அரசியல்துறை, -தமிழீழம்

## போராடும் தேசத்துப் புலர்பொழுதே வாழிய நீ

கோயில் மணியாகிக் கேட்போர் செவிகளிலே
பாயும் உயர்நாதப் பாட்டே!
விடுதலைக்குப்
போராடும் தேசத்துப் புலர்பொழுதே!
உருள்கின்ற
தேராய் உலாப்போகும் திகழ்வடிவே!
கண்ணெதிரே
நாற்றாக நேற்றுன்னை நட்டோம்
வளர்ந்தின்று
பூத்துள்ளாய்; என்னேயுன் பூரிப்பு
தினம்பதியும்
தேர்த்தடமாய் வாசல் தெரியும் படியாகப்
போர்க்குரலைப் பாடிப் பெரிதாய் நிமிர்கின்றாய்
தீயுண்டும் மாளாத ஜீவமொழி உனது
வாய்கொண்டு பாடும் வரலாறுனக்குண்டு
எல்லாவழியும் இடியுண்டும்
நீ துளிர்த்துப்
பொல்லாதார் வாய்க்குப் பூட்டிட்டாய்
பொய்யுரைத்துக்
கொல்வோர் குரல்வளையைக் கிழித்தாய்
எம் நிலத்தின்
வல்லமையை வைய வரம்பினிலே நட்டாய் நீ
ஊதி அணைத்திடலாம் உரிமைக் குரலையென
நீதிக் கெதிரானோர் நினைத்தார்
நீயதனை
மோதி; அவர் நினைவை முறியடித்தாய்
உயிருறுஞ்சும்
வேதனையை; தீமுனையில் வெந்துபடும் சாக்குரலை
கொண்டு சென்று எங்கும் கொட்டிப் பரவிவிடக்
கண்டதனை வையம் கலங்கித் துடிக்கிறது
ஆலையில்லாவூரில் இலுப்பைப்பூ ஆகாமல்
பாலை நிலத்திலுள்ள பசுஞ்சோலை ஆனாய் நீ
எட்டும் வரையெட்டி இருட்கரத்தை நீ வெட்டித்
தொட்டு விடுதலைக்குத் தோள் கொடுத்தாய்
வானத்தில்
வந்தருளும் வெய்யோன் வளர்கதிர்போல்
ஒளிவெள்ளம்
தந்தருளும் நாதத் தமிழிதழே வாழிய நீ
உனக்கும் எமக்குமுள்ள உறவு
தாய்பிள்ளைக்
கணக்குப்போல் வந்த கருவுறவு
ஆதலினால்
அந்த உறவதையே ஆதாரமாய்க் கொண்டு
சொந்த மகவுன்னைச் சோடித்தோம்
உந்தனுக்கு
பால்கொடுத்தோர் வாழி
பகலிரவாய்க் கண்விழித்து
காலெடுத்து நீ நடக்கக் காட்டுகின்றோர் வாழியவே
பிள்ளையென உன்னைப் பெற்றவரும்
நாளெல்லாம்
அள்ளியெடுத்துன்னை அணைப்பவரும் வாழியவே.

-புதுவை இரத்தினதுரை



தாசன் பதிப்பகம்

www.tamilarangam.net

# படுகளம்



## ஐரோப்பாவில் கால்நடைகளைத் தாக்கும் கால், வாய் வைரஸ் நோய்

சூரியன் அஸ்த்தமிக்காத சாம்ராச்சியம் என ஒரு காலத்தில் அழைக்கப்பட்டு வந்த பிரித்தானியாவில் இன்று கால்நடைகள் உயிரோடு எரியூட்டப்படுகின்றன. அதனது சக ஐரோப்பிய நாடுகள் பிரித்தானியாவின் இறைச்சி வகைகளுக்கு காலவரையற்ற தடைவிதித்துள்ளன. கால்நடைகளுக்குத் தொற்றுகின்ற கால், வாய் வைரஸ் நோய் காரணமாக பிரித்தானியப் பண்ணையாளர்கள் தமது பண்ணைகளை விற்பதற்கு ஆட்களைத் தேடித்திரிகின்றனர்.

கால்நடைகளைத் தாக்குகின்ற கால், வாய் வைரஸ் நோய் காரணமாக பிரித்தானியாவின் கிராமப்புறப் பொருளாதாரம் அதல பாதாள நிலைநோக்கிச் சென்றுள்ளது. அதே வேளை உலகில் பிரித்தானியாவின் உணவுப் பொருட்களுக்கு இருந்த நம்பிக்கை கெட்டுப் போய்விட்டது. ஒட்டுமொத்த ஐரோப்பிய சமூகமே தமது ஆரோக்கியம் மீதான பீதியில் உறைந்து போயுள்ளது. போட்டியும், நிரம்பலும் நிறைந்த ஒருங்கிணைக்கப்பட்ட உலக சந்தையில் ஐரோப்பிய உணவுப் பொருட்கள் தொடர்பான தொழிற்றுறையின் முதன்மை நிலையும் கேள்விக்குறியாகியுள்ளது.

பிரித்தானிய அடித்தட்டு விவசாயிகளின் தொழில் முறைமை முற்றிலும் நலிவடைந்த நிலையை அடைந்துவிட்டது. கால், வாய் வைரஸ் தொற்றுநோயானது தமது கால்நடைகளுக்கு வந்த எமன் என இவ்விவசாயிகள் விசனமடைந்துள்ளனர். பிரித்தானியாவின் தேசிய விவசாயிகள் சம்மேளனம் தனது அறிக்கையில் தமது பண்ணையாளர்கள் வாரத்திற்கு 30மில்லியன் டொலர்களை இழப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. இச்சம்மேளனத்தின் டேவன் பகுதிப் பிரதிநிதியான இயன் ஜோன்சன் கருத்துத் தெரிவிக்கையில் "இது எங்களுக்குப் போதாத காலம். நாங்கள் பிரார்த்தனையோடு காத்திருக்கின்றோம்" என்கின்றார்.

எவருக்குமே இந்த அவலம் எப்போது முடிவுக்கு வரும் என்பது தெரியாது. கடந்த மாதத்தின் முற்பகுதியில் மாத்திரம் 50 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஸ்கொட்லாந்தின் லொக்கர்பி பிரதேசத்தில் மாத்திரம் நாளொன்றுக்கு 6 தொடக்கம் 10 வரையான சம்பவங்கள் நிகழுகின்றன.

வடஅயர்லாந்தின் தெற்கு Armagh பகுதியில் இத்தொற்றுநோய் கால்நடைகளிடையே தென்படுவதாகக் கண்டறியப்பட்டது. இதனையடுத்து அயர்லாந்துக் குடியரசு எல்லைப் பகுதிக்கு தனது இராணுவத்தை அனுப்பி பிரித்தானியப் பகுதிகளிலிருந்து வரும் அனைத்து உயிரினங்களுக்கும் தடைவிதித்துள்ளது. இத் தொற்றுவியாதியைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை இப்பொழுது ஐரோப்பா எங்கும் எழுந்துள்ளது. ஏலவே Bovine Spongiform Encephalopathy (BSE) எனப்படுகின்ற 'மாட்டு விசர்' நோயிற்கும், மூச்சாகப் பரவிவரும் கால், வாய் வைரஸ் நோய்க்கெதிராகவும் அணைபோட வேண்டிய தேவை வானுயர்ந்து நிற்கின்றது.

எல்லைப்பகுதி கண்காணிப்பாளர்களால் கார்ச்சக்கரங்கள்தொட்டு வெதுப்பித் துண்டுகள் (பாண்) வரையும் வைரஸ் கிருமிகளின் தொற்று இருக்கின்றதா என்று பரிசீலிக்கப்படுகின்றது. போத்துக்கல்லிலோ ஐக்கிய இராச்சியத்திலிருந்து வருகின்ற உல்லாசப் பிரயாணிகள் தமது கால்களைக் கிருமிநீக்கம் செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

பெல்ஜியத்திலும் நோயின் அறிகுறிகள் தென்படுவது கண்டறியப்பட்டுள்ளது. டிக்ஸ் முய்டே நகரிற்கு அண்மைய பண்ணையொன்றில் ஆரம்பப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட 325 பன்றிகளில் 75 பன்றிகள் நோயின் குணங்குறிகள் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டன. இப்பன்றிகள் யாவும் பிரித்தானியாவிலிருந்து தருவிக்கப்பட்டவையாகும். பெல்ஜியத்தில் இப்பொழுது உயிருள்ள கால்நடைகளை இடமாற்றம் செய்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. ஜேர்மானிய அரசாங்கம் பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரித்தானியாவில் இறக்குமதி செய்யப்பட்ட ஆடுகளை அழிக்கும்படி உத்தரவிட்டுள்ளது.

பிரான்சில் 50,000 செம்மறியாடுகள் அழிக்கப்பட்டுள்ளன. பிரிட்டனில் இதைப்போல் இரு மடங்கிற்கும் மேலான கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளன. ஐரோப்பிய முஸ்லிம்கள் இம்முறை தமது ஈத் பெருநாளை, பிரதான சடங்குப் பொருளான செம்மறியாட்டிறைச்சி இன்றிக் கொண்டாடியுள்ளனர். தூரகிழக்கு நாடான தாய்லாந்தில் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 15 ஐரோப்பிய நாடுகளில் இருந்து வருகின்றவர்கள் தமது நாட்டிற்குள் மாட்டிறைச்சியையோ அல்லது பன்றியிறைச்சியையோ கொண்டு வரவேண்டாம் என அந்நாட்டு அதிகாரிகள் பிரயாணிகளைக் கோரியுள்ளனர் கால், வாய் வைரஸ் நோயின் வீச்சுக் காரணமாக.

செய்தி ஊடகங்கள் இப்பிரச்சினையை ஊதிப் பெரிதாக்கிவிட்டன என்கிறார்கள் சில பிரித்தானிய அதிகாரிகள். 1967இல் நடந்ததைப் போன்று இச்சம்பவம் மோசமானதல்ல என்கிறார்கள். 1967இல் இத்தொற்றுநோயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ஐந்து மாதங்கள் எடுத்தது. 440,000 கால்நடைகள் கொல்லப்பட்டன. இவ்வாறு நியாயப்படுத்தும் அதிகாரிகள் மேலும் தொடர்கிறார்கள் கால், வாய் வைரஸ் நோய் மனிதர்களுக்கு அதிகம் பாதிப்பை விளைவிக்கவல்லது அல்ல. இது கால்நடைகளுக்கே வில்லங்கமானது. பிரித்தானியப் பொருளாதாரத்தில் கிராமப்புற பண்ணைத் தொழில் சிறிய வீதத்தையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இந்த ஒரு மாதகாலப் பின்னடைவு பிரித்தானியப் பொருளாதார வளர்ச்சியில் 0.05 வீதத்தையே பாதிக்கும் என்றும் நியாயப்படுத்தி, நோயின் தாக்கவீதத்தைக் குறைத்துக்காட்ட முற்பட்டுள்ளனர்.

இருந்தபோதிலும் பிரித்தானிய அரசு முழுமூச்சாக இவ் வைரஸ் நோயினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. பெரும்பாலான கிராமப்புறப் பாடசாலைகள் மூடப்பட்டுவிட்டன. தேசிய பூங்காக்கள் தடுப்பு வேலியிடப்பட்டுள்ளன. கால்நடைகளை இடமாற்றுதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒரு வாரத்திற்கு குதிரைப் பந்தயம் பிரிட்டனில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய ஆளும்கட்சியான தொழிற்கட்சிக்கு இந்நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வு கண்டாக வேண்டிய சூழ்நிலை. ஏனெனில் தேர்தல் காலம் நெருங்கும் இவ்வேளையில் கால்நடைத் தொற்றுநோய்ப் பிரச்சினை தொழிற்கட்சியின் ஆட்சிக்கே உலை வைத்துவிடும். அழிக்கப்பட்ட நோயுற்ற கால்நடைகளுக்காக 225 மில்லியன் டொலர்கள் அரசால் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன. மார்ச் மாதத்தின் இரண்டாவது வாரத் தொடக்கத்தில் அரசு கால்நடைகள் பரிமாற்றத்திற்கு அனுமதியளித்தது.

அதுவும் நோய்கள் எதுவுமற்றது என படுகளங்களில் வைத்து உறுதிப்படுத்தப்பட்ட விலங்கினங்களே கொண்டு செல்லப்படுவதற்கு அனுமதிக்கப்படுகின்றன.

தொற்றுநோய் குறித்த பயப்பிராந்தி ஐரோப்பா எங்கும் பரவியுள்ள நிலையில் பிரித்தானியா மீதான கண்டனக்கணைகள் சீறிப்பாய்கின்றன. ஸ்பானிய பத்திரிகையான 'எல் முன்டோ' தனது ஆசிரியர் தலையங்கத்தில் பிரித்தானியா மேலதிக கவனம் எடுக்காமையே இதன் விளைவாகும் என்று விளாசியுள்ளது. 'பிரிட்டன் கால், வாய் தொற்றுநோய்க்கான தடை மருந்துகள் பாவிக்காத அனைத்து இறைச்சிவகைகளுக்கும் தடைவிதித்திருக்க வேண்டும்' என ஏனைய ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த நாடுகளின் விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஏனைய ஐரோப்பிய நாடுகள் இந்தத் தடையூசியினை பத்து வருடங்களுக்கு மேலாகப் பாவிக்கின்றனர். ஏற்கனவே பிரித்தானியாவிலிருந்து மாடுகளுக்குப் பரவிய Bovine Spongiform Encephalopathy (BSE) நோயினை பரவாமல் தடுப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஒரு பில்லியன் டொலர்களை விவசாயிகளுக்குச் செலவிட்டுள்ளது. BSEநோயினால் மாட்டிறைச்சியின் விற்பனை குறைவடைந்துள்ள நிலையில் ஏனைய கால்நடைகளின் மீதும் பிரிட்டன் கவனம் செலுத்தத் தவறிவிட்டது எனச் குற்றஞ்சாட்டுகின்றன ஏனைய ஐரோப்பிய நாடுகள்.

இந் நோய் சம்மந்தமான ஆய்வில் ஈடுபட்டுள்ள பிரித்தானிய மிருகவியல் வல்லுனர்கள் நோய்கண்ட பன்றிகளை ஆராய்ச்சி செய்ததில் பன்றிகளுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளில் இருந்து பெறப்பட்ட மாமிச மதிய உணவுக்கழிவுகள் உணவாக வழங்கப்பட்டுள்ளன. இந்த உணவுப் பொருட்களில் காணப்பட்ட பன் ஏசியன் வகையைச் சேர்ந்த 'O' வகை வைரசே இந்நோய்த் தொற்றிற்குக் காரணம் என்று குறிப்பிட்டுள்ளனர். இந்த வைரஸ் பிரிட்டனிற்கு சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்படும் இறைச்சி வகைகளில் இருந்து பரவியுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. நோய்கண்ட பன்றிகள் எரியூட்டப்பட்ட பகுதிக்கு அண்மையில் நின்ற மந்தைகளுக்கு காற்றினூடாக இந்நோய் பரவ, மேய்ச்சல் நிலத்தில் வைத்து ஆடுகளிலிருந்து மாடுகளுக்கு இந்நோய் பரவியுள்ளது. பிரிட்டனின் எசக்ஸ் பகுதியிலேயே பெப்ரவரி 20ஆம் திகதி முதன்முதலாக இந்நோய் இனங்காணப்பட்டது.

எசக்ஸ் பகுதியில் கால், வாய் வைரஸ் நோயின் குணங்குறி தோன்றியவுடனேயே ஐரோப்பிய ஒன்றியம் பிரித்தானியாவின் அனைத்து இறைச்சி இறக்குமதிகளையும் தடைசெய்துவிட்டது. பிரித்தானியாவின் கிராமப்புறம் சோபை இழந்துவிட்டது. நகர மக்கள் எவரும் கிராமத்திற்குச் செல்வதில்லை.

பிரித்தானிய விவசாயிகள் தமது மண் நோய்த்தடுப்பு எல்லைக்குள் வைக்கப்பட்டதை இட்டு பெருவருத்தமடைந்துள்ளனர். அட்ரியன் றிச்சட்ஸ் என்ற உள்ளூர் இறைச்சி வர்த்தகர் "எவருமே நாங்கள் வாழ்வதையோ சாவதையோ பற்றியோ கவலைப்படவில்லை" என்று கூறுகின்றார். இறுதியாக 200,000 கால்நடைகள் அழிக்கப்படவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. என்னதான் பிரித்தானியா கால், வாய் வைரஸ் நோய் பற்றி சமாதானம் கூறினாலும் பிரித்தானியாவின் அடித்தட்டு பண்ணையாளர்கள் நிரம்பவே நொந்து போயுள்ளனர் என்பதே உண்மை.

## கால், வாய் வைரஸ் நோயின் சுருக்க வரலாறு

முதன்முதலாக இந்நோய் 1897இல் கண்டறியப்பட்டது. இந்நோயின் தாக்கம் அன்று வடக்கு மற்றும் மத்திய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, யப்பான் பகுதிகளில் பலத்த தாக்கத்தை விளைவித்தது. 1929இல் ஐக்கிய அமெரிக்காவில் மீளவும் இந்நோயின் தாக்கம் ஏற்றபட்டது. 1952இல் கனடாவிலும், 1954இல் மெக்சிக்கோவிலும் இந்நோய் பரவியது.

**1967 ஐக்கிய இராச்சியம்**

பிரிட்டனின் செசயர், சிறோப்சயர், வேல்ஸ் பகுதியில் பரவிய வைரஸ் தொற்றுநோயினால் 440,000 விலங்குகள் அழிக்கப்பட்டன. நூற்றுக்கணக்கானோர் வேலையிழந்தனர். இன்றைய மதிப்பில் 2.3பில்லியன் டொலர்கள் நஸ்டஈடாக வழங்கப்பட்டன.

**பிரான்ஸ்–ஐக்கிய இராச்சியம் 1981**

இறக்குமதி செய்யப்பட்ட பன்றிகளில் இருந்து பிறற்றோன் பன்றிப் பண்ணைக்கு நோய் பரவியது. பிரிட்டனின் கரையோரப் பகுதிகளில் இருந்து நோர்மண்டிப் பகுதிகளுக்கும் காற்றினூடாக தொற்றுநோய் பரவியது 15, 000 விலங்குகள் அழிக்கப்பட்டன.

**தைவான் 1997**

தைவானின் கிசிங்கு துறைமுகப் பகுதியில் 6000 பண்ணைகள் சேதமடைந்தன. பன்றி மாத்திரமே நோயினால் பாதிப்படைந்தது. தைவான் 1912–1913, 1924–1929 வரையான காலப்பகுதிகளிலும் பாதிப்படைந்தது.

**கொரியா 2000**

800 மாடுகள் கொல்லப்பட்டன. கொன்சியோங் பிராந்தியத்தில் நோய் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

**கிறீஸ் 2000**

வடகிழக்கு எவ்றோஸ் பகுதியில் 7000 மிருகங்கள் கொல்லப்பட்டன. மாகாணங்களுக்கிடையே கால்நடைகளை பரிமாற்றம் செய்வது தடைசெய்யப்பட்டது.

**தென் ஆபிரிக்கா 2000**

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் குவாட் சூலு நேட்டால் மாகாணத்தின் காம்பர்டௌவுன் பகுதியில் கால்நடைகளை நோய் தொற்றியது. 5000 விலங்குகள் அழிக்கப்பட்டன. 20 நாடுகள் தென்னாபிரிக்க இறைச்சியைத் தடைசெய்தன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# தேங்காய்ச் சொட்டு

அம்மா ஒவ்வொரு நாளும் எரிச்சலோடும், சலிப்போடும் சொல்லிக்கொண்டிருப்பா.

'அரிசிப்பையை ஓட்டைபோட்டுட்டுது'

'அப்பளத்தைக் காணேல்லை'

'தேங்காய்ப் பாதியை சுரண்டிப்போட்டுது'

இப்பிடி அடிக்கடி அம்மா முணு முணுத்துக்கொண்டிருப்பா.

இதுக்கு என்ன செய்யிறது? ஒரு நாளெண்டாலும் பரவாயில்லை.

எந்த நாளும் இப்பிடித்தான் சரியான தொந்தரவு.

என்ன செய்யலாமெண்டு யோசிச்சன். எலிப்பொறி கண்ணில் பட்டுது எனக்கு பாவமாத்தான் இருந்தது. ஆனா, என்னத்தைச் செய்யிறது?

அணில் தேங்காய்ச்சொட்டின்ரை மணத்துக்குக் கட்டாயம் வருமெண்டு எனக்குத் தெரியும்.

இந்த அணில் தேங்காய்ச் சொட்டைத்தேடி வாறதை நினைச்சுப் பாக்கேக்குள்ள நாங்கள் எந்தச் சொட்டைப் பாத்து யாழ்ப்பாணத்திற்குத் திரும்பி வந்தனாங்கள் எண்டு... எனக்கு மட்டுமில்லை, வந்த எல்லோருக்கும்.... பிறகுகூட விளங்கேல்லைத்தான்.

சரி.... வந்தததுதான் வந்தம். ஆனா.... இங்க... அந்த அணில் மாதிரி என்ன தொந்தரவு செய்தனாங்கள்?

நாங்களும் எங்கட பாடுமெண்டு அவங்கள் சொன்னதைக் கேட்டுக்கொண்டுதான் இருந்தம்.

ஒருதற்றை சோலிக்குக் கூடப்போகேல்லை.

நான் அந்த அணிலைக்கூட.... எத்தின தரம் யோசிச்சு... மனமில்லாம... கடைசியா... அதின்ர ஆக்கினை பொறுக்கமாட்டாமத்தான்.

ஆனா... நாங்கள்? இவங்கள் எங்களை இப்பிடிச்செய்யிறதுக்கு முன்னால.... நான் அந்த அணிலுக்காகயோசித்த மாதிரி யோசிச்சிருப்பாங்களே.

அப்பிடி யோசிச்சிருப்பாங்களெண்டு நானெண்டா நினைக்கேல்லை.

நான் அந்தப் பொறியை ஏத்திப்போட்டுப் பட்டபாடு எனக்குத்தான் தெரியும்.

அணில்... கீச்... கீச்... எண்டு கத்தேக்குள்ள.... நெஞ்சுக்குள்ள ஒரு தடக்... பொறுக்கமாட்டோம். பொறியை விடுவிச்சு விடுவமோ எண்டும் நினைச்சன்.

இடைக்கிடை பொறி வச்ச இடத்தை ஓரக்கண்ணால் பாத்துக்கொண்டு இருந்தன்.

அணில் வரேல்லை. எனக்கு அப்பிடிப்பாத்துக் கொண்டிருக்கத் தைரியமில்லை எழும்பிப்போய்விட்டேன்.

எங்களை... அதுதான் என்னையும் என்ர சிநேகிதியையும் பிடிச்சுக்கொண்டு போகேக்குள்ள, எனக்கு இதொண்டும் நினைவுவரேல்லை. இலேசான பயந்தான் இருந்தது. விசாரிச்சுப்போட்டு விட்டுவிடுவாங்கள்தானே.

ஆனா... நாலைஞ்சு ஆமிக்காரங்கள்.... எனக்கு பயங்கரமாய் ஏதோ நினைப்புகள்.

ஆரோ கையைப் பிடிச்சுக் கூட்டிக்கொண்டு வந்து இருட்டுக்குள்ள தள்ளிவிட....

சுத்திவர பேயள் நிண்டு குதிக்கிற மாதிரி... எனக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்ல.

மரத்துப்போன மாதிரி.... ஏதோ ஒண்டு என்னைக் கவ்விப்பிடிச்ச மாதிரி.... அந்த நேரத்திலையும் நான் இதைத்தான் யோசிச்சன்.... நான் இல்லை நாங்கள்... அப்பிடி என்னதான் செய்தனாங்கள்? அதுக்கு இப்பகூட விடை கிடைக்கேல்ல.

நான் அந்த அணிலுக்கு வச்ச பொறியை எடுத்து விடுவமோ எண்டு யோசிச்சமாதிரி அவங்கள்.... யோசிச்சிருப்பாங்களே...?

அப்பிடி யோசிச்சிருக்க மாட்டாங்களெண்டு அப்பத்தான் விளங்கிச்சுது. முந்திக் கேள்விப்பட்ட விசயங்களுக்கு இப்பத்தான் வடிவம் கிடைச்சுது.

நான் அந்த அணிலைப் பிடிச்சுவைச்சு, ஒரு சித்திரவதைகூடச் செய்யேல்லை. அதை சீண்டிவிட்டு வேடிக்கை பாக்கேல்லை. அதுக்குப் பல்லால கடிக்கேல்லை. நெருப்பால சுடேல்லை. அடிக்கக்கூட இல்லை. அதின்ர தன் மானத்தைச் சுடுற மாதிரி மானத்தோட விளையாடேல்லை.

ஒரே ஒரு சத்தம்தான் 'படார்....' என்று கேட்டுது. ஓடிப்போய்ப் பாத்தன், தலை பொறிக்குள்ள அம்பிட்டுது. பொறியை ஒரு சுற்றுச் சுற்றி இழுத்துப்போட்டு அடங்கிவிட்டுது கண நேரந்தான்.

ஆனால்.... அவங்கள் எங்களை... ஒரு நாள் முழுக்க அறையுக்குள்ள அடைச்சு வச்சு.... வாறவங்கள் போறவங்களெல்லாம்....

அதுகளெல்லாம் என்னத்துக்கு இப்ப...

இப்பகூட... அதை நினைக்கேக்குள்ள முகம் உடம்பெல்லாம் தீப்பிடிச்ச மாதிரி.... அப்பிடி ஓர் உணர்வுதான்...

ஆகா... என்ர உடம்பு... எங்கள மோசமா சித்திரவதை செய்தாங்கள். என்னென்ன செய்ய முடியுமோ எல்லாம் செய்தாங்கள்.

ஆரம்பத்தில் பெருங்குரலில் அலறினனாங்கள்தான், ஆனா.... போகப்போக... குரல் வரேல்லை. எவ்வளவு நேரமெண்டு அலறுறது. தொண்டையும் வறண்டு போட்டுது.

உடம்பெல்லாம் கந்தலாப்போன மாதிரி... தொய்ஞ்சு கிடந்துது. வேதனை... உடம்பெல்லாம் நோ... அசைய முடியேல்லை. நெருப்புப் பிடிச்ச மாதிரி ஒரு உணர்வு. கண்களில் சூடான நீர் திரண்டு வழிஞ்சுது.

சிகரட்டுப் புண்களும், பல்லுக்காயங்களும், அடியின்ர வலிகளும் மரத்துப்போன மாதிரி நினைப்பு.

எனக்கு என் மேலேயே ஆத்திரம் வந்தது. ஏன் இன்னும் உயிர் போகேல்லை?



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருட்டினாப்பிறகு இரண்டு பேர் வந்தாங்கள். என்னையும் என்ர சினேகிதியையும் இழுத்துக்கொண்டு போனாங்கள். அந்த இருட்டுக்குள்ள சனத்தின்ர 'ஊ' என்ற ஊளையில் அது ஒரு வெளியெண்டு தெரிஞ்சுது. அதோட நடக்கப் போறதும் தெரிஞ்சுது.

அணில் பொறியில அம்பிட்டவுடன் நான் அம்மாவைக் கூப்பிட்டன்.

அதை அங்கால தூக்கிக் கொண்டு போகச் சொல்லிக் கத்தினன்.

அம்மா குசினிக்குள் இருந்தபடியே என்னையே தூக்கிக்கொண்டு போய் வெளியில போடச் சொன்னா 'ஐயோ தான் அந்த... அடிபட்டுச் செத்ததின்ர தாய்... அது அண்டு முழுக்க அந்த இடத்தில் நிண்டு வாலை அடிச்சுக்கொண்டு கத்தினபடி இருந்தது.

இடைக்கிடை வளையில அங்கையுமிஞ்சையும் ஓடிப்போட்டு வந்து திரும்பவும் கத்திச்சுது.

அது தன்ர குட்டி அணிலை கூப்பிடுறது போல எனக்கு இருந்துது.

நிலைகொள்ளாமல் அது தவிச்சுக் கொண்டிருக்குது எண்டு நான் ஊகிச்சன்.

எனக்கு சரியான கவலையாயிருந்துது. அந்தத் தாயணில் அழுகிற மாதிரி ஒரு நினைப்பு.

புலம்பியிருப்பா...

எனக்கு இப்பவும் கவலையாத்தான் கிடக்குது. எங்களுக்கு முதல் புதைஞ்சவையெல்லாம் கிண்டித் தூக்கி ஆராய்ச்சி செய்யினம். அம்மாவுக்கு அது... என்ர நினைப்பை இன்னும் நல்லாக்கிளறி விட்டிருக்குமெண்டு நினைக்கிறன்.

அங்க... அம்மா... என்னை அடையாளம் காண காத்துக்கொண்டிருப்பா.. அது சரி... அந்தக் குட்டியணிலின்ர கதிமற்ற அணிலுகளுக்கும் தெரிஞ்சிருக்குமோ?

தெரிஞ்சிருக்காதெண்டுதான் நினைக்கிறன்.



ந.மயூரரூபன்

எனக்குத் தெரியாது' எண்டு நான் அந்தப் பக்கமே பாக்காமல் வெளியில ஓடிவிட்டன்.

பேந்து... அதை தம்பிதான் எடுத்துக் கொண்டுபோய் வெட்டித் தாட்டவன்.

அண்டைக்கு நான் திரும்ப வீட்டுக்குள்ள போனபோது பார்த்தன், அது கொஞ்சம் பெரிய அணில் மாதிரி எனக்குத் தெரிஞ்சுது.

வளையில இருந்துகொண்டு வாலைத்தூக்கித் தூக்கி அடிச்சபடி கீச்... கீச்... எண்டு கத்திக் கொண்டிருந்தது.

அதுதாய் அணில் போல... ஓ... அது

எனக்கு அண்டைக்கு நித்திரையே வரேல்லை.

அழுது கொண்டுதான் படுத்திருந்தன். இப்ப... எனக்கு இந்த தாயணிலை நினைக்கேக்குள்ள என்ர அம்மான்ர நினைப்புத்தான் வரும்.

அவவும் இப்பிடித்தான் ரியூசனுக்குப் போன பிள்ளை வருகுது.. வருகுது... எண்டு வாசலையே பார்த்துக்கொண்டு நிண்டிருப்பா.

எத்தின நாள் சாப்பாடில்லாம சுருண்டிருப்பா. எவ்வளவு இரவுகள் நித்திரையில்லாம கண்ணீர்விட்டுப்

அப்பிடித் தெரிஞ்சிருந்தா தேங்காய்ச்சொட்டைத் திரும்பிப் பாக்குங்களே.

ஆனா... எங்களைப் பற்றித் தெரிஞ்சிருந்தும்... எத்தின பேர் அந்தச் சொட்டை சுவடெடுத்துத் தேடி வருகினம். இதுக்கு என்னத்தைச் செய்யுறது.

ம்.... எனக்கேன் மற்றாக்களைப் பற்றிக் கவலை?

அம்மாவை நினைக்க... ஓ... அந்தத் தாயணில் தன்ர குட்டியணிலின்ர உடல் கூட்டை கடைசி வரையும் கண்டிருக்காது.

அது மாதிரி அம்மாவும்...



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அடைந்த இராணுவத் தோல்விக்கு அரசின் சமன் செய்யும் முயற்சி

"சுதந்திரப் பறவைகள் " பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் பெப்ரவரி-2001

பிரித்தானியாவில் பயங்கரவாத அமைப்புக்களின் தடைப்பட்டியலில் விடுதலைப் புலிகளைச் சேர்த்துவிட்ட செய்திமூலம் சிங்கள மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடிப் பதில் சந்திரிகா அரசாங்கத்தின் பிரச்சார இயந்திரம் வெற்றி கண்டுள்ளது.

ஏன் இந்தப் பிரச்சார மூழ்கடிப்பு?

விடுதலைப் புலிகளால் இராணுவரீதியில் அடையப்பட்ட வெற்றி, சிங்கள அரசாங்கம்-விடுதலைப் புலிகள் எனும் இரு முனையின் இராணுவச் சமநிலையை விடுதலைப் புலிகளுக்குச் சாதகமாகத் திருப்பிவிட்டது.

இதன்மூலம், சிங்கள மக்கள் அரசாங்கத்தின் மீது கொள்ளக்கூடிய வெறுப்பும் விசனமும் பாராளுமன்றில் உறுதியான பெரும்பான்மை யற்றிருக்கும் சந்திரிகா அரசாங்கத்திற்கு ஒரு அஸ்தமனத்திற்கான சமிக்ஞையாகவே அமையும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

அதிலும், ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரசின் உட்கட்சி முரண்பாடும், பலமான எதிர்க்கட்சியாக இருக்கும் ஐ.தே.க. சந்திரிகா அரசைக் கவிழ்ப்பதற்காகச் சந்தர்ப்பத்தைப் பார்த்திருப் பதும் சந்திரிகா அரசாங்கத்தை வெருட்சியடைய வைப்பதாகவே உள்ளன.

மேலும், நோர்வே பிரதிநிதி திரு.எரிக் சொல்கெய்ம் புலிகளின் தளமான வன்னிக்கு வந்து, தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களைச் சந்தித்துச் சென்றதும், உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து சிறீலங்கா எதிர்பார்த்த உதவி கிடைக்காது ஏமாற்றத்தில் முடிந்ததும், சந்திரிகா அரசாங்கத்தின் இராஜதந்திரத் தோல்வியாகவே சிங்கள மக்களை விளங்கவைத்துள்ளது.

விடுதலைப் புலிகள் அடைந்த இராணுவ வெற்றியைத் தொடர்ந்து ஏற்பட்ட இத்தகைய சூழ்நிலையில், அரசாங்கம் தன்னை நிலைப் படுத்திக்கொள்ள, இத்தோல்வியை ஈடுசெய்ய வேண்டிய தேவை சந்திரிகா அரசாங்கத்தின் இருப்புக்கு நிர்ப்பந்தமாகியது.


இதனை ஈடுசெய்வதென்பது மீளவும் ஒரு பெரியளவிலான இராணுவ வெற்றியினாலேயே அடைய முடியும் என்ற நிலையில், அதனை அடைவதற்கான இராணுவப் பலமோ, வாய்ப்போ சிங்களப் படைத்தரப்பிடம் இல்லை யென்பது இராணுவ நோக்கில் பட்டவர்த்தனமான உண்மையாகும்.

எனவே, அடையப்பெற்ற தோல்வியை சிங்கள மக்களுக்கு சமன்செய்து காட்டவேண்டிய நெருக்கடியில், பிரித்தானியாவின் தடைச் சட்டத்தில் விடுதலைப் புலிகளைச் சேர்த்துக் கொள்ளும் விடயத்தை அதற்கு இருக்கக் கூடிய முக்கியத்தைவிடவும், அதனை ஒரு பெரும் விவகாரமாக தோற்றப்படுத்தியதன் மூலம், பிரித்தானியாவில் புலிகளின் தடையை, தமிழர் மீது தாம் ஈட்டிய பாரிய வெற்றியாகவும், தமது அரசின் இராஜதந்திர மேன்மையின் வெற்றியாகவும் சிங்கள மக்களுக்கு அதனை உருவகப்படுத்தி, சிங்கள மக்கள் அரசின் மீது கொண்டுள்ள விசனத்தைத் திசைதிருப்பி, அவர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடிப் பதில் வெற்றிகண்டுள்ளது சந்திரிகாவின் அரசு.

ஆனால், மறுவளத்தே, அரசின் இந்தப் பிரச்சார முயற்சி 'இலங்கையில் தமிழ்த் தேசியம் என்று ஒன்றில்லை', 'புலிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளல்லர்' என வாதிட்டு வந்த சிறீலங்கா அரசிற்கும், அதனைச் செவி மடுத்து வந்த உலக நாடுகளிற்கும் ஈழத் தமிழ்த் தேசியத்தின் வீச்சை விளங்க வைத்துள்ளது.

தென்னிலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளும், தமிழ்க் கட்சிகளும் இராணுவப் பிடியில் சிக்கியுள்ள தமிழ் மக்களும், கல்விசார் சமூகங்களும் அமைப்புகளும் தமிழ்த் தேசியத்தின் வீச்சையும், நிலைப்பாட்டையும் செயல்பூர்வமாக விளக்கியுள்ளன.

விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ், சிங்கள இனவாதத்தின் மிரட்டல்களையும் கடந்து அணிதிரண்டு நிற்கும் தமிழ்த் தேசியத்தின் அனைத்துச் சமூகங்களினதும் செயல் முனைப்பு, அரசு உருவாக்கிய மாயை யான சமன் செய்தலை உடைத்து தன் செயற்திறனுக்குரிய விளைவை அடைய வைக்கும் அதன் மையக்களமாக வன்னி விளங்கும். இதனை வன்னி மக்களும் புரிந்து கொள்வார்கள்.


எரிமலை
L'Erimalai.
அனல் :8.
தண்டவாளத்திலிருந்து விலகியது யார்? பொய் சொல்வது யார்?
தமிழரே சிந்தியுங்கள்!
புலிகளைப் பிடிப்பதைக் கூட்டணி ஆதரிக்கிறது.
நாடுமீட்க ஆணைபெற்றோரே, விடுதலைப் பாதையில் இதுவரை நீவிர் ஈட்டிய சாதனை என்ன?
கூட்டணிக்கு அத்துலத்முதலி பாராட்டு!
ஏன்?
கூட்டணிக்கு இனியும் என்ன வேலை?
5 மாதத்தில் தமிழீழம்!
எந்தவழியிலும் தமிழீழம்!
இலட்சிய இதயங்களில் அமிர் மூட்டிய தீ!
வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக்குழு.பிரான்ஸ்.

எரிமலை ( 1982 ஓகஸ்ட்)

## புரியலையோ புலையரே?

நம் தெய்வம் நீ தான் எம் தமிழே!
நமதன்னை நாசமாகில் நாமெங்கே
நானிலத்தில்?
சீறிவரும் பேரிரைச்சற் புயலில்
நீ சிக்கிடினும்
சீருடைய நின்னதனைச் சீர்குலைய
விடமாட்டோம்.

பேய் போலக் கத்திவரும் பேடியர்க்கு
பேச மட்டுந்தான் தெரியும்
என் செய்வோம்?
வாயோயக் கத்தியவர் வாய்கிழிய
முன்னே— நாம்
வாளெடுத்துப் போரிடுவோம்
வளமான தமிழ் வாழ!

களவுடனே கற்பழிக்கும் காக்கியுடைக்
காடையர்க்கு
காதலெனும் காப்பியத்தின் கருதானும்
புரிந்திடுமோ?
காவியத்துக் காலமதில் கட்டவிழ்த்த
நம் தமிழை
காக்காத இவரெல்லாம் சாக்கடையின்
சாவைகளோ?

தீயில் வெந்தது— நம் தமிழல்ல —
தின் பண்டங்களே.
தீயாய் நாமில்லையெனில் —
தீயவர் நீவீரன்றோ?
போராய் முடிந்திடவே போர்க்களம்
செதுக்குகின்றோம்
போர்க்கோலம் பூணுகின்றோம்
போராடி வெல்லவென!

ஈழமது கேட்கின்றோம் ஈனமது
என்றிடுவீர்
ஈனரே கேட்கவில்லை உம்முடைய
நிலமதனை!
சிக்கியதை மீட்டிடவே சினங்கொண்டு
புறப்பட்டோம்,
புலிகளாய் மாறிவிட்டோம்
புரியலையோ
புலையரே?
"விலங்குடைத்து வீசட்டும் வீரத்தமிழ்"

-பா.அருமருகன்
பாரிஸ்-16



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Stupid

-ஆருத்திரா.
சூரிச்-சுவிஸ்

எனக்கு ஆங்கிலம்
தெரியாது.
ஒரே நாளில் திட்டுவதற்குரிய
ஒற்றைச் சொல்லை பழகிக் கொண்டேன்
ஸ்ருப்பிற்.

பயங்கரவாதப் பட்டியலில்
விடுதலைப் புலிகளைச் சேர்த்த
கைங்கர்யத்தால்
எனக்கு ஆங்கிலம் பேச வருகின்றது.

மிக நீண்ட கொடுமையிலிருந்து
விடுபட முயல்வதை
பயங்கரவாதம் என்றால்
எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

ஆங்கில தமிழ்
உறவுகளுக்கிடையிலான
கறுப்பு நாளது.

ஒரே இரவில்
வீரபாண்டிய கட்டபொம்மனும்
பாளையக்காரர்களும்
பண்டாரவன்னியனும்
கனவில் வந்தார்கள்
நெருப்பெறிந்து போனார்கள்.

முன்பே சற்றுத் தெரிந்திருந்தது
அமெரிக்கா பின்னால் நீர்
ஓடுப்பட்டுத் திரிவதைக் கண்டவுடன்
ஏகாதிபத்தியம் எழுவதைக்
கண்டோம்.

"இது வழமையான நடவடிக்கை"
ஈராக் மீது குண்டு வீசிய
அமெரிக்கா சொன்னவுடன்
நீரும் தலையாட்டினீர்.
காலைக்கடன் முடிக்க
கொல்லைக்குச் செல்வது போல
இது உங்களுக்கு வழக்கமான
நடவடிக்கை.

உங்களிடம் கேட்டுக்கொண்டுதான்
சூரியன் உதிக்குமாமே!
ஆனால் எங்களிடம்
கேட்டுக் கொண்டுதான்
விடியல் எழுகின்றது!

விரைவில்!
எங்கேயும் எதிலேயும்
தங்கியிராத எங்களுக்கு
விடியல்
அதற்குரிய நாளில் நிறைவேறும்.

பெப்ரவரி நாலம் தேதி
தனித்திருந்த தேசமொன்றையும்
எங்களையும்
சிங்களனிடம் தாரை வார்த்து
மிக நீண்ட கொடுமையொன்றை
நிகழ்த்தக் காரணமாகி
அண்மையில் எங்களை
பயங்கரவாதி என்ற உனக்கு
ஸ்ருப்பிற்.

இறுதியில் நான்
ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற
என் அப்பனின் கனவு பலித்தது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய ஆக்கிரமிப்புக் காலகட்ட அவலங்களைச் சித்தரிக்கும் உண்மைக் கதைகளின் தொகுதியாக 1995இல் வெளிவந்த "வில்லுக்குளத்துப் பறவை"யில் உள்ள கதைகளை தற்போது எரிமலை வாசகர்களின் கரங்களில் சேர்ப்பிக்கின்றோம்.

இந்திய ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் உண்மை நிகழ்வுகளே கதை வடிவில் உணர்வு பூர்வமாக இங்கு பதிவு பெற்றுள்ளன. அமைதிப்படை ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப்பாவி மக்களின் கதைகள், போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள், போராளிகளை நேசித்து அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள்... எல்லாமே நாம் வாழ்ந்த காலத்தின் உண்மைகளை நெஞ்சிற் பதியுமாறு நெருக்கமாய்ச் சொல்லுகின்றன. அண்மைய வரலாறு கலையுடன் பிணைந்து உருவான இப்படைப்புக்கள், தமிழிற்குப் புதிய வரவுகள் என்று சொல்லத்தக்கவை.

# வில்லுக்குளத்துப் பறவை

'வெளியே வா....!' யாரோ அக்காவைக் கூப்பிட்டார்கள்,

சறோ அக்கா படபடப்போடு கடப்படிக்குப் போனாள்.

'ஐயோ என்ர பிள்ளைகளே!' என்று வானம் இடிய ஓலமிட்டாள் அவள்.... முன்னால் நின்றவர்களின் கைகளில் கத்தியும் கோடரியும்...

சறோ அக்கா முற்றத்திற்கு வந்தாள்...

வாசலில் துப்பாக்கியும் கையுமாக இந்தியப் படை வெறியர்கள்.

'நட முகாமுக்கு' என்று கத்தினான் ஒரு முரடன்

அக்கா நடந்தாள்.

பிள்ளைகள் வாய்விட்டு அழத்தொடங்கிய போது, 'ஏன் பிள்ளையள் குழறுறீங்கள்... எதையோ கேட்கிறத்துக்குத்தானே கூட்டித்துப் போறானுவள். விட்டிடுவானுகள்' என்று தேற்றினாள் அவள்.

கொஞ்ச நேரத்தில் ஊரே கூடிவிட்டது.

'பாவம்... இவளை எதுக்குத்தான் கொண்டு போறானுவளோ....' என்று படபடத்தார் பக்கத்து வீட்டுக் கிழவர்.

* * *

சம்பூர் நூல்நிலையத்தை இந்தியப் படை முகாமாக மாற்றியிருந்தார்கள். கிராம மக்களுக்கு அறிவூட்ட, ஒரு காலத்தில் ஊர்ப்பெரியவர்களால் அந்த நூல்நிலையம் அமைக்கப் பட்டது. இன்று வல்லாளுமை வெறியர்களின் கொடிய அடக்குமுறையை ஒரு வரலாற்றுப் பாடமாக, சம்பூர் மக்கள் இங்கே படிக்கிறார்கள். அன்றாடம் சித்திர வதைகள்- பெண் வதைகள்- கொலைகள்...

முகாமின்-முற்றத்தில் நின்ற சறோ அக்கா நினைத்துப் பார்த்தாள்... இந்த முகாமை ஒட்டினாற்போல் சம்பூர் வில்லுக்குளம். குளத்திற்கு மறுபக்கத்தில், தூரத்தில் கூனித்தீவும், அவள் வீடும். வீட்டில் பிள்ளைகள் என்ன செய்யுமோ...?

இரவாகி... உலகம் இருண்டு போய்க் கிடந்தது. துப்பாக்கிகளோடு படை வெறியர்கள் அங்கும் இங்குமாக...

அப்போதுதான்...

அந்தக் கொடிய சிரிப்பை அவள் கேட்டாள். அறையிலிருந்து வெளியே எட்டிப்பார்த்த இந்தியப் படை மேஜர், அவளை உள்ளே வருமாறு அழைத்தான்... பின்பு அவளுக்குத் தெரியும்- அவன்தான் 'மேஜர் கோர்'

உள்ளே நடுங்கிக்கொண்டே போனாள் சறோ அக்கா. சாராயத்தின் நெடி மூக்கைத் துளைத்தது.

'சூடைக்குடா ராயப்பு யேசுராஜாவின் சாவீட்டுக்குப் போனாயா...?'

யாரோ ஒருவன் மேஜர் கோரின் ஆங்கிலத்தைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தான்.



அக்காவிற்கு இப்போது நிலைமை தெளிவாயிற்று. இரண்டு நாட்களுக்கு முன்புதான் அவள் யேசுராஜாவின் சாவீட்டிற்குப் போய் வந்தாள். யேசுராஜா விடுதலைப் புலி அல்ல- ஆனால், இந்தியப் படையால் தேடப்பட்டவன். கொடுமையான சித்திரவதையின் பின்பு அவனைக் கொன்று பிணமாக வீசினார்கள். அண்மையில் திருமணமானவன் யேசுராஜா- மனைவிக்குச் சின்ன வயது. போய் அவளுக்கு ஏதாவது ஆறுதல் கூறவேண்டும் போல் சறோ அக்காவுக்குத் தவிப்பாய் இருந்தது. 'யேசுராஜாவின் சாவீட்டிற்கு யாரும் போகக்கூடாது' என்று இந்தியப் படை போட்ட தடையையும் மீறி, அவள் அங்கே போனாள். அந்தப் பெண்ணின் கண்ணீரை முடிந்தவரை துடைத்து, ஏதோ ஒரு மன அமைதியோடுதான் அவள் வீடு திரும்பினாள். அதற்குள்....

'ஓம்... போனனான்தான்.... சாவீடு எண்டபடியாத்தான் போனனான்...'

அக்கா ஒப்புக்கொண்டாள்.

மேஜர் கோர் இன்னொருமுறை அதிர்ந்து சிரித்தான் பின்பு..

அறையிலிருந்த மற்ற இந்தியப் படை ஆட்களை வெளியே போகச் சொல்லி விட்டுக் கதவைப் பூட்டினான் அவன்.

அக்காவை ஒரு நாற்காலியில் உட்காரச் சொல்லிக் கையால் காட்டிவிட்டு, முன்னால் ஒட்டினாற்போல் இன்னொரு நாற்காலியைப் போட்டு உட்கார்ந்தான் மேஜர்.

விலங்குத்தனத்தின் இறுக்கமான பிடி.... கொடிய வெறியின் திணிப்பு... மனிதத் தன்மையின் சமாதி...

அந்த இரவு கொடுமையானது எங்கே ஓட முடியும்?

காலையில் கதவு திறக்கப்பட்டதும்- 'நீ போகலாம்' என்று சொன்னான்... கோர்.

அக்கா தெருவுக்கு வந்தாள்.

சினத்தோடு காறித் தெருவில் துப்பினாள்.

'இவனுவள் என்னதான் செய்தாலும் என்ர தமிழீழ உணர்வை அழிக்க முடியாது' என்று உறுமினாள் அவள்.

* * *

கூனித்தீவில் தண்ணீர்த்தாங்கிக்குப் பக்கத்தில்தான் சறோ அக்காவின் வீடு. இரண்டு அறைகளும் பாதி முன் மண்டபமும். வீட்டிற்குப் பின்னால் அழகான அந்த வில்லுக்குளம்.

தாயகத்தோடு ஒன்றிப்போன உணர்வுகள்- கணீரென்ற மிடுக்கான பேச்சு. கள்ளம் கபடமில்லாத சிரிப்பு, துணிச்சல் - கூனித்தீவில் அக்கா நிழல்மரம்.

'வாங்க ஆச்சி... இருங்க... சங்கத்து வேலை எல்லாம் ஒழுங்கா நடக்குதுதானே?' 'எப்படி அண்ணன் பானைகளை சூளையில வச்சிட்டீங்களா?' 'கேள் புள்ளை...சிங்கள 'ஆமி'க்காரனுகள் நம்மட பொம்புளையள படுத்துகிற பாட்டை கட்டுரையாக எழுதி வெளி உலகத்துக்குத் தெரியப்படுத்த வேணும்...'

வீட்டில் எல்லோரும் நிறைந்துபோய் இருப்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்கள். அக்காவின் குரல் 'கணீர்' என்று ஒலிக்கும். மட்பாண்டச் சங்கத் தலைவி- மாதர் சங்கத் தலைவி, அன்னையர் முன்னணித் தலைவி, சைவ மங்கையர் கழகத் தலைவி, மக்கள் குழு உறுப்பினர் என்று கூனித்தீவில் எல்லாமே அக்காதான் என்பதால், அக்கா வீடு கலகலப்பாகவே இருக்கும்.

1984இல் அக்காவுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிமுகமானார்கள். புலேந்திரன், சந்தோஷம், கணேஸ் போன்ற திருகோணமலை மாவட்டப் பொறுப்பாளர்கள் அக்காவை அடிக்கடி சந்தித்த நாட்கள்... அக்கா புலிகள் இயக்கம் அல்ல, ஆனால் புலிகளின் பெரிய விடுதலை வேட்கையும், ஈடிணையற்ற வீரமும், அவர்களின் மாபெரும் உயிரிழப்புக்களும் அவள் நெஞ்சைத் தொட்டன.

சறோ அக்காவுக்கு 42 வயது. கணவனோடும் 7 பிள்ளைகளோடும் அவள் வாழ்க்கை. மூத்தவளுக்கு வயது 18. கடைசிப்பெடியன் இப்போது தான் 6 வயதைத் தாண்டிக் கொண்டிருக்கிறான். இந்த நீண்ட வாழ்வில் தமிழீழத்தின் போராட்ட வரலாற்றை அவள் நன்கு அறிவாள். தமிழர் போராட்டத்தில் இயலாமைகள், போலித்தனங்கள், தொய்வுகள் எல்லாம் நிறைந்து போன ஒரு காலத்தில்தான், விடுதலைப் புலிகள் தோன்றினார்கள். அவர்கள் வாழ்க்கை எத்தனை பெரியது...!

தொலைவில் எங்கோ காட்டில் நீண்ட ஒதுக்குப்புற வயல் வெளிகளில் அவர்கள் புல்லோடு புல்லாகப் படுத்திருப்பார்கள். அக்கா சோறும், கறியும் சமைத்துக்கொண்டு போய்க் கொடுப்பாள்.

'நீங்கள் என்ர பிள்ளையளைப்போல... இல்லையில்லை... நீங்கள் என்ர பிள்ளையள்...' என்பாள் அக்கா. வீட்டிலும் இப்படித் தான்... அடுப்பில் எப்போதும் 'தேநீர்ப்பானை' கொதித்துக்கொண்டேயிருக்கும்.

காயப்பட்ட விடுதலைப் புலிகள் பலதடவை அக்காவீட்டில் மருந்து கட்டியிருக்கின்றார்கள். புலிகளுக்கு மட்டுமல்ல, கூனித்தீவுக்கே அக்கா வீடு ஒரு மருத்துவ நிலையம் போலத்தான். சிறீலங்காப் படைகள் வெறிக்கூத்தாடிய 1985-86-87களில், சறோ அக்காவைச் சிங்களப் படைகள் வெறிகொண்டு தேடின. அப்போது சில காலம் தலைமறைவாக அவள் வாழநேர்ந்தது. 'உன்னுடைய பிள்ளையளுக்காக நீ மறைந்து வாழத்தான் வேண்டும்' என்று யாரோ அவளுக்கு அறிவுரை சொன்னபோது, அக்கா திருப்பிக் கூறினாளாம்... 'பெற்ற பிள்ளைகளுக்காக மட்டுமல்ல மற்றப் பிள்ளைகளுக்காகவும் தான் நான் தலைமறைவாகிறேன்.'

ராஜீவ் -ஜே.ஆர். உடன்படிக்கையைத் தொடர்ந்து, சறோ அக்கா வெளிச்சத்துக்கு வந்தாள். விடுதலைப் புலிகளின் மேடைகளில் மக்கள் அவளைப் பார்த்தார்கள். திலீபனின் இரங்கல்க் கூட்டங்களில் அவள் குரல் இடியாய் முழங்கியது.

அக்கா இந்தியப் படைக்கும் 'றோ'வின் கைக்கூலிகளுக்கும் அடிவயிற்றில் நெருப்பானாள்.

* * *

13-07-89 தான் அந்த நாள்.

காலையில் படுக்கை விட்டெழுந்ததும் சறோ அக்கா வழமைபோல் சுறுசுறுப்பானாள்.

எத்தனை துன்பங்கள்.

87 ஒக்ரோபர் 10இல் இந்தியப் படைக்கும் புலிகளுக்கும் போர் தொடங்கிய நாளிலிருந்து, இரண்டு மூன்று தடவைகளுக்கு மேல் அவளை இந்தியப் படை வெறியர்கள் முகாமுக்குக் கொண்டுபோய், என்ன பாடெல்லாம் படுத்திவிட்டார்கள்.

அக்கா நெருப்பில் நனைந்து நிற்கிறாள்.

எப்போதும் போல அடுப்பில் தேநீர்ப்பானை கொதிக்கிறது.

மனைவியின் துன்பங்கள் - அவளுக்கு ஏற்பட்ட கொடுமைகள், எல்லாவற்றையுமே அமைதியோடு தாங்கிக்கொண்ட கணவனுக்கு ஆசையோடு தேநீர் போட்டுக் கொடுத்துவிட்டு, ஐந்தாவது பெண் மனாவைக் கூப்பிட்டு மடியில் வைத்துக் கொஞ்சினாள் அக்கா.

மனாதான் அக்காவுக்குச் செல்லப்பெண்.

நடுப்பகல் ஆயிற்று சாப்பிட உட்கார்ந்த அக்கா சொன்னாள், 'காட்டிலையும் மேட்டிலையும் பிள்ளையள் என்ன பாடுபடுகுதுகளோ...?'

எப்போதும் அக்காவுக்குப் புலிகளின் நினைவு தான்.

விடுதலைப் புலி லிங்கம் அடிக்கடி அக்கா வீட்டுக்கு வந்து போவான். அண்மையில்தான் இந்தியப் படையின் கைக்கூலிகள் அவனைப் பிணமாகப் போட்டார்கள். புலிகளின் மருந்துப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்தவன் லிங்கம். அவன் அக்காவிடம் எப்போதும் சொல்லுவான் கண்ட கண்ட ஆட்களையெல்லாம் வீட்டுக்குள்ள எடுக்காத அக்கா... யார் நல்லவன்... யார் கள்ளன் என்று கண்டுபிடிக்க முடியாத காலம்.

உண்மைதான்...

அக்காவின் வீட்டில் நன்றாகப் பழகி சோறுண்டு சென்றவர்களில் இந்தியப்படையின் கையாட்களும் இருக்கவே செய்தார்கள்.

துரோகம் எங்குதான் இல்லை? விடுதலைப் புலிகளின் பெரிய உயிரிழப்புக்களையும், வீரத்தையும் கண்முன் கண்டும் அவர்களைக் காட்டிக் கொடுக்கும் தலையாட்டிகள் எத்தனை பேர்...?

கொடிய உலகம்... கொடிய மனிதர்கள்...

பின்னேரம் அக்கா அழகான அந்த வில்லுக் குளத்துக்குக் குளிக்கப்போனாள்... பச்சைப் புற்கள்... 'தளதள' என்ற தண்ணீர்.. கொக்குகள்... மீன்...

ஒரு தொல்லையும் இல்லாமல் முழு விடுதலையைச் சுவைத்தபடி வெள்ளைச் சிறகை நீள விரித்து வானத்தில் பறந்த பறவையை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டே இருந்தாள் அக்கா.

இரவு ஆயிற்று.

ஓ...!

அந்த இரவு கொடியது 7மணி இருக்கும்



சாவு அக்காவின் படலையைத் தட்டிய முரட்டுத்தனமான மணித்துளிகள்.

மனா அம்மாவின் சேலையைப் பிடித்துக் கொண்டிருந்தவள் பதட்டத்தோடு கடப்படியைப் பார்த்தாள்... இருளில் ஆட்களின் முகம் தெரியவில்லை... ஆனால்... நான்கைந்து பேர்.

'வெளியே வா...!'

யாரோ அக்காவைக் கூப்பிட்டார்கள்.

சறோ அக்கா படபடப்போடு கடப்படிக்குப் போனாள்.

'ஐயோ என்ர பிள்ளைகளே!' என்று வானம் இடிய ஓலமிட்டாள். அவள்... முன்னால் நின்றவர்களின் கைகளில் கத்தியும் கோடரியும்...

ஒருவன் அக்காவின் கையை முரட்டுத் தனமாகப் பிடித்து, தெருவில் 'கொறகொற' என்று இழுத்தான்.

பதறி அடித்துக்கொண்டு தெருவுக்கு ஓடிவந்த பிள்ளைகளையும் கணவனையும்... 'யாரும் வெளியே வரக்கூடாது தெரியுதா?' என்று ஒரு தடித்த குரல் எச்சரித்தது.

'ஐயோ... மனா மனா...' என்று ஏங்கிக் கத்தினாள் அக்கா.

ஊர் மூலையில் நாய்களின் ஊளை...

அக்காவின் வீட்டுக்குக் கொஞ்சம் தள்ளினாற்போல... அதே தெருவில்.. அவள் உடலின் மீது கத்தி வீசப்பட்டது.

'நீயாடா பாவி...?' என்று அக்கா கூச்சலிட்டதைத் தெருவில் நின்றவர்கள் கேட்டார்கள். அறிமுகமானவர்களுக்கு அவன் முகம்கூடத் தெரிந்தது.

இந்தியப் படையின் அந்தக் கைக்கூலியை கூனித்தீவு முன்பே அறியும். அக்கா வீட்டுச் சோறுகூட அவன் உடலில் தசையாய்... செந்நீராய்....

கத்திகளாலும், கோடரியாலும் அக்கா மாறிமாறி விறகுக்கட்டைபோல் பிளக்கப் பட்டாள்.

நொடிப்பொழுதில்.. அந்தத் தாய் ஓவியம் தெருவில் கிழிந்து கிடந்தது.

அக்கா போய்விட்டாள்!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பொங்கு தமிழ் மங்காதிருக்க...

ஓர் இனத்தின் அடையாளங்களுள் அவ்வினத்தின் தனித்துவத்துக்கு முதுகெலும்பாக விளங்குவது அதன் மொழியாகும். ஏனைய கலைகள், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் எளிதில் ஏனைய இனங்களிடையேயும் பரவி விடுவதால் அக்கலைகள், பண்பாடுகளை அந்த இனத்தின் தனித்துவம் நாட்டும் அடையாளங்களாகக் கொள் முடியாதுள்ளது. எனவே ஓர் இனத்துக்கே அடிப்படையாக முற்றுமுழுக்க விளங்குவது மொழியேயாகும். அதிலும், பிரான்சு நாட்டார் பேசுவதால் பிரெஞ்சு, சீனநாட்டார் பேசுவதால் சீனம் என்று நாடுகளின் பெயரால் அங்கங்கு பேசப்படும் மொழிகள் பெயர்பெறும் மரபுக்கு மாறான முறையில், தமிழ் என்ற மொழியைப் பேசும் காரணத்தாலேயே தமிழ்நாடு, தமிழ் நிலங்கள், தமிழர் என்ற பெயர்கள் அமைந்தன. இந்த நிலையில் எங்களுக்கென்று முழு ஆட்சிவலுக்கொண்ட ஒரு நாடு இல்லாத நிலையில் எங்கள் மொழியான தமிழ் அழிய நேர்ந்தால், உலகின் பல நாடுகளில் இன்று வாழும் தமிழர்கள் அந்தந்த நாட்டின் ஆளும், வழங்கும் மொழிகளையே பேசுபவர்களாகவும், கற்பவர்களாகவும், கையாளுபவர்களாகவும் மாறி ஆணத்துள் கரைந்துவிட்ட கருவாடுபோல இன அடையாளத்தை இழப்பதோடு அந்தந்த இனங்களுள்ளும் இழிசனராகி நடைப் பிணங்களாக நேரிடும்.

இந்த நிலைமையைத் தொலைநோக்கிற் கண்டுகொண்டு மதிநலம் வாய்ந்த தமிழ்ச் சான்றோர்கள் தாம், பல நூற்றாண்டுகாலமாக தமிழின் தனித்துவ வரம்புகளுக்கு உடைவுகள் ஏற்பட்ட காலங்களிலெல்லாம் அவ்வுடைவுகளை, போராடி வெற்றிகரமாகச் சீர்செய்து வந்திருக்கிறார்கள். சங்கமருவிய காலத்தில் தமிழ்நாட்டினுள் பெருக்காகப் புகுந்துகொண்ட வட ஆரியர்களின் திட்டமிட்ட ஊடுருவல்களால் தமிழரின் வாழ்வியலிலும், அரசியலிலும், கடவுட்கொள்கையிலும் இனத்தின் தனித்தன்மை பற்றிய நம்பிக்கைகளிலும் பல உடைவுகள் ஏற்படுத்தப்பட்டன. திரிபுகள் ஏற்படுத்தப்பட்டன. தமிழ்நிலங்களை ஆட்சி புரிந்து வந்த முடியுடை மூவேந்தர்களுள் சோழர்கள், தம்மை வசப்படுத்தி தம் அரண்மனைப் புரோகிதர்களாக இடம்பிடித்துக் கொண்ட வடநாட்டு ஆரியர்களின் பசப்பல் வலையில் முற்றாய் உள்ளம் பறிபோனவராய், அவர்களின் மதியுரைகேட்டு, வட ஆரிய அரச பரம்பரைகளுள் மேலோங்கியிருந்த ரகுவம்சத்தவராகத் தம்மைப் பிரகடனப்படுத்திப் பெருமிதங்கொண்டனர்.



அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்பதற்கிணங்கவே தமிழ்நாட்டுக் குடிமக்களிற் பலர் சமஸ்கிருதத்தைக் கடவுளின் மொழியென்று கைதொழுதனர், கற்றனர். அதனால், தங்களை மேற்குடியினராகக் கருதி இறுமாந்தனர். தமிழைக் காட்டுமிராண்டிகள் மொழியென நம்பினர்.

ஆயினும், சங்கமருவிய காலத்திலிருந்து பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பிய காலம் என நீண்ட 1500 ஆண்டு காலப்பகுதியில், தமிழ்மொழியியல் தொடர்பில், வடமொழிச் செய்யுள் யாப்புகள், வடமொழி இலக்கிய வடிவங்களான காவியம், புராணம், இதிகாசம் போன்ற வகைகள் தமிழில் நுழைந்தபோதும், தமிழோடு சரிக்குச்சரி சமஸ்கிருதம் கலந்த மணிப்பிரவாளநடை உருவாகிவிட்டபோதும், ஏற்கனவே வழக்கொழிந்திருந்த சமஸ்கிருதம் தமிழ்நாட்டில் பேச்சுமொழியாகப் புத்துயிர் பெறமுடியாமல் போனமையும், தமிழ்மொழியின் உடைவை உள்ளம் ஏற்காத தமிழ்ச் சான்றோர்களான புலவர் பெருமக்கள் தமிழினிக்கும் புதிய நூல்களையும் ஆக்கி வந்தமையும் தமிழ் மொழி அழிந்துவிடாமற் காத்துவந்துள்ளன.

கடந்த நூற்றாண்டில், தமிழின் தற்தோற்ற முதன்மை பற்றிய கருத்து, அதன் தூய்மை, தனித்துவம் வாய்ந்த மொழியிலக்கணம் என் பவற்றுக்கு ஊடுருவிகளால் ஏற்படுத்தப்பட்ட உடைவுகளைச் சீர்செய்வதற்கென எழுச்சி கொண்டு தனித் தமிழியக்கத்தை நிறுவிப் பணிபுரிந்த சான்றோர்களுள் தென்னிந்திய மறைமலையடிகள், பரிதிமாற்கலைஞர், திரு.வி.க, முனைவர் மு.வரதராசன், ஈழத்து சோ. இளமுருகன் என்போர் குறிப்பிடத் தக்கவர்கள். இவ்வியக்க எழுச்சியில் எழுந்த தமிழ் மறுமலர்ச்சிச் செயற்பாடுகளின் பெறுபேறாக இன்று தமிழில் எழுதுபவர்கள் பெரும்பாலும் தங்கள் ஆக்கங்களில் சமஸ்கிருதச் சொற்கள் நுழைய முற்படும்போது, அவற்றை அருவருத்துத் தவிர்த்துக் கொள்கின்ற மேம்பாட்டைக் காணமுடிவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இன்னும் ஒருபடி மேலே போய், பிறமொழிச் சொற்களை அறவே தவிர்த்துத் தூய தமிழிலேயே எழுதுவதன்றிப் பேசவும் வேண்டுமென்ற முனைப்பு தமிழ்நாடு, மலேசியா போன்ற பிற தமிழ் வழங்கும் நாடுகளை விட மிக உச்சமாக எங்கள் தமிழீழத்தில் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பல நூற்றாண்டுகளாக தமிழ் மொழிக்கு ஏற்பட்டுவந்துள்ள உடைவுகளைச் சீர்செய்வதோடு, புதிய விஞ்ஞான யுகத்தில் பெருக்கமாக எழும் விந்தைகளைக் குறிக்கவென ஆங்கிலம் போன்ற வேற்றுமொழிகளின் சொற்கள் தமிழில் புகுவதால் ஏற்படக்கூடிய உடைவுகளையும் தவிர்க்கப் புதிய கலைச்சொற்களை ஆக்குவதில் நாம் தீவிரங்காட்ட வேண்டியுமுள்ளது.

ஆதிமொழிகளான இலத்தீன், சமஸ்கிருதம், கிரேக்கம் போன்று ஆதிமொழிகளுள் மூத்த தமிழும் வழக்கொழிந்து போகாமற் 'சீரிளமைத் திறங்குன்றாது' இன்றுவரை வாழ்கின்றமை பெருமைக்குரிய செய்தி.


பரத கண்டத்தில் தமிழ் வழங்கிய நிலங்கள் பதினெட்டு இருந்தன. பிற்காலத்தில் செந்தமிழ் வழங்கும் நிலங்கள், கொடுந்தமிழ் வழங்கும் நிலங்கள் என்று அவை பாகுபடுத்தப்படும் அளவிற்குப் பிரதேச வழக்குகள் வலிமைபெற்ற தனித் தனி மொழிக் குழுக்கள் தமிழரிடையே உருப்பெற்றுவர, இடையில் தமிழ் நிலப்பரப்புள் வந்து நுழைந்த, உறவாடிய சமஸ்கிருதமொழிச் சொற்களின் கலப்புப் பலத்தால் கொச்சைக் கொடுந்தமிழ்க் குழுக்கள் ஒவ்வொன்றாகத்


தமிழ் வளர்த்த அகத்தியர் சிற்பம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழிலிருந்து வேறுபட்டுப் பிரிந்துசென்றன. கன்னட மொழியாக கி.பி.09 ஆம் நூற்றாண்டளவிலும், தெலுங்கு மொழியாக கி.பி. 11ஆம் நூற்றாண்டளவிலும், மலையாள மொழியாக கி.பி.19ஆம் நூற்றாண்டளவிலும் அம்மொழிக்குழுக்கள் உடைந்து போயின. இன்று கன்னட மொழிபேசும் தமிழர் 4 கோடி, தெலுங்கு பேசும் தமிழர் 9 கோடி, மலையாளம் பேசும் தமிழர் 2கோடி, இந்த 15கோடித் தமிழர்களும் தமிழ் பேசும் தமிழர்களாக இன்று இருந்திருந்தால், இன்றுள்ள தமிழ் பேசும் 7 கோடி தமிழருடன் சேர்ந்து 22 கோடி பேர் தமிழர்களாயிருந்து இந்தியாவில் வலிமைபெற்றவர்களாக இருந்திருப்பர். இன்றேல் தென்னிந்தியப் பெருநிலப்பரப்பில் முழு இறைமை கொண்ட ஒரு தமிழராட்சி நிலவியிருக்கும். எனவே, தமிழ் முழுமையாக அழிந்து போகவில்லையாயினும் தனக்குரிய சிங்காசனத்தைப் பறிபோக விடுமளவுக்கு மெலிந்து நிற்கிறது என்பது மறுக்க முடியாத வரலாற்றுப் படிப்பினையாகும்.

இன்று தமிழ்பேசும் மக்கள் தமிழ்நாடு, தமிழீழம், மலேசியா, மொறீசியஸ் போன்ற பல நாடுகளில் வசிக்கின்றார்கள். இக்குழுக்களிடையே தொடர்புகுன்ற நேரும்போது இவைகள், தத்தம் பிரதேச வழக்குகளுக்கு முதன்மை கொடுப்பதாலும், பெருகியெழும் புத்துலக விஞ்ஞானக் கலைச்சொற்களை நாட்டுக்கு நாடு வேறுபடத் தமிழிலாக்கிப் பயன்படுத்துவதாலும் தமிழ் பேசும் 8கோடித்தமிழர்களும் தனித்துவமான பல்வேறு மொழிக்குழுக்களாக, இனத்துண்டுகளாகச் சிதறுண்டு போகும் அவலம் எதிர்காலத்திலும் நிகழலாம். பல்லாயிரமாண்டுத் தமிழ் நிலமான சேரநாடு அண்மைய 400 ஆண்டுகளுக்கு முன்பு மேற்கு மலைத்தொடர் சோழ பாண்டிய தமிழ் நிலங்களுடனான தொடர்புக்குக் கொஞ்சக் காலம் இடையூறாகப் பயன்படுத்தப்பட்ட வேளை, அந்நிலத் தமிழ் தன்போக்கில் திரிபடைந்து மலையாள மொழியாக, தனிமொழியாகப் பிரிந்துபோக கேரளநாடான கதை தமிழினம் மறக்கக்கூடாத பட்டறிவாகும்.

இலங்கைத் தமிழ்ப் பாடநூல்களில் கொச்சையான, பிரதேச வழக்கிலமைந்த பாடங்கள் சிறீலங்கா இனவாத அரசினால் திட்டமிட்டுப் புகுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, 10ஆம் வகுப்புத் தமிழ்ப் பாடநூலில் 17ஆம் பக்கத்தில் 'ஆலம் இலைகள் உளுதாக்கும்! அப்படிதான் ஓயாது கொட்டித்துளுக்கும், அண்டுவரையும் அலுப்புத்தான்... போப்புறியா?' என்பன போன்ற 'தமிழ்' களைப் பாடமாகப் பிள்ளைகளுக்கு வழங்குகின்றது சிங்கள அரசு. எனவே, மேற்கூறிய உதாரண வரிகளை எழுத்துக்கெழுத்துச் சரியானவை என்றே நம்புகின்ற மாணவன் துணிந்து இப்படி எழுதவும் தொடங்கப்போகிறான். அது பிழையென்று கூற ஒரு பண்டிதர்கூடப் பின்னிற்கும் நிலைவரப்போகிறது. காரணம் தேங்காயெண்ணெய் பிழை, தேங்காய் நெய்தான் சரி என்று இன்று எந்தப் பண்டிதருமோ சொல்லிச் சமூகம் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. எனவே, மேற்கூறிய இரு நிலைமைகளும் இன்றயை தமிழ் வழங்கும் எல்லா நாடுகளிலும் ஏற்படுமானால் தமிழினம் பல துண்டுகளாகச் சிதறிப்போக, தமிழ் பேசுவோர் தொகை சுருங்கி, இனம் முகவரி இழக்க ஒரு நூற்றாண்டு காலங்கூடத் தேவைப்படாது.

எனவே, வேகமாக நெருங்கிவரும் தமிழ் மொழிச் சிதைவை ஈழத்தில் தடுத்து நிறுத்த உடனடியாக நாம் மேற்கொள்ளவேண்டிய பணிகள் சிலவுள. அவை:-

1. சிறீலங்கா அரசு திட்டமிட்டுத் தமிழ்ப் பாட நூல்களில் புகுத்தும் எழுத்து, இலக்கண, கருத்துப் பிழைகளைத் தவிர்த்து மாணவர்களுக்குச் சரியானவற்றைக் கற்பிக்க வேண்டிய பொறுப்பை ஆசிரியர்களுக்கு உணர்த்தவேண்டும்.

2. விஞ்ஞானக் கலைச்சொற்களென்று இங்கு தமிழில் அரச பாடநூல்கள் கட்டாயப் படுத்தி வழங்கும் கலைச்சொற்களோடு தமிழ் நாட்டில் வழங்கும் கலைச்சொற்களையும் நம் மாணவர்கள் அறிய வகைசெய்ய வேண்டும்.

3. நம் எழுத்தில், பேச்சில் வடமொழிச் சொற்கள் என்று நாம் கருதித் தவிர்க்கும் சொற்கள் அத்தனையுமே உண்மையில் சமஸ்கிருதச் சொற்கள் என நம்பக்கூடாது. ஆரியர்கள் தமிழிலிருந்து இரவலெடுத்த சொற்கள் பலவற்றை அவை வடமொழி மூலச் சொற்களென்றும், அவை சமஸ்கிருதத்திலிருந்து தமிழிற்கு வந்தவை என்றும் நிலைநாட்ட, சமஸ்கிருத வெறிகொண்ட தமிழ் அறிஞர்கள் சிலர் முயன்றுள்ளார்கள். ஆனால், பூசெய், மீன் போன்ற தூய தமிழ்ச்சொற்களிலிருந்துதான் சமஸ்கிருத மீனம், பூசை போன்ற சொற்கள் தோன்றின என்பதிலிருந்து இதுபோலும் இன்னும் ஏராளம் சமஸ்கிருதச் சொற்கள் உண்மையில் தமிழ் வேர்ச்சொற்களிலிருந்தே பிறந்திருக்கக்கூடிய வாய்ப்புக்கள் நிறைய இருந்துள்ளமை தெரிகிறது.



**பண்டிதர்**
**ச.வே. பஞ்சாட்சரம்**

சிந்துவெளிநாகரீக காலப்பகுதியில் நிகழ்ந்த ஆரியப்படையெடுப்பையடுத்து, தமிழர் ஆரியரிடையே ஏற்பட்ட பலதுறைப்பட்ட கலப்புக்களால் தமிழ் நாகரிக, மொழிக்கூறுகள் ஆரியரிடையே செறிந்ததனூடு தமிழ்ச்சொற்கள் பல அவர்களால் உள்வாங்கப்பட்டிருக்கும். பின்பு, அப்போது அதிகார நிலையிலிருந்த அவர்களால் அவை தமக்கே உரியனவாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கலாம். சமஸ்கிருதத்தில் 3000 வேர்ச்சொற்கள் வரை ஒரு சமஸ்கிருதமொழி அறிஞரால் தொகுக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடக்கின்றது. ஆனால், தமிழின் வேர்ச்சொற்களான உரிச்சொற்கள் இதுவரை தமிழறிஞர்களால் ஆராய்ந்து தொகுக்கப்படாமலிருப்பது பெருங்குறையாகும்.

## பரத கண்டத்தில் தமிழ் வழங்கிய 18 நிலங்கள்

இன்றுவரை தமிழிலாக்கப்பட்டுள்ள கலைச்சொற்களைக்கூட, அச்சொற்களின் உறுப்புகளைப் பிரித்தறியுமளவிற்கேனும் தமிழிலக்கண அறிவுபெறாத ஆசிரியர்கள், மாணவர்கள் வழுவான முறையில் பயன்படுத்துவதும் எங்கள் மொழிச் சிதைவை ஊக்கவே செய்யும். எனவே இந்தக் குறைபாட்டைத் தவிர்க்க ஒவ்வொரு மாணவனும் குறைந்தபட்சம் ஆறுமுக நாவலரவர்களால் எழுதப்பட்டுள்ள இலக்கண வினாவிடை என்ற சிறு நூலையாவது கட்டாயமாகக் கற்க வழிசெய்யப்பட வேண்டும்.

தமிழீழத்தில் சமூக அமைதிகாக்க ஒரு காவற்றுறை, ஒடுக்குமுறைச் சிங்கள அரசு விதித்துள்ள தடையை வெல்ல ஒரு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், சட்டம் ஒழுங்குகளைப் பேண ஒரு நீதித்துறை, இன அழிப்பு இராணுவத்தின் கொடுமைகளால் ஏதிலிகளான தமிழர்களுக்கு வாழ்வளிக்க ஒரு புனர்வாழ்வுக் கழகம், தமிழீழத் தகவல்கள் தர ஒரு வானொலியூடகம், பல பத்திரிகை ஊடகங்கள், கலை பண்பாட்டுக் கழகம், கல்வி வளர்ச்சிக்காக ஒரு தமிழீழக் கல்விக் கழகம், தமிழ் மண் காக்க, மீட்க தரை, கடல் படையணிகள் என்றிருப்பதுபோல எதிரியின் தமிழின அழிப்புத் திட்டத்தின் ஓர் அங்கமான தமிழ்மொழி அழிப்புத்திட்டத்தை முறியடிக்க இங்கு தமிழ்க்காப்புக் கழகம் ஒன்றும் உருவாக்கப்படவேண்டும். தகுந்த தமிழ்ப் பற்றுள்ள அறிஞர்களைக் கொண்ட ஓர் அமைப்பை உருவாக்கி மேற்கூறிய பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டியது காலத்தின் அலட்சியம் பண்ணமுடியாத தேவையாகும். அதிலும் இணையம் என்ற நவீன சர்வதேச ஊடகத்தில் தமிழ்மொழியும் சிறப்பிடம் பெறும் இக்காலத்தில், வழுவற்ற தமிழ்மொழி பயன்படுத்தப்படவேண்டும் என்ற எம் தேசியத் தலைவரின் நல்லெண்ணம் நிறைவேற இவ்வமைப்பு உருவாக்கப்படுவது மிக இன்றிய மையாததாகும்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்றைய விடியலில் வானம் சற்றுத் தெளிவாய் இருப்பதுபோலத் தோன்றியது. பூமியைக் குளிரவைத்து திருப்திப் பட்டதோ என்னவோ கொட்டும் மழை நின்று மெல்லிய தூறல்கள் மட்டும் ஆங்காங்கே நனைந்துபோன பூமி குளிர் காயவென சூரியன் முகிற்போர்வையை விலக்கத் தொடங்கியிருந்தது. நான் மெதுவாக எனது வீட்டிலிருந்து எட்டிப்பார்க்கின்றேன்.

வானமும் பூமியும் புதிதாகப் பிறந்தது போல் இருந்தது. நான் வாழும் இந்த வனாந்தரம் அழுக்குகள் நீங்கக் குளித்திருந்தது. 'ஓ என்னை நான் உங்களுக்கு அறிமுகப் படுத்தவில்லையே. நான்தான் நாதன்' பாம்புகள் இனத்தைச் சேர்ந்தவன். கடந்த நான்கு நாட்களாகப் பெய்த அடைமழை என்னை வீட்டோடு கட்டிப்போட்டிருந்தது. இப்போது பசி என் வயிற்றைக் கிள்ளுகின்றது. மழை மறுபடி தொடங்குமோ, என்னவோ நான் அதற்கிடையில் என் வயிற்றை நிரப்பியாக வேண்டும். என் புற்றிலிருந்து வெளியே வருகின்றேன். அப்பப்பா, இந்தத் தரை எப்படி ஜில்லென்றிருக்கிறது! குளிர்ந்த காற்று என் முகத்தில் உரச, என்னைப் புது உற்சாகம் தொற்றிக்கொள்ளுகின்றது. விரைவாக ஊர்ந்து என் இரையைத் தேடிப்போய்க் கொண்டிருக்கிறேன்.

இளங்காலை சூரியன் மெதுவாக என் இமைகளைத் தட்டிய போதுதான் விடிந்தது எனக்குப் புரிந்தது. அடடே இன்று வானம் சற்று வெளிறி இருக்கிறதே. நான் மெதுவாக எழுந்து சோம்பல் முறித்துக்கொள்கின்றேன்.

ஒருதடவை என் உடம்பை உலுப்பி உதறும் போது உரோமங்கள் சில்லிட்டு மீண்டும் அடங்குகின்றது. ஒட்டிப்போன எனது வயிற்றைப் பார்க்கிறேன். சே.... சரியாகச் சாப்பிட்டு நான்கு நாட்களாகிறது. எப்படியும் வயிற்றை நிரப்பியாகவேண்டும். நான் வழக்கமாகச் சாப்பிடும் சாப்பாட்டுக் கடைப்பக்கம் போகிறேன். ம்... கூம்... யாரையும் அங்கு காணவில்லை. மெதுவாகக் குரலை உயர்த்தி 'வள்...வள்....' என சத்தமிடுகிறேன். இனி யாராவது சாப்பிட வந்து அவர்கள் போடும் எச்சில் இலை விழும்வரை என் வயிற்றுக்குப் பொறுமையில்லை. ஊர்மனைக்குச் செல்வோம் எனத் தீர்மானித்தபடி செல்கிறேன். என்னைப் பற்றிய விபரத்திலிருந்து என்னைப் புரிந்து கொள்வீர்கள்தானே.

ம்.. ஆம்.. ஆ எனது கடைசிக் குழந்தையின் வீரிட்டு அழுத குரல்கேட்டு விழித்து எழுகிறேன். என்னருகில் வாடிய முகத்துடன் என் மனைவி. அவள் மடியில் எனது கடைக்குட்டி. அவனது அழுகையை நிறுத்த முயன்று கொண்டிருந்தாள் அவள். பாவம் அவளுடைய சமாதானம் ஒன்றும் எடுபடவில்லை. பசியால் அழும் குழந்தைக்கு என்ன சமாதானம் சொன்னால் கேட்கும்? அவள் இயலாமையுடன் என்னைப் பார்க்க கசிந்த என் கண்களை வேறு ஓர் பக்கம் திருப்பிக்கொள்கிறேன். எனது ஆறு வயது மகனும், நான்கு வயது மகளும் குளிருக்கு அடக்கமாக, பழைய சேலையைப் போர்த்தி அதே பாயில் சுருண்டிருந்தார்கள். தூங்கும் அவர்களது முகத்திலும் அப்பட்டமாகப் பசிக்களை. சொந்த மண்ணைவிட்டு நீங்கிய கணத்திலிருந்து பசிக்கு நாங்கள் பழக்கப்பட்டுவிட்டோம். ஆனால், இந்தப் பிஞ்சுகள்.... சோர்வுடன் எழுந்து நிற்கிறேன். எனது உடம்பிலும் தளர்ச்சி, முற்றத்திலிருந்த பானையிலிருந்து நீரைமொண்டு எனது முகத்தை அலம்பிக் கொள்கிறேன். உள்ளே வந்து மேற்சட்டை போட்டுக்கொண்டு எனது விறகு கட்டும் சைக்கிளை எடுக்கிறேன். 'கொஞ்சம் இடைவெளிவிட்டிருக்கு இதற்கிடையில் போய் ஏதேனும் விறகு கட்டி வித்திட்டு வாறன் என்ன' என்று கூறி மனைவியிடம் விடைபெறுகிறேன். அவள் என் கண்களை ஆழமாகப் பார்த்தவாறே 'கவனம் நீங்களும் இரண்டு நாளாய் வடிவாய் சாப்பிடேல' என்றாள். அவள் குரல் கம்மியது, விழியில் நீர் திரையிட்டது. 'அட நாங்கள் அனுபவிக்காததே, நீ கவலைப்படாதே' அவளைச் சமாதானப் படுத்திவிட்டு சைக்கிளில் ஏறுகிறேன்.



நானும் ஊர்ந்து ஊர்ந்து இரைக்காக அலைந்து களைத்துவிட்டேன். ம்.... ஒரு சிறு புழுக்கூட என் கண்களில் அகப்படவில்லை. பசியால் என் கண்கள் பஞ்சடைகின்றது. இனி ஏதாவது இரை என்னைத்தேடி வரும்வரை இந்த மரத்தில் இருந்தபடியே ஒரு குட்டித் தூக்கம் போடுவோம் என்று நினைத்தபடியே பாதையோரமாக உள்ள இந்த மரத்தில் படுத்திருக்கிறேன். தூக்கமும்வரவில்லை. என் பாம்புச் செவியை நீட்டியபடியே ஒரு இரையின் வருகைக்காகக் காத்திருக்கிறேன்.

ஊர்மனையாவும் குளிரிலிருந்து இன்னும் விடுபடவில்லை. இங்கொன்றும், அங்கொன்றுமாக இப்போதுதான் மனிதத் தலைகள் தெரிகின்றது. எந்த வீட்டிலிருந்தாவது புகைவராதா என்று ஏக்கத்துடன் அலைகிறேன். கடவுளே என் வயிறு கொதித்துக்கொண்டிருக்கிறது. இருப்பினும், என் முயற்சியைக் கைவிடாது தொடர்ந்தும் தெருக்களில் அலைந்து கொண்டிருக்கிறேன், இடையிடையே குலைத்தவாறு.

என்னால் சைக்கிள் மிதிக்க முடியவில்லை, என்றுமில்லாதவாறு ஒரு பலவீனம் என்னை ஆட்கொண்டிருக்கிறது. இருப்பினும் பசியால் வாடும் என் குழந்தைகளின் முகமே என் சிந்தையில் இருந்தபடியால் எனது சோர்வைப் பொருட்படுத்தாது விரைகிறேன். பின்னாலுள்ள கத்தி, கோடரி, கயிறு என்பன இப்போது எனக்குப் பலத்த சுமையாக இருக்கிறது. கடவுளே! எப்படித்தான் விறகு கட்டப் போகிறேனோ... ஒருவாறு காட்டை அடைந்து விட்டேன். சைக்கிளைவிட்டு இறங்கி காட்டிற்குள் செல்லும் ஒற்றையடிப்பாதையில் விரைந்து கொண்டிருக்கிறேன். பாதையோரமாக சற்றுத் தள்ளி இருந்த ஒரு காய்ந்த மரம் என் கண்களில் படுகிறது. அதனருகே சென்று வெட்டத் தொடங்குகிறேன். காய்ந்த மரம்தான் இருப்பினும் தண்ணீர் ஊறி இருப்பதால் வெட்டக் கஷ்டப்படுகிறேன். இப்போதைக்கு இது போதும் வெட்டிய விறகுக் கட்டைகளை சைக்கிளில் ஏற்றிக் கட்டுகிறேன். சுமையுடன் சைக்கிளை உருட்டுவது மிகக் கஷ்டமாக இருக்கிறது. என் உடலிலிருந்து இந்தக் குளிரிலும் வியர்வை ஆறாகப்பெருக்கெடுக்கிறது. ஆழமான மூச்சுகள் எடுத்தவாறே வீதிக்கு வருகிறேன். மனதில் ஒரு திருப்தி மெதுவாக வீதியில் சைக்கிளை மிதிக்கிறேன்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரை

சிறுகதை

உ...ர்..... ஊ... ல்.... அட கடவுளே! வானத்தில் ஒரு பெரிய இயந்திரக் கழுகு சுற்றத் தொடங்கியிருந்தது. எனக்கு ஒருபுறம் கோபமும், ஒருபுறம் வேதனையாகவும் இருந்தது. மழைவிட்ட சிறிது நேரத்தில்கூட வந்துவிட்டானே பாவி என்று மனதிற்குள் சபித்தவாறே சைக்கிளை பாதையோரமாக இருந்த மரத்தில் சாத்திவிட்டு மறைவிடம் தேடி விரைகிறேன்.

இரைக்காக நான் காத்திருந்தபோது, விண்ணில் ஒரு சத்தம். அட மனிதர்களைக் கொல்லும் இயந்திரக் கழுகு வந்துவிட்டது போல் இருக்கிறது. ஒரு விறகு வெட்டி பயத்துடனே தனது சைக்கிளை நான் இருந்த மரத்தில் சாத்திவிட்டு மறைவிடம் நோக்கி விரைய, நான் அலுப்புடன் கண்களை நாலா புறமும் சுழற்றியபோது அது எனது கண்களில் படுகிறது. அட, எனக்குச் சற்று அதிஷ்டம் இருக்கிறது போலிருக்கிறதோ! விறுவிறுவென மரத்திலிருந்து இறங்கி அங்கு விரைகிறேன்; ஆம் அந்த விறகுவெட்டியின் சைக்கிளில் இருந்த விறகின் பட்டையில் சில தவளைகள் ஒட்டிக்கொண்டிருந்தன. அவை பொய்க் கோலம் பூண்டிருந்தாலும், எனது இரையை நான் அறியமாட்டேனா என்ன? ஆவலுடன் விறகுக்கட்டில் புகுந்து ஆவலுடன் அவற்றை வேட்டையாடத் தொடங்குகிறேன்.

எனக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது. உடல் தளர்ந்து கண்கள் இருட்டத் தொடங்கியிருந்தது. வானத்தில் இப்போது திட்டுத்திட்டாக நீலம். பறவைகள் ஆரவாரித்தபடியே பறந்து கொண்டிருந்தது. பூக்கள் எல்லாம் குளித்து முடிந்து காற்றில் தலை துவட்டிக்கொண்டிருந்தது. ஆனால் நான் இதையெல்லாம் ரசிக்கும் மனநிலையில் இல்லை. வயிற்றுக்கு விருந்து இல்லாதபோது புலனுக்கு விருந்து இருந்தென்ன? விட்டென்ன? தெருவில் மூலையில் கிடக்கும் குப்பை மேடுகளை ஆராய்ந்தபடியே ஓடிக்கொண்டிருக்கிறேன்.

அப்பாடா எனக்கு இப்போதுதான் மூச்சு வந்தது. மிகத்தூரத்தில் எங்கோ குண்டுகளை உமிழ்ந்துவிட்டு அந்த விண் அரக்கன் போய்விட்டான். நான் எனது மறைவிடத்தைவிட்டு வெளியே வருகிறேன். மீண்டும் எனது குழந்தைகளின் முகம் என் நினைவில் வரவே, புதுவேகத்துடன் சைக்கிளை எடுத்து மிதிக்கத் தொடங்குகின்றேன். சற்று நேரத்திற்கெல்லாம் விறகுச் சிராய் போலும் என் முதுகில் குத்தியது. சீ.... என்ன இது என்று முதுகை நெளித்து என்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மீண்டும் சைக்கிளை மிதிக்கிறேன். சிறிது தூரம் பயணித்த பின்னர் மீண்டும் அதே சிராய் குத்தியது. எனக்கு எரிச்சலாக வந்தது. நான் சைக்கிளைச் சாத்திவிட்டு, மறைவிடத்தில் ஒதுங்கியபோது கட்டுத் தளர்ந்துவிட்டது போலும் திரும்பவும் நிறுத்தி இறுக்கிக் கட்டலாம் என்று யோசித்தேன்.

இன்னும் கொஞ்சத்தூரம்தானே அதற்கிடையில் என்ன நடந்துவிடப்போகிறது என்று தொடர்ந்தும் போய்க்கொண்டு இருக்கிறேன். சற்றைக்கெல்லாம் அதே சிராய் மீண்டும் சற்று வேகத்துடன் குத்தியது. சரி இனியும் தாங்காது இறங்கி யோசித்தபோது, கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஒரு பெண் என்னைக் கைகாட்டி அழைப்பது தெரிந்தது. ஒருவாறு சமாளித்தபடியே சைக்கிளை அவளருகே கொண்டு செல்கிறேன். என்ன விலை என்று விறகைப் பார்த்துக் கேட்கிறாள். எழுபத்தைந்து ரூபாய் என்றேன். ஐம்பது ரூபாய் தான் தருவேன் சரியா எனக் கேட்டாள். நான் இப்போது அவளுடன் பேரம் பேசும் நிலையில் இல்லை. அத்துடன், இந்த மழைநேரம் அதிக தூரம் போகவும் முடியாது; சரி என்று சொல்லிவிட்டு விறகைப் பறித்துவிட்டு பணத்தை வாங்கிக் கொண்டேன்.

அப்பாடா.... இப்போதுதான் என் வயிறு குளிர்ந்தது. நான் தவளை வேட்டை நடத்தி முடிக்கும் கணத்தில் அந்த விறகுவெட்டி மீண்டும் சைக்களை எடுத்து ஓடத் தொடங்கினான். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சிறிது நேரம் விறகுக்கட்டின்மேலும் கீழுமாக ஓடித்திரிந்தேன். எனக்கு உடனடியாக கீழே இறங்கவேண்டும் போல் இருந்தது. வயிறு நிரம்பியிருந்ததால் மேலிருந்து கீழே குதிக்கவும் விரும்பவில்லை. அந்த விறகுவெட்டி சைக்கிளை நிறுத்துவான் எனக் காத்திருந்தேன். ம்... கூம் அவன் நிறுத்தவில்லை. என் பொறுமை எல்லை கடந்தது. மெதுவாக என் நாக்கால் அவனைத் தீண்டினேன். ஆனால், அவனோ என்னை சட்டை செய்யாது தொடர்ந்தும் ஓடிக்கொண்டு இருந்தான். இது என் கோபத்தை அதிகரித்தது. எனவே மீண்டும் சற்று தீண்டினேன். அவன் இந்த முறை மெதுவாக திரும்பிப் பார்த்துவிட்டு ஒருகையால் சரிந்திருந்த விறகுக்கட்டை சரிசெய்துவிட்டு, மீண்டும் ஏதோ வெறிபிடித்தவன் போல் ஓடத்தொடங்கினான். என் கோபம் உச்சத்திற்கு ஏறியது. எனது பலமெல்லாம் திரட்டி வேகமாக தீண்டினேன். இந்த முறை அவன் இறங்க உத்தேசித்திருக்க வேண்டும். சைக்கிளின் வேகத்தை குறைத்தான். ஆனால், அதேநேரம் ஒரு பெண் அவனை மறித்ததால் அவ்விடம் சென்றபின்னரேயே நிறுத்தினான். நான் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுமையாக இருந்தேன். அப்பாடா சைக்கிள் ஒருமாதிரி நின்றது. அவன் அந்தப் பெண்ணுடன் பேரம் பேசிக்கொண்டிருந்தபோதே நான் வேகமாக நழுவி விடுகிறேன்.

நாய் அலைச்சல் என்று இதைத்தான் சொல்வார்களோ... இதுபோல எந்த ஒரு நாளும் நான் அலைந்ததில்லை. என் கால்கள் நிற்கச் சொல்லிக் கெஞ்சியது. என் வயிறு ஓடச்சொல்லி மன்றாடியது. நான் இரண்டிற்கும் இடையில் ஊசலாடிக்கொண்டு இருந்தேன். நான் தளர்ந்து போய் அலைந்து கொண்டு இருந்தேன். அட அப்போதுதான் அது என் கண்களில் பட்டது. பாதையோரமாக விழுந்து கிடந்தது. ஆம் அது ஒரு பாண்பொதி ஆவலுடன் அதைத் தின்று என் வயிற்றை நிரப்பிக்கொள்கிறேன். வயிறு நிரம்பிய களிப்பில் நான் வந்த வழியே திரும்பி ஓடுகிறேன்.

அந்தப் பெண்ணிடம் பணத்தை வாங்கிக் கொண்டு மிகவேகமாக விரைகிறேன். எனக்கு இப்போது நன்றாகத் தலை சுற்றியது. புதுத் தளர்ச்சி என் உடலில் எங்கும் வேகமாகப் பரவியது. ஒரு கடையில் நிறுத்தி பாண் வாங்கிக்கொள்கிறேன். என் கண்மணிகளின் பசியால் வாடிய முகம் வரவர என் நினைவை கூடுதலாக வியாபிக்கத் தொடங்கியது. ஐயோ... இது... என்ன... என்னால் எதையும் பார்க்கமுடியவில்லையே. கண்கள் இருண்டுவிட்டது. உடல் மிகவும் தளர்ந்து போகிறது. கடவுளே என் சைக்கிள் என் கையைவிட்டு நழுவி எங்கோ விழுகிறது. நான் தூக்கி எறியப்படுவது மட்டும் எனக்கு இப்போது புரிந்தது. வெளி ஒலிகள் ஏதும் எனக்கு இப்போது கேட்கவில்லை. நான் எங்கோ இருட்டான பாழும் கிணற்றில் மிக ஆழமாகப் போய்க் கொண்டிருக்கிறேன். ஐயோ கடவுளே...! என் குழந்தைகளின் பசியை எப்படித் தீர்ப்பேன் என் குழந்தைகளினதும், மனைவியினதும் பசியால் வாடிய முகங்கள் எனது நினைவில் இறுதியாக மங்கலாகத் தெரிந்தது. என் கடைக்குட்டி வீரிட்டு அழும் ஒலி என் காதில் கடைசியாக ஒலித்துக்கொண்டிருந்தது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காலம் உருவாக்கிய காலத்தை வென்ற பெண்

# ஜோன் ஒவ் ஆ

**கு. தீபா**

பிரான்சின் டொம்ரெமி எனும் கிராமத்தைச் சேர்ந்த நில உரிமையாளரின் மகளாக ஆடு மேய்த்துக்கொண்டிருந்த கல்வியறிவற்ற இளம்பெண் ஜோன் ஒவ் ஆர்க், ஒரு காலத்தில் பிரான்சின் மாபெரும் வீராங்கனையாவாள் என யாருமே எதிர்பார்த்திருக்க முடியாது. காலமும் தேவையும் அவளைப் பெரும் மன உரமும் போர்த்திறனும் மிக்க பெண்ணாக்கியது.

பிரித்தானிய மன்னன் 6ஆம் ஹென்றிக்கும், பிரான்சின் 7ஆம் சாள்சிற்கும் இடையில் பிரான்சின் முடி அல்லாடிக் கொண்டிருந்தது. நாட்டின் பெரும்பாலான பகுதி பிரித்தானியர்களதும் அவர்களது உதவிக்குவந்த பேர்கண்டியர்களினதும் (Burgundians) ஆக்கிரமிப்பிற்குட்பட்டிருந்தது. பன்னிரெண்டு வருடங்களாக 7ஆம் சாள்ஸ் போரை மட்டுமே கண்ட நிலையில், வெறுப்புற்று ஸ்பெயினிற்குச் செல்ல அல்லது பிரித்தானியரிடம் கீழ்ப்படிய முடிவெடுத்தான். ஆனால், ஆக்கிரமிக்கப்பட்டிருந்த 'ஓர்லியன்ஸ்' நகரின் விடுவிப்பே எதிரிக்கு எதிரான தங்களின் போராட்டத்திற்கான ஒரு அடையாளமாக மக்கள் கருதத்தொடங்கிய வேளையில், 'நூற்றாண்டுப் போரின்' இரண்டாம் பகுதியில் ஜோன் ஒவ் ஆர்க் தோன்றினாள். பிரான்சின் துக்ககரமான நிலை அவளை உலுக்கியது. தனது ஆழ்மன உணர்வின் எழுச்சிகளால் உந்தப்பட்ட ஜோன் பிரான்சின் விடுவிப்பை நோக்கிய தனது பயணத்தைத் தொடங்கினாள். (1428) அரசனைக் காண விளைந்தாள்.

பதினாறு வயது இளம் பெண்ணொருத்தி அரசனைப் பேட்டி காண விரும்புவதை வேடிக்கையாகக் கருதிய படையதிகாரியின் மறுப்பினால் அவள் ஊர் திரும்பினாலும், அவளது மனம் 'செல் செல்' என அவளை உந்திக்கொண்டேயிருந்தது. மீண்டும் 1429இல் அவள் அரசனைக் காணப் புறப்பட்டபோது, அவளின் மனஉரமும், இலட்சியத் தெளிவும், மனத்தூய்மையும் மக்களிடையே பெருமதிப்பைப் பெற்றுக் கொடுத்திருந்தது. அவளின் வெளித்தோற்றத்திலேயே மிளிர்ந்த இக் குண இயல்புகளால் கவரப்பட்ட படையதிகாரி தானாகவே முன்வந்து அரசனைக் காணும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தான்.

சினொன் நகரிலிருந்த அரசனை எதிரியின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த பிரதேசத்தைத் தாண்டிச் சென்றே சந்திக்க வேண்டியிருந்தமையால் ஆணுடை தரித்தவளாய் ஆறு ஆயுதந்தரித்த வீரர்கள் சூழ அவள் புறப்பட்டாள். பெண்கள் ஆணுடை தரிப்பது அக்கால பிரான்சிய மரபை மீறியதாகவே இருந்தது. அது அவளைப் புரட்சிகரப் பெண்ணாய்த் தனித்துக் காட்டியது.

சாள்சைச் சந்தித்து தான் அவனுக்கு உதவ விரும்புவதைக் கூறினாள். சிறுதுரும்பையும் பற்றிக்கொண்டு கரையேறும் மன நிலையில் இருந்த 7ஆம் சாள்ஸ் அவளது உதவியை ஏற்க விரும்பினும் மத சபையினரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த அவனால் தனித்து முடிவெடுக்க இயலவில்லை. மத சபையினரிடம் ஒப்படைக்கப்பட்ட ஜோன் மூன்று கிழமைகள் விசாரிக்கப்பட்டாள். அவளின் திடமும் தெளிவும் மதசபையினரைச் சம்மதிக்க வைத்தது. சாள்ஸ் அவளின் உதவியை பெற்றுக்கொள்ளலாம் எனப் பரிந்துரைக்கப்பட்டது.

1429இல் தனது இரு சகோதரர்களையும் தன்னுடன் இணைத்துக்கொண்டு பலநூறு பேர் கொண்ட துருப்பை வழிநடத்திய வண்ணம் அவள் ஓர்லியன்ஸ் நகரம் நோக்கிக் குதிரையில் புறப்பட்ட காட்சியானது, சில மனங்களில் நம்பிக்கையையும் சில மனங்களில் அதிருப்தியையும் ஏற்படுத்தியது. ஆனால், 'சிறு பெண்ணின் தலைமையில் ஒரு படையா? அது எம்மை வெற்றி கொள்வதா?' என இறுமாந்திருந்த ஆங்கிலேயர் எதிர்பாராத வண்ணம், ஏப்ரல் 29இல் அவள் ஓர்லியன்ஸ் நகரில் நுழைந்தபோது எழுச்சி கொண்ட படைவீரர் மே 04இல் உக்கிர தாக்குதலின் மூலம் கோட்டையைக் கைப்பற்றினர். ஓர்லியன்ஸ் நகர் விடுவிக்கப்பட்டமையானது, சந்தேகத்திற்கிடமற்ற வகையில் ஜோனின் பணியை நிரூபித்ததுடன் நூற்றாண்டுப் போரின் ஒரு திருப்புமுனையாகவும் அமைந்தது.

மே 06இல் ஜோன் இன்னொரு கோட்டையை நோக்கிப் புறப்பட்டபோது, பெண்ணிடம் தோற்க விரும்பாத ஆங்கிலேயர்கள் அவசர அவசரமாகத் தந்திரோபாயப் பின்வாங்கலை மேற்கொண்டனர். மே 07இல் இன்னுமொரு கோட்டை அவள் வசப்பட்டது. ஜோன் அப்போரில் காயப்பட்டாலும் தான் போர்க்களத்தில் நிற்க வேண்டும் எனும் அவா அவளை விரைவில் குணமடைய வைத்தது. மீண்டும் போர்க்களம் வந்தாள்.

யூன் 18இல் இருபடைகளும் நேருக்கு நேர் பொருதி, போரை வென்றெடுத்தமை அவளின் வீரத்திற்குச் சான்றானது. முடிசூடத்தயக்கம் காட்டிய சாள்சிற்கு, அவளின் போர்த்திறனும் இடைவிடாத அவளது ஊக்கப்படுத்தலும் மனதில் நம்பிக்கையையும், உரத்தையும் ஊட்டியது. முடிசூடவென சாள்ஸ் Rheims நகர் புறப்பட்டபோது, எதிர்ப்புக் காட்டிய ஆங்கிலேயருக்காதரவான Rheims நகர்வாசிகளின் மேல் தாக்குதல் நடத்தி அவர்களின் எதிர்ப்பை அடக்கினாள். பாரம்பரிய முறைப்படி Rheims நகரில் சாள்சின் முடிசூட்டல் இடம்பெறக் காரணமானாள்.

தனது திட்டப்படி தனது அடுத்த இலக்கான பாரீஸ் நகர விடுவிப்பை நோக்கி அவள் செயற்படத் தொடங்கியபோது, சாள்ஸ் அந்தத் திட்டத்தைக் கைவிட்டமையினால் ஏமாற்றத்திற்கும், பொறுமையின்மைக்கும் உள்ளானாள். ஜோனும் அதிகாரிகளும் திரும்பி வரும்படி பணிக்கப்படும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Jeanne d'Arc

வரையிலும் தான் காயமடைந்தாலும் ஊன முறாத அவள் மனஉறுதி, போர் வீரர்களை ஊக்கமூட்டி எழுச்சி கொள்ளவைத்துக் கொண்டேயிருந்தது.

தனது தொடர்ந்த வெற்றிப் பயணங் களின் பின் திரும்பிவரும்போது கம்பீன் நகர் மீண்டும் பேர்கண்டியர்களால் கைப்பற்றப்பட்டதையறிந்து விசனமுற்றாள். இருட்டின்



போர்வையைத் துணைகொண்டு அந்த கருள் ஜோன் நுழைந்தபோது, பக்கப்புற மாகச் சூழ்ந்து நின்ற ஆங்கிலேயரின் முற்று கைக்குள் அகப்பட்டாள். தனது படைகள் ஆற்றைக் கடந்து செல்லும்வரை பின்புலத் தைக் காத்துநின்ற ஜோன் குதிரையிலிருந்து விழுந்து காயமுற்று மீண்டும் குதிரையேற முடியாதவள் ஆனாள். சந்தர்ப்பம் பார்த்திருந்த பேர்கண்டியர்களால் அவளும் இரு சகோதரர்களும் கைப்பற்றப்பட்டு வேர்மண்டிஸ் கோட்டைக்கு அனுப் பப்பட்டனர். அங்கிருந்து அவள் பல தடவை தப்ப முனைந்ததையிட்டு வெகுதொலை விலுள்ள கோட்டையில் மிகுந்த பாதுகாப் புடன் சிறைவைக்கவென அனுப்பிவைக்கப் பட்டபோது, எதிரியின் கையில் சிறைப்படு வதை விரும்பாத அவ் வீரப்பெண் கோபுர உச்சியிலிருந்து குதித்து மயக்கமுற்றாள். சிகிச்சையின் பின் மீண்டும் சிறையிலடைக் கப்பட்டாள்.

ஆங்கிலேயரின் ஆதிக்கத் திற்குட்பட்டிருந்த பாரிஸ் பல் கலைக்கழகம் அவளை விசார ணைக்காகத் தங்களிடம் கைய ளிக்கும்படி வேண்டியது. பியர் கோச்சன் எனும் மதகுரு Burg undy அரசனிடம் நேரில் சென்று அவளை விலை பேசினார். பேர்கண்டியர்கள் (Burgun dians) பத்தாயிரம் பிராங்கை அவரிடமிருந்து பெற்றுக்கொண்டு அவளைக் கையளித்தார்கள். மீண்டும் அவள் சிறையிலடைக் கப்பட்டாள். மீண்டும் மீண்டும் அவள் தப்ப முனைந்ததையிட்டு காவல் அதிகரிக்கப்பட்டது. எந்நேரமும் அவள் அறையில் இரு ஆங்கிலப் படை வீரர்கள் காவலுக்கு நிறுத்தப்பட்டனர். வீரம் செறிந்த பெண்ணை அடக்க அவள் கால்களும் கைக ளும் இரும்புச் சங்கிலிகளால் கட்டப்பட்டன.

ஆங்கிலம் பேச மறுத்து பிரெஞ்சு பேசியது, ஆணுடை தரித்தது உட்பட 70 குற்றங் களுக்காக 12 தடவைகளுக்கு மேல் விசாரித்து, துன்புறுத்தப் பட்டபோதும், அக்குற்றச்சாட்டுக் களை ஒப்புக்கொள்ள மறுத் தாள். சிறையில் பெண்ணுடை தரிக்குமாறு வற்புறுத்தப்பட்ட போதும் தனது விருப்பத்திற்கு மாறாகப் பெண்ணுடை தரிக்க மறுத்து ஆணுடையிலேயே இருந்தாள். அவளுடைய கருத் துக்கள் எதனையும் மத சபை யினர் ஏற்றுக்கொள்ளவில்லை. மத நம்பிக்கைகளுக்கு எதிரா னவள் எனவும் சூனியக்காரி எனவும் குற்றஞ் சாட்டப்பட்டு மே 30, 1431இல் உயிருடன் எரிக்கப்பட்டாள். அவள் தொடக்கிவைத்த பிரான்சின் மீட்சியை அவளின் இறப்பு எவ் வகையிலும் நிறுத்தவில்லை. மாறாக அவளின் இறப்பைத் தொடர்ந்தெழுந்த மக்களின் எழுச்சியும், போராட்டமும் 7ஆம் சாள்சின் கையில் பாரீஸை வழங்கியது. அவள் உயிருடன் எரிக்கப்பட்டபோது அவளுக்காக எந்தக் கருத்தையும் கூறவோ, அவளைக் காப்பாற்றவோ முன்வராத 7ஆம் சாள்ஸ் முழு பிரான்சுமே தன் ஆளுகைக் குட்பட்டதும் அவளது பணிகள், அவள்மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர் பாக விசாரணைகளை மேற்கொண்டு அவ ளைத் தேசிய வீராங்கனையாக அறிவித்தான்.

மாற்றங்களை இலகுவில் ஏற்றுக்கொள் ளாமை அன்றைய பிரான்சிய சமூகத்திலும் புரையோடிப் போய்விட்டிருக்க வேண்டும். ஒரு இளம்பெண் அவளுக்கேயுரிய இயல் பான மன உரத்தாலும் தாய் நாட்டின் மீதான அளப்பரிய பற்றாலும் உந்தப்பட்டு மண் மீட்கப் புறப்பட்டது, ஏற்றுக்கொள் ளப்பட முடியாததாக இருந்தது. தன் உள்ளுணர்வின் வழிகாட்டலில் இயங்கிய பெண்ணிற்கு சமயச்சாயம் பூசப்பட்டது. பலநூறு ஆண்களை வழிகாட்டிய வீரம் மறைக்கப்படவென அவள் புனிதையாக் கப்பட்டாள்.

ஒரு பெண்ணின் வீரத்தினால் நாடு விடுதலையானதாக வரலாறு கூறுவதை விரும்பாத உலகம், இறையருளால் வழி நடத்தப்பட்ட புனிதை ஒருத்தியால் விடு தலை பெற்றதாக ஏற்றுக்கொள்ளவே கால் நூற்றாண்டுகள் சென்றன.

ஜோனின் இப்பணி தொடர்பான பல வகைப்பட்ட தகவல்கள் வரலாற்றாசிரி யர்களுக்கும் உளவியலாளர்களுக்கும் பல முரண்பாடுகளை ஏற்படுத்துவதாகக் கூறப்படினும் அவளின் அளப்பரிய வீர மும், தீர்க்கதரிசனத்துடன் கூடிய கூர்ந்த நுண்ணறிவும் சமயச்சாயம் பூசப்பட்ட தென்பதே உண்மையாக இருக்கலாம்.

இன்றும் பிரான்ஸ் நாட்டு மக்களால் நேசிக்கப்பட்டு, தாய்நாட்டின் மீதான பற் றிற்கான பெரும் குறியீடாக நிற்கும் ஜோனின் வீரம் செறிந்த பெண்மை மனங்களையும் காலத்தையும் வென்றுள்ளது.

எங்கள் மத்தியிலும் பல ஜோன் ஒவ் ஆர்க்குகள், தென்மராட்சியை எதிர்பாராத விதமாக இராணுவம் சுற்றிவளைத்தபோது வெடிபொருட்கள், ரவைகள் எல்லாம் தீர்ந்த நிலையில் நம்பிக்கையிழந்திருந்த ஒரு போராளிகள் குழுவை நம்பிக்கையூட்டி, அம்முற்றுகையிலிருந்து தப்பிக்கவைத்து அழைத்து வந்த ஒருபெண் போராளியின் உளஉரமும் தன்னம்பிக்கையும். எம்மத் தியிலும் பல ஜோன் ஒவ் ஆர்க்குகள் உள்ளனர் என்பதற்குச்சான்றாய்...



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருமலை புனித மரியாள் கல்லூரியில் இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் 27வது வருடாந்த மாநாடு 30.03.2001 தொடக்கம் இரு நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்றது. இந்நிகழ்வில் 1200 ஆசிரியர்களும் பெருந்தொகையான மாணவர்களும் கலந்து கொண்டனர். விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை வரவேற்றுள்ள தமிழாசிரியர் சங்கம், பேச்சுக்களை உடன் நடாத்துமாறும், தமிழர்களின் பாரம்பரியத் தாயகக் கோட்பாட்டை அங்கீகரிக்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.






மன்னாரில் கடந்த 19.03.2001 அன்று சிறிலங்காப் பாதுகாப்புப்படையினரால் இரு பெண்கள் பாலியல் வல்லுறவாக்கப்பட்டதைக் கண்டித்து 30.03.2001 வெள்ளிக்கிழமை அன்று மதியம் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. இவ்ஆர்ப்பாட்ட நிகழ்வில் பல நூற்றுக்கணக்கான பள்ளி மாணவர்கள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் சூர்யா பெண்கள் அபிவிருத்திக் கழகம் என்ற அரசசார்பற்ற நிறுவனத்தின் சார்பில் நாடகம் ஒன்றும் அரங்கேற்றப்பட்டது.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## திருமலை மண்காக்க மக்கள் ஊர்வலம்

திருகோணமலை லிங்க நகர் பகுதியில் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வரும் தமிழர்கள் 25.03.2001 அன்று ஞாயிற்றுக்கிழமை தம்மை வெளியேற்ற முயல்வதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் அழுத்தங்களின் மத்தியிலும் திரண்ட மக்கள் தமது சொந்த நிலத்தை விட்டுப் புலம்பெயர முடியாது என்பதை உணர்த்தியுள்ளனர். ஞாயிறு காலை சுலோகங்கள், கோரிக்கைப் பதாகைகள் சகிதம் திரண்ட மக்கள், அரசு தம்மைத் தொடர்ந்து லிங்கநகரில் வசிக்க விடவேண்டும் என வலுவாகக் கோரினர். சிறீலங்கா இராணுவம் கடந்த ஐந்து வருடமாக லிங்கநகர் மக்களை வெளியேற்ற வேண்டும் என்பதில் மும்முரமாக உள்ளது. ஆனால் அரசோ இதுவிடயத்தில் பாராமுகமாக இருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.



## மறுக்கப்பட்ட வைத்திய வசதிகள்

தென்தமிழீழத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசம் சிறீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட பகுதியாக விளங்குகின்றது. இதனால் இப்பிரதேசத்தில் வாழும் தமிழர்களுக்கு மருந்து வசதிகள் எவையும் சென்றடைவது சிறீலங்கா அரசால் மறுக்கப்பட்டுள்ளது. வாழைச்சேனையிலிருந்து வெருகல் சுமார் 50 கி.மீற்றர் தொலைவிலுள்ளது. இதில் மாங்கேணி தவிர்ந்த சுமார் 35 கிலோமீற்றர் வரையான பிரதேசங்கள் தற்போது சிங்கள இராணுவத்தின் பிடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் சுமார் ஐயாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 25000ற்கும் மேற்பட்ட தமிழர்கள் வாழ்கின்றார்கள். இவர்களுக்கு என்று வைத்திய வசதிகள் எதுவுமே இல்லை. கடந்த மாதத்தில் மாத்திரம் விசர்நாய்க்கடியினால் பத்துப் பேர் வரையில் இறந்துள்ளனர். முன்னர் வாகரையில் கிராமிய வைத்தியசாலை ஒன்றிருந்தது. அதுவும் 1990ஆம் ஆண்டு அதன் மீது மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல் காரணமாக மூடப்பட்டது. சிறு வியாதியாயினும் சுமார் 50 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலைக்கே செல்லவேண்டும். அங்கு செல்வதற்கிடையில் பல தீவிர நோயாளிகள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார் ஆகியோர் இறக்க நேரிடுகின்றது. இதனிடையே விசர்நாய்க்கடி தடுப்பூசியான அன்ரி றேபிஸ் வக்சின் வாழைச்சேனை வைத்தியசாலைக்கு சிறீலங்கா சுகாதார அமைச்சினால் அனுப்பிவைக்கப்படவில்லை. இவ்வகைத் தடுப்பூசி மட்டக்களப்பு போதானா வைத்தியசாலையில் மாத்திரமே உள்ளது.

## வடமராட்சியில் மாணவியின் அவலம்

யாழ் குடாநாட்டின் வடமராட்சிப் பகுதியில் 26.03.2001 அன்று சிறீலங்கா ஆயுதப்படைகளால் கடத்திச் செல்லப்பட்ட கல்லூரி மாணவி கண்கள் கட்டப்பட்ட நிலையில் தெருவோரத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளார். பதினெட்டு வயது நிரம்பிய கந்தசாமி சசிந்தராணி என்ற மேற்படி மாணவி தனியார் கல்விநிலையமொன்றிற்குச் சென்று கொண்டிருந்த வேளையில் சிங்களப்படையால் கடத்திச் செல்லப்பட்டார். பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்ட மாணவி 28.03.2001 அன்று வீதியோரத்தில் கண்கள் கட்டப்பட்டு உடல்சோர்ந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். இம்மாணவியை சிங்களப் படையினர் மிகமோசமான முறையில் சித்திரவதை செய்துள்ளனர்.

## சுவாசிக்கும் காற்றைத் தவிர அனைத்திற்கும் தடை

சிறீலங்காவின் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட பகுதியான வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் மக்கள் அரசபடைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியான வவுனியா மற்றும் ஏனைய பகுதிகளுக்குச் சென்றுவருகையில் கொண்டுவரக்கூடிய பொருட்களின் பட்டியல் ஒன்று சிங்களப் படையால் வவுனியா கச்சேரியில் தொங்கவிடப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட வன்னிப்பிரதேசத்தை தீவின் தென்பகுதிகளோடு இணைக்கும் ஒரேயொரு தரைப் பாதையாக, தற்சமயம் இயங்கிக் கொண்டிருக்கும் போக்குவரத்துப் பாதையாக பிரமனாலங்குளம் விளங்குகின்றது. இப்பகுதியில் நிலைகொண்டு சிங்களப் படைகள், பொதுமக்கள் தமது அன்றாடத் தேவைக்கு எடுத்துச் செல்லும் பொருட்களுக்குத் தடை விதித்தோ அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அளவுகள் என கட்டுப்பாடுகளை விதித்து துன்புறுத்துகின்றன. இராணுவத்தின் கட்டுப்பாட்டிலில்லாத வன்னிப் பகுதிக்குச் செல்லும் தமிழர்கள் 40 கிலோ பொருட்களை மட்டுமே கொண்டு செல்லலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பட்டியலில் குறிப்பிட்ட தடைசெய்யப்பட்ட பொருட்களாக; முட்கம்பி தொட்டு, மின்கலம் வரையான 21 பொருட்கள் வர்த்தமானி அறிவித்தலின்படி முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளன. வர்த்தமானி அறிவித்தலின்படி தடைசெய்யப்படாவிட்டாலும் பாதுகாப்பமைச்சினதும், வவுனியாவிலுள்ள இராணுவத் தலைமையகத்தினதும் அனுமதியைப் பெறவேண்டிய பொருட்களின் பட்டியலில் 19 வகையான பொருட்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மூன்றாவது வகையாக மீட்கப்பட்ட பகுதிகளுக்கு குறைந்த அளவில் கொண்டு செல்லக்கூடிய பொருட்களாக 27 பொருட்களின் பெயர்கள் உள்ளன.



## முல்லைக் கடலில் இரு டோராக்கள் மூழ்கடிப்பு


21.03.01 அன்று காலை கடல் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்புலிகளின் படகுகள் மீது சிறீலங்கா கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டபோது கடற்புலிகள் திருப்பித்தாக்குதலை மேற்கொண்டனர். இந்த சம்பவத்தில் அதிவேக டோறா பீரங்கிக் கலங்கள் 2 மூழ்கடிக்கப்பட்டன. இவற்றுள் ஒன்று விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு ஆயுதங்கள் களையப்பட்ட பின் மூழ்கடிக்கப்பட்டது. மேலும் இரண்டு டோறா பீரங்கிக் கலங்கள் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டன. இந்தப் சண்டையில் 9ற்கும் மேற்பட்ட சிறீலங்காக் கடற்படையினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகளால் டோறா படகில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுததளபாடங்களாவன:- 23 மில்லிமீற்றர் பீரங்கி - 1, 20 மில்லிமீற்றர் பீரங்கி -1, 40 மில்லிமீற்றர் தானியங்கி கைக்குண்டுச் செலுத்திகள் -2, பெல்ஜியம் 50 கலிபர் துப்பாக்கிகள் 2, பி.கே இலகு இயந்திர துப்பாக்கிகள் - 4, ஏ.கே இலகு இயந்திரத் துப்பாக்கி -1, ஏ.கே ரக துப்பாக்கி - 1. இத்துடன் பெருமளவு வெடிபொருட்களும் ஏனைய பல இராணுவ சாதனங்களும் கைப்பற்றப்பட்டன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அணையாத தீபம்



## போராட்டத்தின் நிழலில்

**லெப் கேணல் ரவி**
**குமாரவேல் இரவீந்திரகுமார்**
**வீரச்சாவு-17-03.1994**
**வன்னிமாவட்டம்**



வன்னிமண்ணில் குமாரவேல் தம்பதியரின் புதல்வனாய் அவதரித்த லெப்.கேணல் ரவி 1986ஆம் ஆண்டு தம்மை முழுமையாக விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைத்துக் கொண்டார். அவருக்கு பெற்றோர் இட்ட பெயர் இரவீந்திரகுமார். விடுதலைப் புலிகள் அமைப்போடு இணைந்து கொண்ட ஆரம்ப காலங்களில் லெப் கேணல் ரவியவர்கள் வன்னியின் மூத்த தளபதி மாவீரர் மேஜர் பசிலனுடன் இணைந்து சிங்கள இராணுவத்திற்கெதிராக முனைப்பான தாக்குதல்களை மேற்கொண்டு, வன்னி மண்ணை சூறையாட முயன்ற பேரினவாதத்திற்கு சிம்மசொப்பனமாக விளங்கினார்.

அமைதிகாக்கவென வந்து எம்மண்ணில் அவலத்தை விதைத்த ராஜீவின் ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக உறுதியான எதிர்ப்புச்சமர் புரிந்தார். உலகின் நான்காவது பெரிய பலம் வாய்ந்த இராணுவத்தின் ஆயுதங்கள் பலவற்றையும் கைப்பற்றி எமது படைபலத்தைப் பெருக்கிச் சாதனை படைத்தார்.

மீளவும் 1990இன் நடுப்பகுதியில் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகிய வேளையில் வன்னிப்பெருநிலப்பரப்பின் மையத்தில் ஆக்கிரமிப்பாளர் குந்தியிருந்த கொக்காவில், மாங்குளம் தளங்களை தாக்கி அழித்த நடவடிக்கைகளிலும் காத்திரமான பங்கை வகித்தார். சிறீலங்கா முப்படைகளும் இணைந்து நடத்திய பலவேகய-2 இராணுவ நடவடிக்கையின்போது வெட்டவெளிகளிலும், உவர்நிலங்களிலும் நின்று முதன்மையாகச் சமராடினார். எதிரிக்குச் சாதகமான நிலப்பரப்பில் மனஉறுதி ஒன்றையே காப்பரணாக வைத்து ரவியவர்கள் களமாடிக் கொண்டிருக்கையில் எதிரியின் துப்பாக்கிச் சூடுபட்டு கையில் விழுப்புண்ணடைந்தார்.

1993இல் ஒப்பரேசன் யாழ் தேவி நடவடிக்கையின்போது இடம்பெற்ற டாங்கிகள் தகர்ப்பினை முன்னின்று வழிநடத்தினார். தமிழீழ விடுதலை வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த படையியல் நடவடிக்கைகளில் ஒன்றான பூநகரி படைத்தளம் மீதான தவளை நடவடிக்கையின்போது வன்னி மாவட்டப் படையணிகளின் இரண்டாவது பொறுப்பாளனாகக் கடமையாற்றினார். திறம்பட போராளிகளை வழிநடத்தி தவளை நடவடிக்கையின் வெற்றிக்கு வலுச்சேர்த்தார்.

பூநகரிப்படைத்தளத் தாக்குதலின் பின்னர் தமிழீழத் தேசியத் தலைவரவர்களால் லெப். கேணல் ரவி வன்னி மாவட்டச் சிறப்புத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இவர் சிறப்புத் தளபதியாக இருந்த வேளையில் வவுனியா புறநகர் பகுதியில் சிங்களப்படையின் பவள் கவசவாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறிப்பிடத்தக்க தாக்குதலாகும்.

எண்ணற்ற தாக்குதல்கள், எண்ணிறைந்த வெற்றிகள் என சாதனை மேல் சாதனை படைத்துக் கொண்டிருந்த சிறப்புத் தளபதி தாக்குதலொன்றிற்கான ஒத்திகை ஒன்றினை மேற்கொண்டிருந்தார். அவ்வேளையில் 17.03.1994 அன்று இடம்பெற்ற வெடிவிபத்து வன்னியின் சிறப்புத் தளபதி லெப்.கேணல் ரவியோடு, கப்டன் சேந்தனையும் வன்னித்தாயின் மடியில் உறங்க வைத்துவிட்டது. உயிர் உடலில் இருக்கும் வரையும் தாயக மீட்பு ஒன்றையே சிந்தையாகக் கொண்டு சுழன்ற மறவன் லெப்.கேணல் ரவியின் ஏழாம் நினைவில் கரைந்து, இலக்கினை நோக்கிய எம்பணி தொடர்வோம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




**04.02.01**

விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தால் சிறீலங்காவில் சுதந்திரதினம் நிம்மதியாகக் கொண்டாடப்பட்டது. சிறீலங்காவின் சுதந்திரதினம் தமிழர்களுக்கு துக்கதினமாக அனுட்டிக்குமாறு மட்டக்களப்பு சுதந்திர மாணவர் முன்னணி, யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகிய அமைப்புக்கள் தமிழ் மக்களைக் கோரின. சிங்களம் ஆக்கிரமித்து நிற்கும் தமிழர் பகுதிகள் எங்கும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன

**08.02.01**

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பாதுகாப்புச் செலவீன மசோதாவில் கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் அதிக தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 52.43 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டபோதும் செலவழிக்கப்பட்டதொகை 84.5 பில்லியன் ரூபாய்கள் ஆகும். இவ்வாண்டு 63.39 மில்லியன் ரூபாய்கள் பாதுகாப்புச் செலவீட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

**09.02.01**

விடுதலைப் புலிகளைத் தடைசெய்யக்கூடாது எனப் பிரித்தானிய அரசை வலியுறுத்தும் நோக்கில் கையொப்பம் சேகரிக்கும் இயக்கம் ஒன்றை யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் ஆரம்பித்தனர்.

யாழ் குடாநாட்டில் இராணுவக் காவலரண் ஒன்றைக் கடந்து சென்ற பதினொரு வயதுச் சிறுவன் சிங்களப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டான்.

**13.02.01**

பத்துத் தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் பிரித்தானியத் தூதுவரைச் சந்தித்து, விடுதலைப் புலிகளைத் தடைசெய்யக்கூடாது என்பதனை வலியுறுத்தினர்.

**14.02.01**

திருமலை மாவட்டத்தில் சூரன்கல் பகுதியில் விடுதலைப் புலிகளின் படையணியை வழிமறித்துத் தாக்கிய சிறீலங்காப் படைகள் மீது விடுதலைப் புலிகள் திருப்பித் தாக்கியதில் இரு படையினர் கொல்லப்பட்டு, இருவர் காயமடைந்தனர்.

விடுதலைப் புலிகளைத் தடைசெய்யக்கூடாது என வலியுறுத்தி வவுனியாவில் பொதுமக்களிடம் கையொப்பம் சேகரித்துக் கொண்டிருந்த மாணவர்கள் மூவர் சிங்களப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதோடு அவர்கள் சேகரித்து வைத்திருந்த மக்களின் கையொப்பங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

**16.02.01**

யாழ் கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலடியில் யாழ் மானிப்பாய் வீதியைச் சேர்ந்த சேதுநாதன் காண்டீபன் என்ற தமிழ் இளைஞர் சிங்களப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைப் பகுதியில் விடுதலைப் புலிகளைப் பிரித்தானிய அரசு தடைசெய்யக்கூடாது எனக்கோரி மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டுள்ளது. ஆண்கள், பெண்கள், வயோதிபர், சிறுவர் என பல்லாயிரக்கணக்கான மக்கள் பேரணியில் கலந்து கொண்டனர்

**18.02.01**

மன்னாரில் சிறீலங்கா இராணுவத்தால் கொல்லப்பட்ட மூன்று தமிழர்களது எலும்புக்கூடுகள் மன்னார் தலைமன்னார் வீதியில் நாலாம் கட்டை என்ற இடத்தில் பொதுமக்களால் மீட்கப்பட்டன.

**01.02.01**




தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என வலியுறுத்தியும், விடுதலைப் புலிகள் அமைப்பை பிரித்தானிய அரசு தடை செய்யக்கூடாது என வலியுறுத்தியும் கிழக்குப் பல்கலைக்கழக சமூகம் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை நடத்தியது.

**04.02.01**



சிறீலங்கா அரசு விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தத்தவறியமையைக் கண்டித்து ஐ.தே.க கட்சியினர் மாபெரும் பாதயாத்திரைப் போராட்டம் ஒன்றினை கண்டியில் ஆரம்பித்தனர்.

**20.02.01**



மட்டக்களப்பு மாவட்டத்தில் கிழக்குப் பல்கலைக்கழக சமூகத்தினதும் ஏனைய 50 பொதுஅமைப்புக்களினதும் பொங்குதமிழ் நிகழ்வு சிறீலங்கா அரச படைகளின் நெருக்குவாரங்களையும் மீறி எழுச்சியுடன் நடந்தது. இந்நிகழ்வில் 4000ற்கு மேற்பட்டோர் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டனர். இதன்போது தமிழராக இருந்து கொண்டு தமிழரழிப்பிற்குத் துணைபோகும் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

**21.02.01**



பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி திருமலை மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டின் பேரில் திருமலை இந்து கலாச்சார மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வு ஒன்று நடைபெற்றது. போரில் தாய் தந்தையரை இழந்த நூற்றுக்கணக்கான குழந்தைகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**22.02.01**

விடுதலைப் புலிகள் கடைப்பிடித்து வருகின்ற ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தம் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் விடுதலைப் புலிகளின் இந்த நல்லெண்ண முன்முயற்சியை ஏற்றுக்கொண்டு சர்வதேச சமூகம் சிறீலங்கா அரசை பேச்சுவார்த்தை மேசைக்கு வர வற்புறுத்தும்படியும் கோரப்பட்டுள்ளது.

**24.02.01**

பொலநறுவை மாவட்ட எல்லைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் அணியைச் சுற்றிவளைத்துத் தாக்கமுற்பட்ட சிங்களப்பொலிசார் மீது புலிகள் திருப்பித்தாக்கியதில் இரு பொலிசார் கொல்லப்பட்டனர். ஒரு கான்ஸ்டபிள் காயமடைந்தார். 30நிமிடங்கள் இம்மோதல் நீடித்தது.

**25.02.01**

அம்பாறை அக்கரைப்பற்று கண்ணகிபுரம் பகுதியில் பயணம் செய்த விடுதலைப் புலிகள் மீது சிறீலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட வலிந்து தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் திருப்பித்தாக்கியதில் ஒரு அதிரடிப்படையினன் கொல்லப்பட மேலும் சிலர் காயமடைந்தனர்.

**28.02.01**

பயங்கரவாத அமைப்புக்கள் என வகைப்படுத்தி தடைசெய்யப்படும் அமைப்புக்களின் பெயர்ப்பட்டியலை பிரித்தானிய அரசு இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. இப்பட்டியலில் விடுதலைப் புலிகளையும் பிரித்தானிய அரசு பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# "கண்கள் கூறும் வார்த்தைகள்"

www.tamilarangam.net

**காணும் கண்களே, கூறும் வார்த்தை என்ன?**




குறிப்பு:
உங்கள்
ஆக்கங்களை
பத்து வரிகளுக்கு
மேற்படாமல்
எழுதவும்.

தோழி! வலிக்கிறதா பொறுத்துக் கொள்
விடுதலையின் தூரம் இன்னும்
கொஞ்சம்தான்
காட்டாறு வெள்ளத்தையும் கடந்து
நாம் கரையேறுவதை
அதோ சிங்களச் செருக்கர்கள்
பார்த்துவிட்டார்கள்
கவலைப்படாதே
பத்திரமான என் தோள்களில் ஒட்டிக்கொள்
பழிவாங்கும் நேரம் வந்துவிட்டது
தோழி இப்போது கண்விழித்துப்பார்
விடுதலையின் வெளிச்சம்
நம் காலடியில்.

கோ.பாலமுருகன்.
விழுப்புரம்
தமிழ்நாடு

என் களத்தோழி முதுகினிலே- அவள்
விழுப்புண் வேதனை முகத்தினிலே
தலைவன் பாதையில் நடக்கையிலே- வரும்
தடைகளைத் தாண்டிக் கடக்கையிலே
எது வந்தாலும் ஆயத்தமே- எங்கள்
இன்னுயிர்கூட ஆயுதமே
இலட்சியம் தோளில் பாரமில்லை-இனம்
இருளினை நீங்கிடத் தூரமில்லை
என் தமிழுறவே சிலிர்த்தாலும்-நீ
ஏளனம் செய்தாலும் சிரித்தாலும்
மண்ணை மக்களை சுவாசிக்கிறேன்- நான்
மரணம் வரினும் நேசிக்கிறேன்.

ஞானி
நூறன்பேக்- ஜேர்மனி

இனிய கனவுகள் சுமக்கும் இளமைதனில்
தமிழீழம் சமந்தாள் இதயத்தில்
மலர்மாலைகள் சுமக்கும் பருவத்தில்
போர்ப் படையில் சுமந்தாள் வேங்கைகளை
பகைவனை வென்ற போரில்
வெற்றிப்பதக்கம் சுமந்த வேங்கையவள்
தமிழ் மானம் காக்கும் ஈழத்தில்
வீரத்தாய் சுமப்பாள் பெண் விடுதலைகள்.

செ.ஆனந்தன்
பெரடேசியா- டென்மார்க்

உன் குடும்பச் சுமையிற்கே
பெரிதாய் அலறும் மனிதமே!
சுதந்திர வேட்கையில் இறுகிய மனமும்
உடலும்இடறும் இடரிலும்
தோழியைச் சுமப்பது பார்!
அடுப்பெரிப்போர் என ஒரு காலத்தில்
ஒதுக்கியே வைக்கப்பட்டவர்
குதறிச் சிதைக்கப்படும் தேசத்தின்
மீட்பிற்காய் களத்திடை நிற்பதைப் பாராய்.

ந.கேமராஜ்
இலண்டன்- ஐக்கிய இராச்சியம்

ஒளிர்மிக்க பசுமை பொங்கிவர
இளமைக் காலமதில் இனிமை பல
பாசங்கள் பலவாறாய்த் தவழ்ந்த போதிலும்
கொடும்பகை ஒழித்து
சுகந்தமான தமிழீழம்
விலையான மாவீரர்கனவு
நனவாக இலட்சிய நாயகிகளாகும்
பெண்புலிகள்.

மதுரா நாகராஜா
கொம்பிளா வீல்- பிரான்ஸ்

வீரப்போர்க்களத்தில் காயப்பட்ட தன்
சோதரப் போராளியை தன் தோள் மீது
தாங்கிய வண்ணம் தலை நிமிர்ந்து
அவள் காயத்திற்கு மருந்திட
தாமதிக்காமல் வீறு நடைபோட்டு
வரம்பு வயல் குளம் தாண்டி வழிநடை
புயல் புலி வீராங்கனையைப் பாரீர்
அவள் விழியிலோ வீரத்தின் சாயல்
பார்வையோ பகைவன் இன்னும்
எம் தாய்நிலத்தில் என்ற கோபக்கனலுடன்
சகபோராளியின் காயத்திற்கு
மருந்திட பாசறை நோக்கி- சிறிதும்
தாமதிக்காமல் வீறுநடை போட்டுச் செல்லும்
இரும்பு மனங்கொண்ட இளைய வேங்கை.

நயினை பாரதி
பேர்ண்-சுவிஸ்


## 2001 ஜனவரிக்கான...





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்